விலை: 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com, valampurii@sltnet.lk

சங்கு 19 வள்ளுவர் ஆண்டு 2049 ஆனி 12 செவ்வாய்க்கிழமை (26.06.2018) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 189






# 6வயது பாடசாலை சிறுமி கழுத்து நெரித்து படுகொலை

## வட்டுக்கோட்டை சுழிபுரத்தில் கோரம்

**(யாழ்ப்பாணம்) வட்டுக்கோட்டை சுழிபுரம் காட்டுப்புலம் பகுதியில் ஆறு வயது பாடசாலைச் சிறுமி ஒருவர் கழுத்து நெரித்து படுகொலை செய்யப்பட்டுள்ளார். படுகொலை செய்யப்பட்ட சிறுமி நெற்றி மற்றும் கழுத்தில் காயங்களுடன் கிணற்றிலிருந்து நேற்று மாலை சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.**



சுழிபுரம் - காட்டுப்புலம் அ.த.க பாடசாலையில் தரம் ஒன்றில் கல்வி கற்கும் மாணவியான சிவனேஸ்வரன் றெஜினா (வயது-06) என்ற சிறுமியே மேற்படி கொலை செய்யப்பட்ட நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். குறித்த சம்பவம் தொடர்பாக தெரியவரு 24

## கிளைமோர் மீட்பு மேலும் ஒருவர் கைது

கைதுகள் தொடர வாய்ப்பு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருந்த கிளைமோர் மீட்பு மற்றும் புலிக்கொடி விவகாரத்துடன் தொடர்புடைய 24

சிறுத்தை கொலை

## மேலும் நால்வர் பொலிஸாரால் கைது

(கிளிநொச்சி)

கிளிநொச்சி, அம்பாள்குளம் பகுதியில் சிறுத்தை அடித்துக் கொல்லப்பட்டமை தொடர்பில் 24

சிறுமி படுகொலை

## 4பேர் விசாரணைக்கு பொலிஸாரால் அழைப்பு

(யாழ்ப்பாணம்)

சுழிபுரம் காட்டுப்புலம் பகுதியில் சிறுமி சடலமாக மீட்கப்பட்ட சம்பவம் தொடர்பாக சந்தேகத்தின் பேரில் 4 பேர் விசாரணைக்காக பொலிஸாரால் அழைத்து 24

ராக்கெட் லோஞ்சர் உட்பட பெருமளவான

## புலிகளின் ஆயுதங்கள் இராமேஸ்வரத்தில் மீட்பு

(இராமேஸ்வரம்)

தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பின் உறுப்பினர் பயன்படுத்தியதாக சந்தேகிக்கப்படும் பெருந்தொகையான ஆயுதங்கள் மற்றும் வெடிபொருட்கள் தமிழ்நாட்டின் இராமேஸ்வரம் பகுதியில் நேற்று மாலை மீட்கப்பட்டுள்ளது. 24



## பாவனையின்றி காணப்படும் பொதுமக்களின் காணிகள்

மாநகரசபையால் கையகப்படுத்த நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகர சபைக்குட்பட்ட பிரதேசங்களில் பொது மக்கள் பாவனையின்றி கவனிப்பாரற்று காணப்படுகின்ற காணிகளை மாநகர சபை தற்காலிகமாக கையகப்படுத்த நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

மாநகர மக்களின் பாதுகாப்பையும் மாநகரத்தின் தூய்மையையும் கருத்திற்கொண்டே மேற்படி நடவடிக்கையை மாநகர சபை எடுப்பதென நேற்றைய அமர்வில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

யாழ்.மாநகர சபையின் அமர்வு மாநகர மாநாட்டு மண்டபத்தில் மாநகர முதல்வர் தலை 24

மோட்டார் சைக்கிளுடன்

## டிப்பர் விபத்து; இளைஞன் பலி



(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு ஒட்டுசு 23

## தேர்தலில் போட்டியிட மகிந்த அனுமதி வழங்கவில்லை!

கோத்தபாய தெரிவிப்பு



(கொழும்பு)

எதிர்வரும் ஜனாதிபதி 24

## உழவு இயந்திரத்தின் சில்லினுள் அகப்பட்டு மாணவன் உயிரிழப்பு

பூநகரி பகுதியில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

காவடி எடுத்துச்சென்ற உழவு இயந்திரத்தின் சில்லினுள் அகப்பட்டு நசியுண்ட மாணவன் ஒருவன் பரிதாபமாக உயிரிழந்த சம்பவம் ஒன்று நேற்று பூநகரி பகுதியில் இடம்பெற்றுள்ளது.

பூநகரி ஆலங்கேணியை சேர்ந்த சச்சிதானந்தன் பிரியமுதன் (வயது18) என்ற மாணவனே மேற்படி உயிரிழந்தவராவார்.

பூநகரியில் இருந்து ஆலங்கேணி கட்டுக்கரை பிள்ளையார் கோவிலுக்கு நேற்று அதிகாலை 2 மணிக்கு அடியார் ஒருவர் பறவை காவடி எடுத்து வந்துள்ளார். குறித்த 24

## அரசுக்கு அழுத்தம் கொடுக்க பாரிய ஆர்ப்பாட்டத்திற்கு தயார்

கூட்டு எதிரணியின் அறிவிப்பு

(கொழும்பு)

மாகாண சபை தேர்தலை நடத்துமாறு கோரி அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுக்கும் வகையில் எதிர்வரும் ஜூலை மாத நடுப்பகுதியில் நாடு தழுவிய ரீதியில் கூட்டு எதிரணியினர் பாரிய ஆர்ப்பாட்டமொன்றை நடத்துவதற்கு தீர்மானித்துள்ளதாக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தலைவர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

பத்தரமுல்லையில் நேற்று இடம்பெற்ற ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் 24

## தீர்வு கிடைக்கும் வரை பணிப்புறக்கணிப்பு தொடரும்

இன்று தீர்வு வழங்கப்படும் - தபால் அமைச்சர்

(கொழும்பு)

தபால் அமைச்சின் அதிகாரிகளுடன் நேற்று திங்கட்கிழமை நடத்திய பேச்சுக்களிலும் தீர்வு கிடைக்காததால் தபால் திணைக்கள ஊழியர்களின் பணிப்புறக்கணிப்பு போராட்டம் தொடரும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், தமது போராட்டத்தை விரிவுபடுத்தி சாகும்வரையான உணவு ஒறுப்பு போராட்டமாக முன்னெடுக்க உள்ளதாக தபால் ஊழியர்களின் ஒன்றிணைந்த தொழிற்சங்கத்தின் ஒருங்கிணைப்பாளர் சிந்தக பண்டார நேற்றுத் தெரிவித்தார். 24

## சர்வதேச குற்றவியல் தீர்மானத்தை ஐ.நாவில் நிறைவேற்ற வேண்டும்

யாழ்.மாநகர சபையில் ஏகமனதாக தீர்மானம் நிறைவேற்றம்

(யாழ்ப்பாணம்)

இலங்கை விவகாரம் தொடர்பில் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கு நியாயாதிக்கத்தை அளிக்கும் தீர்மானத்தை அல்லது விசேட சர்வதேச குற்றவியல் தீர்ப்பாயத்தை உருவாக்கும் தீர்மானத்தை ஐ.நா பாதுகாப்புச் சபை நிறைவேற்ற வேண்டுமெனக் கோரி யாழ் மாநகர சபையில் ஏகமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

யாழ்.மாநகர சபை 23

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

**மஹஜன சம்பத**
திகதி 2018/06/25
சீட்டிழுப்பு இலக்கம் 3688
ஆங்கில எழுத்து Q வெல்லப்பட்ட இலக்கங்கள் 3 3 2 7 7 7

**மெகா பவர்**
திகதி 244
சீட்டிழுப்பு இலக்கம் 25/06/2018
வெற்றி எழுத்து சுப்பர் இலக்க Z 19 வெற்றி இலக்கங்கள் 08 25 34 46

**கொவிசெத**
திகதி 2018.06.25
சீட்டிழுப்பு இலக்கம் 1801
ஆங்கில எழுத்து S வெல்லப்பட்ட இலக்கங்கள் 07 17 28 76

**சுபிரி வாசனா**
திகதி 2018/06/25
சீட்டிழுப்பு இலக்கம் 1337
எழுத்து 08 வெற்றி இலக்கம் 02 10 28 62 36 61

## பல்கலை மாணவர்கள் படுகொலை
# இரண்டு சந்தேக நபர்களுக்கு எதிராக பிராதுப்பத்திரம் தாக்கல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பான வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்ட 5 பொலிஸ் உத்தியோகத்தர்களில் மூவர் விடுவிக்கப்பட்டுள்ளதுடன் ஏனைய 2 சந்தேகநபர்களுக்கு எதிராக குற்றப்புலனாய்வு பிரிவினரால் கொலை குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டு பிராதுப் பத்திரம் யாழ்.நீதவான் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இன்று இந்த வழக்கு யாழ்.நீதவான் நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது.

யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர்கள் விஜயகுமார் சுலக்சன், நடராஜா கஜன் ஆகியோர் கொக்குவில் குளப்பிட்டி பகுதியில் 2016ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 20ஆம் திகதி நள்ளிரவு பொலிஸாரின் துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்டிருந்தனர்.

குற்றப் புலனாய்வுப் பிரிவினரின் விசாரணையின் அடிப்படையில் 5 பொலிஸார் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டனர். 5 பொலிஸ் உத்தியோகத்தர்களும் 11 மாதங்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்ட நிலையில் யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றால் கடந்த செப்ரெம்பர் மாதம் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

வழக்கில் சந்தேகநபர்களாக குறிப்பிடப்பட்டிருந்த 5 சந்தேகநபர்களில் இரண்டாவது சந்தேகநபர் எக்கநாயக்க முதியான்சலாகே ஜயவர்த்தன, நான்காவது சந்தேகநபர் தங்கராஜன் லங்காமனன், ஐந்தாவது சந்தேகநபர் கமல விதானகே நவரத்ன பண்டார ஆகியோரை வழக்கிலிருந்து விடுவிப்பதாக சட்டமா அதிபரின் அறிவுறுத்தலின் அடிப்படையில் குற்றப் புலனாய்வுப் பிரிவின் யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்று அறிக்கையிட்டுள்ளனர்.

மேலும் முதலாவது சந்தேகநபர் சரத் பண்டார திசாநாயக்க மற்றும் மூன்றாவது சந்தேகநபர் சமர ஆராய்சிலாகே சந்தன குமார சமர ஆராச்சி ஆகிய இருவருக்கும் எதிராக இலங்கை குற்றவியல் நடைமுறை சட்டக்கோவையின் 296ஆம் பிரிவின் கீழான கொலைக் குற்றச்சாட்டின் கீழ் பிராதுப் பத்திரத்தை குற்றப் புலனாய்வுப் பிரிவினர் நீதிமன்றில் தாக்கல் செய்துள்ளனர்

சம்பவம் தொடர்பான சுருக்கமுறையற்ற விசாரணைகள் ஆரம்பிக்கப்படாத நிலையில் வழக்கு இன்று செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது. (ம-9)

## கொமர்சல் வங்கியின் பரிசளிப்பு விழா இன்று

(யாழ்ப்பாணம்)

கொமர்சல் வங்கி அச்சுவேலிக் கிளையின் அருணலு பரிசளிப்பு விழா இன்று செவ்வாய்க்கிழமை மாலை 4 மணிக்கு வங்கிக் கிளையின் முதலாவது மாடியில் நடைபெறவுள்ளது.

2017ஆம் ஆண்டு நடைபெற்ற புலமைப்பரீட்சையில் சித்தியெய்திய அருணலு சிறுவர் சேமிப்புக் கணக்கு வைத்திருக்கும் பாடசாலை மட்டத்தில் முதல் மூன்று இடங்களை பெற்ற மாணவர்களுக்கு சான்றிதழ்களும் பணம் வைப்பிலிடப்படுவதுடன் பாடசாலை உபகரணங்களும் வழங்கி கௌரவிக்கப்படவுள்ளனர்.

அச்சுவேலிக் கிளையின் முகாமையாளர் சஞ்சீவ் தலைமையில் நடைபெறும் இந்த பரிசளிப்பு நிகழ்வில் பிரதம விருந்தினராக கோப்பாய் கல்விக் கோட்டத்தின் கல்விப் பணிப்பாளர் சிவநேசன் கலந்து கொள்கிறார். (ம-9)


Quality Royal Guaranteed
நல் ஆரோக்கியத்திற்கு
"றோயல் சுத்தமான தேன்"
உங்கள் நலன் ஆரோக்கியம் கருதி "ஆய்வுகூடத்தில்" தரம் பரிசோதிக்கப்பட்டு பொதியிடப்படுகின்றது.
**Packed By: Royal Industries** R
**Marketed By:** சிவா நறுமணப் பூங்கா
இல.288,ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.இல: 021 222 2567

குறிப்பு: யாழ். மாவட்டத்தில் உள்ள அனைத்து பாமசிகளிலும் பலசரக்கு கடைகளிலும் பெற்றுக் கொள்ளலாம்.
(C-2687)

**கார் வாடகைக்கு**
திருமணக்கார் யாழ்ப்பாணத்திற்குள் 8000/= மட்டும். நாள் வாடகைக் கார் 4000/= மட்டும் (கைபிரிட்). மாதாந்த வாடகைக்கு விசேட சலுகை உண்டு.
**0778331414**
(4681)

**விற்பனையாளர் தேவை**
யாழ்.நகரில் இயங்கும் புடைவை நிறுவனத்திற்கு புடைவை வியாபாரம் அனுபவம் உள்ள விற்பனையாளர் தேவை. (பழக ஆர்வம் உள்ளவர்களும் விரும்பத்தக்கது)
**சிவகணேசன் ரெக்ஸ்**
41, பெரிய கடை, யாழ்ப்பாணம்
(4686)

**வலம்புரி**
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532


# துயர் பகிர்கின்றோம்



**சாரதாதேவி நவரட்ணசாமி**

எமது பாடசாலையின் ஆசிரியர் **பூரணி சியாமளன்** அவர்களின் அன்புத் தாயார் சாரதாதேவி நவரட்ணசாமி அவர்கள் இறைபதம் அடைந்த செய்தியை அறிந்து அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆன்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**ஆசிரியர் கழகம்**
**யா/யாழ் இந்து மகளிர் கல்லூரி**

(4679)

# கண்ணீர் அஞ்சலி

அமரர்
**செல்லத்துரை சோதிப்பெருமாள்**



எமது பாடசாலை பிரதி அதிபர் திரு.இ.தபானந்தன் அவர்களின் அன்பு மாமனார் 22.06.2018 அன்று காலமான செய்தி அறிந்து ஆழ்ந்த துயர் அடைகின்றோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் நலன்புரிக் கழகம்
யா/கொக்குவில் ஸ்ரீ இராமகிருஷ்ண வித்தியாசாலை

(4682)

# 31ஆம் நாள் நினைவுதின அழைப்பும் நன்றி நவிலலும்



கடந்த 28.05.2018 திங்கட்கிழமை அன்று இறைபதம் அடைந்த எனது சகோதரன்

## அமரர் முத்துக்குமாரு யோகராசா (வைரவன்)

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (27.06.2018) புதன்கிழமை அன்னாரின் இல்லத்தில் முற்பகல் 11.30 மணியளவில் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்களும் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

குறிப்பு:இவ் அறிவித்தலை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

இறுதிச் சடங்கில் கலந்து கொண்டவர்களுக்கும் மற்றும் அனுதாபச் செய்திகளை பல வழிகளிலும் பரிமாறிய அனைத்து உள்ளங்களுக்கும் நன்றி அறிவித்தலைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**மாவடி ஒழுங்கை,**
**ஓடக்கரை, பருத்தித்துறை.**
**தொ.பே.இல:-0763917303**

**சகோதரி**
**புனிதநதாஸ் யோகேஸ்வரி**

(C-2974)

# ஈரவிழிகளுடன் ஈராண்டு நினைவுகள்

## அமரர் சங்கரப்பிள்ளை சுப்பிரமணியம்



பிறப்பு 1934.01.10
இறப்பு 2016.06.18
திதி:சதுர்த்தசி 2018.06.26

ஈராண்டு சென்றதப்பா ஈரவிழிகள் காயவில்லை
அன்பு கொண்டோம் ஆசை கொண்டோம்
ஆறவில்லை எம் துன்பமப்பா
பிரியமுள்ள பிரேமாக்குட்டி-உமை
பிரியமுடன் அழைத்துக் கொண்டாளப்பா
இருவரதும் ஆத்மா சாந்தி பெற்றிடவே
இருகரம் கூப்பித் துதிக்கின்றோம்.

**103/23, முருகமூர்த்தி வீதி,**
**வண்ணார்பண்ணை,**
**யாழ்ப்பாணம்.**

-குடும்பத்தினர்

(4656)

# தமிழ் மக்களின் உரிமைகளுக்காக தமிழ்த் தலைவர்கள் ஒன்றிணைவு

## இராஜாங்க அமைச்சர் இராதா. பாராட்டு



(அம்பாறை)

தமிழ் மக்களின் உரிமைகளுக்காக எதிர்க்கட்சி தலைவர் இரா. சம்பந்தனும், வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனும் ஒன்றிணைவதாக அறிவித்துள்ளமை பாராட்டத்தக்க விடயமாகும் என கல்வி இராஜாங்க அமைச்சர் வே.இராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

அருகிலுள்ள பாடசாலை சிறந்த பாடசாலை என்ற வேலைத்திட்டத்திற்கமைய அம்பாறை, அக்கரைப்பற்று முஸ்லிம் மத்திய கல்லூரியின் வகுப்பறைக் கட்டடத்தை நேற்று திங்கட்கிழமை திறந்து வைத்து உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், "சிறுபான்மை மக்கள் ஒன்றிணைய வேண்டும். சிறுபான்மை மக்கள் இணைந்தால் தான் அடுத்த ஜனாதிபதி தேர்தலில் ஜனாதிபதியை தீர்மானிக்கக் கூடிய பொறுப்பு சிறுபான்மை மக்களாகிய எங்களிடம் இருக்கும் என்பதை உணர்ந்து செயற்பட வேண்டும்.

அந்த பொறுப்பு வடக்கு, கிழக்கு மற்றும் மலையகத்தில் உள்ள அனைத்து தமிழ் மக்களுக்கும் உண்டு. அதற்காக அனைவரும் ஒன்றிணைந்து செயற்படக் கூடிய ஒரு சந்தர்ப்பம் உருவாகியுள்ளது. இந்த சந்தர்ப்பத்தை நல்ல முறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டியது காலத்தினுடைய கட்டாயம்.

எதிர்வரும் காலங்களில் நடைபெறவிருக்கும் தேர்தல்களில் இந்த சிறுபான்மை இனங்களின் ஒற்றுமை, ஆட்சியை தீர்மானிக்கக் கூடிய சக்தியாக மாற வேண்டும்.

பெரும்பான்மை கட்சிகள் ஆட்சியை அமைப்பதற்கு சிறுபான்மை மக்களின் ஆதரவு தேவை என்பதை நாங்கள் உணர்த்த வேண்டும்" என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# நாட்டுக்கு பொருத்தமற்ற அரசை வீழ்த்த யார் கைகோர்த்தாலும் வரவேற்போம்

## கூட்டு எதிரணி எம்.பி. பந்துல தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டுக்கும் நாட்டு மக்களுக்கும் பொருத்தமற்ற இந்த நல்லாட்சி அரசாங்கத்தை வீழ்த்துவதற்கு பொது எதிரணியுடன் யார் கைகோர்த்தாலும் அதனை வரவேற்பதாக பாராளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.



ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியிலிருந்து விலகிய 16 உறுப்பினர்கள் பொதுஜன பெரமுனவுடன் இணைவது தொடர்பாக கூட்டு எதிர்க்கட்சியின் நிலைப்பாடு பற்றி விளக்கமளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

அரசாங்கத்திலிருந்து விலகிய சுதந்திர கட்சியின் 16 உறுப்பினர்கள் பொதுஜன பெரமுனவுடன் இணைவதை பொது எதிரணி வரவேற்கின்றது. நாட்டுக்கும் நாட்டு மக்களுக்கும் பொருத்தமற்ற இந் நல்லாட்சி அரசாங்கத்தை வீழ்த்துவதற்கு பொது எதிரணியுடன் யார் கைகோர்த்தாலும் அதனை வரவேற்போம்.

தேசிய அரசாங்கத்தை ஆட்சியிலிருந்து நீக்குவதாயின் பாராளுமன்றத்தில் தேசிய அரசாங்கத்தின் மூன்றிலிரண்டு பெரும்பான்மையை இல்லாமல் செய்ய வேண்டும். எனினும் கூட்டு எதிர்க்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையினால் மாத்திரம் அதனை மேற்கொள்ள முடியாது.

ஆகவே கூட்டு எதிர்க்கட்சியின் 54 உறுப்பினர்களும் அரசாங்கத்திலிருந்து விலகிய 16 உறுப்பினர்களும் மற்றும் தேசிய அரசாங்கத்தை எதிர்க்கும் ஏனைய உறுப்பினர்களையும் இணைத்துக் கொண்டு எம்மால் இதனை மேற்கொள்ள முடியும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# இரண்டு மாதத்திற்குள் அமெ.பிரஜாவுரிமையை நீக்கிக்கொள்ள முடியும்

## கோத்தபாய கூறுகிறார்

(கொழும்பு)



இன்னும் இரண்டு மூன்று மாத காலத்திற்குள் தனது அமெரிக்க பிரஜாவுரிமையை நீக்கிக் கொள்ள முடியும் என முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

டீ.ஏ.ராஜபக்ஷ நூதனசாலை நிர்மாணிப்பின் போது இடம்பெற்றதாக கூறப்படும் பண மோசடி தொடர்பில் வாக்குமூலம் ஒன்றை வழங்குவதற்காக நேற்று நிதி மோசடி விசாரணைப் பிரிவில் ஆஜராகியதை அடுத்து ஊடகவியலாளர்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதேவேளை கடந்த சில தினங்களுக்கு முன்னர் அஸ்கிரிய பீடத்தின் துணை தலைவர் வெடருவே உபாலி தேரர் தனக்கு தனிப்பட்ட முறையில் தெரிவித்த கருத்தினை முன்வைத்து தெரிவிக்கப்படும் கூற்றுக்கள் சரியானதல்ல எனவும் முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோத்தாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# ஐ.தே.கவை வீழ்த்த வியூகம் வகுப்போம்

## சந்திம வீரக்கொடி தெரிவிப்பு

(கொழும்பு)

எதிர்வரும் மாகாண சபை தேர்தலின் போது ஐக்கிய தேசியக் கட்சியை வீழ்த்துவதற்கான அனைத்து விதமான நடவடிக்கைகளையும் மேற்கொள்வோம் என ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சந்திம வீரக்கொடி தெரிவித்தார்.



தேசிய அரசாங்கத்திலிருந்து விலகிய சுதந்திரக் கட்சியின் 16 பேர் கொண்ட குழுவினரின் எதிர்கால அரசியல் நடவடிக்கை தொடர்பாக விளக்கமளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,


ஐக்கிய தேசியக் கட்சியின் ஆதிக்கத்தை எதிர்த்தே நாம் பிரதமருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவாக வாக்களித்தோம். அந்த வகையில் எதிர்வரும் மாகாண சபைகளுக்கான தேர்தலின் போது ஐ.தே.கவை தோல்வியடையச் செய்வதற்கான அனைத்துவிதமான நடவடிக்கைகளையும் முன்னெடுப்போம்.

இந் நிலையில் எதிர்வரும் மாகாணசபை தேர்தலின் போது தேசிய அரசாங்கத்திலிருந்து ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் 2.3 பேரும் விலகி வருவார்களானால் எதிர்காலத்தில் சுதந்திரக் கட்சியை பலப்படுத்தி மக்களின் தேவைகளை புரிந்து செயற்படும் செயற்றிறன் மிக்க கட்சியாக மாற்றியமைப்பதற்கான பணிகளை மேற்கொள்வோம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# சர்வாதிகார ஆட்சிக்கு முயற்சிக்காது மாகாண சபைத் தேர்தலை அரசு உடன் நடத்த வேண்டும்

## ஷெயான் சோமசிங்க வலியுறுத்து

(கொழும்பு)



அரசு விரைவாக மாகாண சபை தேர்தலை நடத்த வேண்டும் என ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் ஷெயான் சோமசிங்க தெரிவித்துள்ளார்.

அநுராதபுரம் பகுதியில் நேற்று இடம்பெற்ற கூட்டு எதிர்க்கட்சியின் ஊடகவியலாளர் சந்திப்பொன்றின் போது அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தேர்தலை நடத்தாமல் அரசு தொடர்ந்தும் சர்வாதிகார ஆட்சியை முன்னெடுக்க திட்டங்களை மேற்கொண்டு வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை அரசாங்கத்தில் இருந்து விலகிய ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சியின் 16 உறுப்பினர்களும் கூட்டு எதிர்க்கட்சிக்கு வருவதில் எவ்வித பிரச்சினையும் இல்லை எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# நெல்லியடி வாணிபர் கழகம்

**நெல்லியடி வாணிபர் கழக அனுசரணையில் 25 வருடங்களுக்கு மேற்பட்ட காலப்பகுதியில் வர்த்தக சேவையைப் பூர்த்தி செய்தவர்களையும் அவர்களுடைய சமூக பணிகளையும் பாராட்டும்**

# கௌரவிப்பு விழா


**இடம்** : யாழ்பீச் ஹோட்டல்
விக்னேஸ்வரா மண்டபம்
யாழ் வீதி, கரணவாய், கரவெட்டி.

**காலம்** : இன்று (26.06.2018) செவ்வாய்க்கிழமை

**நேரம்** : பி.ப 5.00 மணி

**தலைமை**
இ.சுரேரஞ்சன்
(நெல்லியடி வாணிபர் கழகம்)

**பிரதம விருந்தினர்**
**கௌரவ க.வி.விக்னேஸ்வரன்**
(வடக்கு மாகாண முதலமைச்சர்)




**கௌரவ விருந்தினர்கள்**
திரு. E. தயாரூபன்
(பிரதேச செயலர், கரவெட்டி)
திரு. T. ஐங்கரன்
(தவிசாளர், வட.தெ.மே.பிரதேச சபை)
திரு. Dr.S. சுதோகுமார்
(சுகாதார வைத்திய அதிகாரி, கரவெட்டி)
திரு. N. ராஜீவன்
(சட்டத்தரணி)
திரு. V.K. பிரியந்த
(உதவி பொலிஸ் அத்தியட்சகர் (2), காங்கேசன்துறை
திரு. P.L. கீர்த்திசிங்க
(பொறுப்பதிகாரி பொலிஸ் நிலையம், நெல்லியடி
திரு. S. பொன்னம்பலம்
(தலைவர், கரவெட்டி அபிவிருத்தி ஒன்றியம்)

*அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்*

**நெல்லியடி வாணிபர் கழகம்**


**கௌரவ சி.அகிலதாஸ்**
(வடக்கு மாகாண சபை உறுப்பினர், J.P)
(27 வருடங்கள், நெல்லை சில்க்)


**மு.சுந்தரலிங்கம்**
(அகில இலங்கை சமாதான நீதவான்)
(31 வருடங்கள், சதா பொன்ஸ்)


**யோ.பிரான்சிஸ் பிரபாகரன்**
(மத்தியஸ்த சபை உறுப்பினர்)
(30 வருடங்கள், நெல்லியடி சுப்பர் மார்க்கட்)


அமரர் **ச.இரத்தினகோபால்**
(ஜெகா மோட்டர்ஸ்)
(34 வருடங்கள்)


**ஐ.சிவநாதன்**
(மருதம் இரும்பகம்)
(25 வருடங்கள்)


**செ.பாலசிங்கம்**
(ஸ்ரீ முருகன் மெடிக்கல்ஸ்)
(33 வருடங்கள்)


**சி.கார்த்திகேசு**
(சிவலிங்கம் வெற்றிலைக் கடை)
(33 வருடங்கள்)



**இ.சுந்தரலிங்கம்**
(ரட்ணம்ஸ் ரெக்ஸ் ரைஸ்)
(25 வருடங்கள்)


**மா.கதிரமலை**
(மலர்ஸ் பாதணியகம்)
(41 வருடங்கள்)


**மு.இராஜகோபால்**
(ஜமுனா ஸ்ரோர்ஸ்)
(33 வருடங்கள்)


**த.இரவீந்திரன்**
(தீசா கலஞ்சியம்)
(59 வருடங்கள்)


**மா.அழகேசன்**
(அழகர் பல்பொருள் வாணிபம்)
(58 வருடங்கள்)



**க.அனுராசா**
(உதயன் பலசரக்கு மளிகை)
(37 வருடங்கள்)


**சி.சிவம்**
(சிதம்பரப்பிள்ளை பொத்தகசோலை)
(77 வருடங்கள்)


**சி.கணேசலிங்கம்**
(தமிழ்ப் பூங்கா அச்சகம்)
(55 வருடங்கள்)


**பொ.ஏகாம்பரராசா**
(விஜயன் கபே)
(28 வருடங்கள்)


**செ.ராசேந்திரம்**
(NSR தொழிலகம்)
(35 வருடங்கள்)


**வ.செல்வவினாயகம்**
(வினாயகம் சைக்கிள் வேக்ஸ்)
(31 வருடங்கள்)


**நா.தெய்வேந்திரன்**
(இந்திரா கபே)
(56 வருடங்கள்)


**சி.சரவணப்பெருமாள்**
(புதிய அம்பிகா)
(38 வருடங்கள்)


**யோ.அ.சே.விஜயன்**
(ஜெயன் இரும்பகம்)
(36 வருடங்கள்)


**ஐ.தேவராஜா**
(நெல்லியடி றைஸ் ஸ்ரோர்ஸ்)
(36 வருடங்கள்)


**க.நடராசா**
(ஹப்பி ரெக்ஸ்ரைல்ஸ்)
(34 வருடங்கள்)


**க.பேரானந்தன்**
(கௌரி மிதிவண்டி வாணிபம்)
(29 வருடங்கள்)


**சூ.அல்பின்**
(டினா ஓடியோ வீடியோ)
(28 வருடங்கள்)


**க.இரவிச்சந்திரன்**
(சாயி கிருஷ்ணா ஸ்ரோர்ஸ்)
(30 வருடங்கள்)


**மு.ஜெகநீதன்**
(சந்துஜன் அழகுச்சோலை)
(27 வருடங்கள்)


**ச.மகேந்திரன்**
(சரவணா மகாலட்சுமி தங்கமாயம்)
(25 வருடங்கள்)


**ஐ.யோகநாதன்**
(சுபாஸ் பேக்கரி)
(44 வருடங்கள்)


**சு.சண்முகசுந்தரம்**
(செல்லமுத்தூஸ்)
(48 வருடங்கள்)


**ஆ.பாலகிருஷ்ணன்**
(கலைவாணி கண்ணாடிக் களஞ்சியம்)
(27 வருடங்கள்)


**ப.தயாபரன்**
(சிவசக்தி இரும்பகம்)
(61 வருடங்கள்)


**ப.மகேஸ்வரி**
(ஒப்பேட்டி மோட்டர்ஸ்)
(37 வருடங்கள்)


**செ.சிவச்சந்திரன்**
(செல்லத்துரை சைக்கிள் வாணிபம்)
(59 வருடங்கள்)


**சி.சிவப்பிரகாசம்**
(அம்சன் ஒளியகம்)
(34 வருடங்கள்)

*வாழ்த்துவோர்:-*

(C-2979)

| | | | | | |
|---|---|---|---|---|---|
| இலங்கை வங்கி<br>நெல்லியடி | மக்கள் வங்கி<br>நெல்லியடி | கொமர்ஷல் வங்கி<br>நெல்லியடி | தேசிய சேமிப்பு வங்கி<br>நெல்லியடி | நேசன் ரஸ்ட் வங்கி<br>நெல்லியடி | தேசிய அபிவிருத்தி வங்கி<br>நெல்லியடி |
| பான் ஏசியா வங்கி<br>நெல்லியடி | சம்பத் வங்கி<br>நெல்லியடி | செலான் வங்கி<br>நெல்லியடி | DFCC வங்கி<br>நெல்லியடி | கொமர்ஷல் கிரடிற்<br>நெல்லியடி | ஹட்டன் நஷனல் வங்கி<br>நெல்லியடி |

# பகிரங்க ஏல விற்பனை

கமக்கார அமைப்புக்களால் பிடிக்கப்பட்டு உரிமை கோரப்படாத சு.வு குறியுடைய செங்காறி நிறப் பசு, இ7109 1197 0208 காது தோடு குறியுடைய சிவப்பு நிறப் பசு ஆகியன 2018.07.02 ஆம் திகதி முற்பகல் 10.00 மணிக்கு உடையார்கட்டு கமநல சேவை நிலையத்தில் ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளது. இம் மாட்டினை ஏலத்தில் வாங்குபவர் அன்றைய தினமே அதற்குரிய பணத்தினை முழுமையாக காசாக கமநல சேவைக் குழுவிற்கு செலுத்தி பற்றுச்சீட்டைப் பெற்றுச் செல்லுதல் வேண்டும்.

(சி-2978)

நிறைவேற்றுச் செயலாளர்,
கமநல சேவைக்குழு, உடையார்கட்டு.

# அவசர கலந்துரையாடல்

29.07.2018 அன்று யாழ். பல்கலையில் நடைபெறவுள்ள வெளிவாரி பட்டதாரிகளுக்கான பட்டச்சான்றிதழ் வழங்கும் நிகழ்வு தொடர்பான அவசர கலந்துரையாடல்.

**காலம்: 27.06.2018**
**நேரம்: 10.30 மணி (மு.ப)**
**இடம்: புதிய உயர்கல்லூரி மண்டபம்.**

(சி-2975)

**வெளிவாரி பட்டதாரி மாணவர் ஒன்றியம்,**
**யாழ். பல்கலைக்கழகம்.**

## துருக்கி—ஜோர்ஜிய
# எல்லையைக் கடக்க முயன்ற எட்டு இலங்கையர்கள் கைது

(ஜோர்ஜியா)

ஜோர்ஜியாவிலிருந்து துருக்கியினுள் நுழைய முற்பட்ட 8 இலங்கையர்களை எல்லைப் பாதுகாப்பு படையினர் நேற்று முன்தினம் கைது செய்துள்ளனர்.

ஜோர்ஜியாவின், அட்ஜரா பிராந்தியத்தின் ஊடாக எல்லை கட்டுப்பாடுகளை தவிர்த்து துருக்கி-ஜோர்ஜியா எல்லையை இவர்கள் கடக்க முயன்றுள்ளதாக விசாரணைகளின் போது தெரிய வந்துள்ளது.

வெளிநாட்டு பிரஜைகள் மேற்கொண்ட இந்த குற்றம் 4 தொடக்கம் 5 ஆண்டுகள் வரை சிறைத்தண்டனை வழங்கக்கூடிய குற்றமாகும் என தெரிவிக்கப்படுகின்றது.

உத்தியோகபூர்வ தகவல்களின்படி சட்டவிரோத எல்லை மீறல்கள் தொடர்பில் 2016 இல் 38 சம் பவங்கள் ஜோர்ஜிய உள்விவகார அமைச்சினால் கண்டறியப் பட்டுள்ளதுடன். 2015 இல் இவ் வாறான 55 சம்பவ ங்கள் பதிவு செய்யப் பட்டுள்ளதாக ஜோர்ஜிய ஊடக மொ ன்று செய்தி வெளி யிட்டுள்ளது.

(இ-7)

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு 021 221 7603, 021 567 1532


# விற்பனை

ஒரு சோடி வூபர் பொக்ஸ் விற்பனைக்கு(சிங்கர்).
**தொடர்பு:077 466 9597**
(4676)

# காயத்திரி
## திருமாங்கல்ய சேவை

ஞானவைரவர் கோவிலடி,உரும்பிராய் தெற்கு, உரும்பிராய்
தொ.இல:021 2232222, 076 835 1932

திருமணம் பொருத்தம் பார்த்தல், திருமணங்கள் நிச்சயித்தல், காண்டம் பார்த்தல், ஜாதகம் எழுதுதல் (ருது) போன்ற சேவைகள் திருப்திகரமாக செய்து கொடுக்கப்படும்.
E-mail: gayathri.matrimony.srilanka@gmail.com
F.B:Gayathri Matrimony.srilanka
Skype:Gayathri Matrimony.srilanka
உரிமையாளர் கதைந்தன்
Wahlen STR-143-4242 Laufen,Swiss
Tel: 0041768185443, 0041615544242 (4675)


மக்கள் வங்கியின்

# தெல்லிப்பளைக் கிளை

அதி நவீன தொழில் நுட்பத்துடன்

## கோலாகலத் திறப்புவிழா

# அழைப்பிதழ்

எதிர் வரும் 2018 ஆனி மாதம் 28ம் திகதி
வியாழக்கிழமை
காலை 8.30மணியளவில்

மக்கள் வங்கியின்
யாழ் பிராந்திய முகாமையாளர்
திரு. க. சுசீந்திரன்
அவர்களால்
வைபவரீதியாகத் திறந்துவைக்கப்படவுள்ளது.

இடம்: காங்கேசன்துறை வீதி,
தெல்லிப்பளை சந்தி, தெல்லிப்பளை.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம்:
முகாமையாளரும் ஊழியர்களும்,
மக்கள் வங்கி, தெல்லிப்பளை.

(C-2977)

மக்கள் வங்கி PEOPLE'S BANK
www.peoplesbank.lk peoplesbanksrilanka

# கேள்விப்பத்திரம் கோரல்

**யாழ்.மாவட்ட கூட்டுறவு கிராமிய வங்கிகளின் சமாசம் (வ.து)**
**கடைத்தொகுதி வாடகைக்கு விடுதல், நிலம் குத்தகைக்கு வழங்குதல்.**

எமது சமாச வளாகத்தின் உட்பகுதியில் அமைந்துள்ள அரை நிரந்தர கட்டிடக் கடைத் தொகுதிகளை வாடகைக்கு வழங்குவதற்கும் இக் கடைத் தொகுதிகளுக்கு அருகாமையிலுள்ள நிலத் துண்டுகளை குத்தகை அடிப்படையில் வழங்குவதற்கும் கேள்விப்பத்திரம் கோரப்படுகின்றது.

கேள்விப்பத்திரங்களை சமர்ப்பிக்க விரும்புவோர் அலுவலக நேரத்தில் சமாச பொது முகாமையாளருடன் தொடர்பு கொண்டு கடைத் தொகுதிகளை பார்வையிடலாம். அலுவலக நேரத்தில் மாதிரி விண்ணப்பப்படிவத்தினை பெற்று பூர்த்தி செய்து கடித உறையின் இடதுபக்க மேற்பக்கத்தில் "கடைத் தொகுதிக்கான கேள்விப்பத்திரம்" எனக் குறிப்பிட்டு பதிவுத் தபாலில் 05.07.2018 திகதிக்கு முன் **தலைவர், யாழ்.மாவட்டக் கூட்டுறவுக் கிராமிய வங்கிகளின் சமாசம், இல.95, காங்கேசன் துறை வீதி, யாழ்ப்பாணம்** எனும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

கேள்விப்பத்திரங்களை ஏற்றுக் கொள்ளல் நிராகரித்தல் தொடர்பில் சமாசத்தின் பணிப்பாளர் சபையின் முடிவே இறுதியானதாகும்.

தலைவர்,
யாழ். மாவட்டக் கூட்டுறவுக் கிராமிய வங்கிகளின் சமாசம் (வ.து)
யாழ்ப்பாணம்.
26.06.2018

(சி-2976)

# இராசி பலன்

**மேடம்:** யோசித்து செயற்பட வேண்டிய நாள், வேலைகள் உடனுக்குடன் முடியாமல் தாமதமாகலாம், ஆரோக்கியத்தில் கவனம் தேவை,

**இடபம்:** சென்ற இடத்தில் செல்வாக்கு மேலோங்கும் நாள், குடும்பத்தில் சுகங்களும் சந்தோசங்களும் அதிகரிக்கும், எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும்.

**மிதுனம்:** வியாபார விருத்தியுண்டு, பழைய கடனை தீர்க்க முழுமூச்சுடன் செயற்படுவீர்கள், அடுத்தவர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள்.

**கடகம்:** உற்சாகத்தோடு பணிபுரிவீர்கள், தொழிலை விருத்தி செய்ய முற்படுவீர் கள், தன்னம்பிக்கை துளிர்விடும் நாள், இலா பகரமான நாள்.

**சிம்மம்:** வியாபார விருத்திக்கு வித்திடுவீர்கள், பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறலாம், பெற்றோர் வழியில் அனுகூலமுண்டு, சுப செய்திகள் வந்து சேரும் நாள்.

**கன்னி:** உயர்வான சிந்தனைகள் மனதில் தோன்றும், எடுத்த செயலை முடிக்க உறவினர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**துலாம்:** புத்திசாதுரியமான செயற்பாடுகளால் புகழ் பெறுவீர்கள், பெரிய மனிதர்கள் வீடு தேடிவருவர், சேமிப்பு உயர வழிவகை செய்வீர்கள், வாக்கு மேன்மையுண்டு.

**விருச்சிகம்:** வளர்ச்சிப் பாதையை நோக்கி அடியெடுத்து வைப்பீர்கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், சுபகாரியப் பேச்சுக்கள் நல்ல முடிவுக்கு வரும்.

**தனுசு:** கோபத்தைக் குறைத்துக் கொள்வது நல்லது, அனுபவம் மிக்கவர்களின் ஆலோசனை கிடைக்கலாம்,சுப விரயங்கள் அதிகரிக்கும் நாள், பிரியமான ஒருவரை சந்திக்கும் வாய்ப்புண்டு.

**மகரம்:** பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு, வியக்கும் செய்திகள் வீடு வந்து சேரலாம், திட்டமிட்ட காரியங்களில் திசைதிருப்பங்கள் ஏற்படலாம்.

**கும்பம்:** அருமையான நாள், அன்பு நண்பர்களின் சந்திப்பு இடம் பெறலாம், வசதி வாய்ப்புக்களை பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள், செய் தொழிலில் மேன்மையுண்டு.


**மீனம்:** திறமை மிக்கவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், எதிர்காலம் குறித்து முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள், கடுமையான எதிர்ப்புகள்கூட திடீரென சாதகமாகி விடும்.

கிரகநிலை




| | | | |
|---|---|---|---|
| | | | சூரி |
| | இராசி பலன் | | சுக், ராகு. |
| கேது. | சந்திராஷ்டமம் | | |
| சனி | சந் | குரு | |

26.06.2018
ஆனி 12, செவ்வாய்க்கிழமை
சூரிய உதயம் காலை 5.55 மணிக்கு
திரயோதசி முற்பகல் 7.54 மணிவரை
அனுஷம் முற்பகல் 8.55 மணிவரை
சுபநேரம் 10.25-11.55 மணிவரை

வளவன்


யாழ்ப்பாணம்-வண்ணை ஸ்ரீ வீரமாகாளி அம்மன் கோவில் வேட்டைத்திருவிழா நேற்றுக் காலை வெகுவிமர்சையாக இடம்பெற்றது. படங்கள்:- ஐ.சிவசாந்தன்


மல்லாகம், கோட்டைக்காடு சைவ வாலிபர் சங்க சனசமூக நிலையத்தினரால் புதிதாக அமைக்கப்பட்ட முன்பள்ளி திறப்பு விழா நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை சனசமூக நிலையத் தலைவர் என்.சூரியகுமார் தலைமையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாணசபை உறுப்பினர் பா.கஜதீபன் கலந்துகொண்டு நாடாவெட்டி கட்டடத்தைத் திறந்து வைத்தார். நிகழ்வின் சிறப்பு விருந்தினராக வலி.தெற்கு (சுன்னாகம்) பிரதேசசபைத் தவிசாளர் க.தர்ஷன், கிராம உத்தியோகத்தர் யூஜின் மசனட் ஆகியோரும் கலந்துகொண்டனர். இந் நிகழ்வில் புதிதாக அமைக்கப்பட்ட முன்பள்ளி திறந்து வைக்கப்பட்டதுடன், கல்வி, விளையாட்டுத் துறைகளில் சாதனைகள் படைத்த இளைஞர், யுவதிகள், சிறார்களுக்கான பரிசில்களும் விருந்தினர்களால் வழங்கப்பட்டன.

# மஹா கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

வேலணை, சரவணையிலுள்ள ஸ்ரீ அருள் வரத காளி அம்பாளின் புனராவர்த்தனப் பிரதிஷ்ட மஹா கும்பாபிஷேகத்திற்கான கிரியை நிகழ்வுகள் எதிர்வரும் முதலாம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகவுள்ளன.

சரவணை மேற்கில்அமைந்துள்ள அருள் வரதகாளி அம்பாளின் கும்பாபிஷேக நிகழ்வுகளில், எதிர்வரும் நான்காம் திகதி புதன்கிழமை விக்கிரகங்களுக்கு எண்ணெய்க்காப்பு சாத்துதல் நடைபெறும். ஐந்தாம் திகதி வியாழக்கிழமை பிரதிஷ்ட மஹா கும்பாபிஷேகம் இடம்பெறவுள்ளது.

இதனைத் தொடர்ந்து 12 தினங்களுக்கு மண்டலாபிஷேகம் நடைபெறும். அத்தோடு, அம்பாளின் புகழைப் பாடும் இசைத்தட்டும் வெளியிடப்படவுள்ளது. எனவே, அம்பிகையின் அடியார்கள் அனைவரும் ஆலயத்திற்கு வருகை தந்து கும்பாபிஷேக நிகழ்வுகளிலும் மண்டலாபிஷேகத்திலும் கலந்துகொள்ளுமாறு ஆலய நிர்வாகத்தினர் கேட்டுக்கொண்டுள்ளனர். (இ-7)

# சிரேஷ்ட பிரஜைகளை ஊக்கப்படுத்தும் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பிரதேச கலாசார அதிகார சபையின் கலை கலாசார மேம்பாட்டு வேலைத் திட்டம் "முதியோரே எங்கள் மூலதனம்" சிரேஷ்ட பிரஜைகளை ஊக்கப்படுத்தும் நிகழ்வு இன்று செவ்வாய்க்கிழமை காலை 9 மணியளவில் பிரதேச செயலக மண்டபத்தில் இடம்பெறும்.

இந்நிகழ்வில் வளவாளர்களாக யோகா போதனாசிரியர் கலாபூஷணம் ந.சிவனேஸ்வரராஜா "உடலுள மேம்பாட்டுக்கு யோகா" எனும் தலைப்பிலும் யாழ்.மாவட்ட சித்த ஆயுள்வேத வைத்தியர் சிவசுப்பிரமணியம் "முதுமையிலும் இளமையுடன் வாழ்வோம்" எனும் தலைப்பிலும் உரை நிகழ்த்துவர். (இ)





படங்கள்:- பொ.சோபிகா

தூய்மையான கோப்பாய் மத்தி 26 ஆம் கட்ட பார்த்தீனிய செடி ஒழிப்பு தொடர்பான விசேட கருத்தரங்கும் சிரமதானமும் அண்மையில் கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி சூழலில் நடைபெற்றது. குறித்த சிரமதான நிகழ்வில் கோப்பாய் மத்தி கிராம பொதுமக்கள், வலி.கிழக்கு பிரதேச செயலக சமுதாயம்சார் சீர்திருத்த உத்தியோகத்தர், விவசாய உத்தியோகத்தர் மற்றும் பொதுமக்கள், பாடசாலை மாணவர்கள், இராணுவத்தினர் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# முன்பள்ளி மழலைகளின் விளையாட்டு விழா இன்று

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் வலயக் கல்வி அலுவலக கோப்பாய்க் கோட்ட முன்பள்ளி மழலைகளின் விளையாட்டு விழா இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணியளவில் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி மைதானத்தில் கோப்பாய்கோட்டக்கல்விப் பணிப்பாளர் நா.சிவநேசன் தலைமையில் இடம்பெறும். இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணம் கல்வி வலய ஆரம்பப் பிள்ளைப் பருவ அபிவிருத்திப் பிரிவு ஓய்வு நிலை உதவிக் கல்விப் பணிப்பாளர் கே.விமலநாதன், யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி அதிபர் திருமதி மிமலாதேவி விமலநாதன் ஆகியோர் கலந்து கொள்வர். (இ)

## அலங்கார உற்சவம் ஆரம்பம்

இருபாலை கிழக்கு கந்தசாமி கோவில் (முனிகோவில்) வருடாந்த அலங்கார உற்சவம் இன்று செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் இடம்பெறும். (இ

*********

புலோலி வேவிலந்தி முருகன் ஆலய வருடாந்த அலங்கார திருவிழா இன்று செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகும். தொடர்ந்து 10 நாட்கள் திருவிழா இடம்பெற்று எதிர்வரும் 5 ஆம் திகதி வியாழக்கிழமை தீர்த்தத் திருவிழா இடம்பெறவுள்ளது. (இ



நல்லைக் கந்தன் தண்ணீர்ப்பந்தல் உதவும் கரங்கள் அமைப்பினர் இரண்டு மாணவர்களுக்கு அண்மையில் துவிச்சக்கர வண்டிகளை வழங்கினர்.





யாழ். புனித கொன்சேஞ்சிமாதா சேமக்காலையில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட சிற்றாலயத்தினை யாழ்.மாவட்ட குருமுதல்வர் அருள் தந்தை பி.ஜே.ஜெயரட்ணம் கடந்த 21 ஆம் திகதி திறந்து வைத்தார்.

# தமிழர்களை இந்நாட்டின் பிரஜைகளாக அரசாங்கங்கள் ஏற்றுக்கொள்கின்றனவா?

## சண்.குகவரதன் சந்தேகம்



(கொழும்பு)

தமிழர்களை இந்நாட்டின் பிரஜைகளாக இந்த அரசாங்கங்கள் ஏற்றுக்கொள்கின்றனவா என்பதில் தற்போது சந்தேகம் எழுந்துள்ளதாக மேல்மாகாண சபை உறுப்பினர் சண்.குகவரதன் தெரிவித்துள்ளார்.

வடக்கில் யுத்தத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு இழப்பீடு வழங்குவது தொடர்பாக அமைச்சர் டி.எம். சுவாமிநாதனால் முன்வைக்கப்பட்ட அமைச்சரவை பத்திரம் தொடர்ந்து மூன்றாவது தடவையாகவும் நிராகரிக்கப்பட்டது.

இந்நிலையில், இது தொடர்பாக தனது நிலைப்பாட்டை வெளிப்படுத்தி அவர் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு சந்தேகம் வெளியிட்டுள்ளார்.

"யுத்தத்தினால் பாதிக்கப்பட்டவர்களின் மற்றும் முன்னாள் போராளிகளின் பிள்ளைகள், பெற்றோர் அல்லது போரால் பாதிக்கப்பட்ட இராணுவத்தினர் யாராக இருப்பினும் அனைவரும் இலங்கையர்களே.

30 வருடகால யுத்தம்நிறைவடைந்து பத்து வருடங்கள் ஆகின்ற நிலையில் புனர்வாழ்வளிக்கப்பட்ட இலங்கை பிரஜைகளான போராளிகளுக்கும், அவர்களது குடும்பங்களை சார்ந்தவர்களுக்கும் உதவி வழங்குவதற்கான அமைச்சரவை பத்திரம் நிராகரிக்கப்பட்டமை மனவேதனை அளிக்கிறது.

தற்போது எதிர்க்கட்சியில் அமர்ந்துகொண்டு தெற்கு மக்கள் மத்தியில் இனவாதத்தை பரப்பிவரும் மகிந்தானந்த அளுத்கமகே, விமல் வீரவன்ச போன்ற நாடாளுமன்ற உறுப்பினர்கள் இவ்வாறான செயற்பாடுகளை நிறுத்திக்கொள்ள வேண்டும்.

சிங்கள மக்கள் புரிந்துணர்வும், மனிதாபிமானமும் மிக்கவர்கள். இனவாத அரசியல்வாதிகளே அவர்கள் மத்தியில் தேவையற்ற கசப்பு மனப்பாங்கை ஏற்படுத்தி வருகின்றனர்.

மீதொட்டமுல்ல குப்பை மேட்டில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நட்டஈடு வழங்கப்படாததை பற்றி கூறும் விமல் வீரவன்ஸவிற்கு 83ஆம்ஆண்டு கலவரத்தில் பாதிக்கப்பட்ட தமிழர்கள், பேருவளை அளுத்கம மற்றும் கண்டி திகன கலவரத்தில் பாதிக்கப்பட்ட முஸ்லிம்கள் ஆகியோருக்கு இன்னும் நட்டஈடு வழங்கப்படாமையை அறிந்திலையா" என்றும் கேள்வி எழுப்பியுள்ளார். (இ-7)

# கோழிக் கொத்தில் தவளை

(கொழும்பு)

சாப்பாட்டு வகைகளில், "கொத்துரொட்டி" சாப்பாடு என்றாலே அவ்வப்போது ஏதாவது சர்ச்சைகள் ஏற்படத்தான் செய்கின்றது. அந்த வகையில், கோழிக் கொத்தில் தவளையொன்று இருந்த சம்பவமொன்று இடம்பெற்றுள்ளது.

அம்பலாந்தோட்ட- மல்பெத்தாவ பகுதியிலுள்ள ஹோட்டலொன்றில் வாங்கப்பட்ட கோழிக் கொத்துரொட்டி பொதியிலேயே தவளையொன்று இருந்தமை கண்டறியப்பட்டுள்ளது.

கொத்துரொட்டியை வாங்கிய பெண்ணொருவர், அதனை சாப்பிடுவதற்காக, பொதியைப் பிரித்துள்ளார். அதன்போதே சாப்பாட்டுக்குள் மர்மமான பொருளொன்று கிடப்பதை அவதானித்துள்ளார்.

சந்தேகம் கொண்ட அப்பெண், நன்றாக ஆராய்ந்து பார்த்தபோது அதில் தவளையொன்றின் கால்கள் உள்ளிட்ட இன்னும் சில உறுப்புகள் கிடந்துள்ளன.

குறித்த பெண், கொத்துரொட்டி பொதியுடன் சென்று அம்பலாந்தோட்ட சுகாதார வைத்திய அதிகாரி யூ.பி. மாலக சில்வாவிடம் முறைப்பாடு செய்துள்ளார்.

குறித்த கொத்துரொட்டிப் பொதியுடன், அதனை தயாரித்த ஹோட்டலுக்குச் சென்ற சுகாதார வைத்திய அதிகாரி மற்றும் அம்பலாந்தோட்ட பொதுச் சுகாதார பரிசோதகர் கே.ஜீ.நிசாந்த, குறித்த ஹோட்டலின் உரிமையாளரான பெண்ணிடம் கடந்த சனிக்கிழமை வாக்குமூலத்தைப் பெற்றுக்கொண்டனர்.

அதன்பின்னர், தவளையுடனான கொத்துரொட்டிப் பொதியை தனது பொறுப்பின் கீழ், பொது சுகாதார பரிசோதகர் கொண்டுவந்தார்.

அதுமட்டுமன்றி, குறித்த ஹோட்டலின் உரிமையாளரான பெண்ணை, அம்பாந்தோட்டை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துவதற்கான நடவடிக்கையும் எடுக்கப்பட்டுள்ளது. (இ-7)

# அகவை அறிமுக விழா



(யாழ்ப்பாணம்)

பேராசிரியர் முனைவர் மனோன்மணி சண்முகதாஸின் அகவை அறிமுக விழா நாளை புதன்கிழமை பிற்பகல் 4 மணியளவில் நல்லை ஆதீன மண்டபத்தில் முனைவர் மனோன்மணி சண்முகதாஸ் தலைமையில் இடம்பெறும்.

இந்நிகழ்வில் "மணற்கேணி" நூலறிவு முகவுரையினை துணுக்காய் கலாசார உத்தியோகத்தர் கு.ரஜீபன் ஆளுமை அறிமுகத்தினை யாழ்ப்பாணம் மேலதிக அரசாங்க அதிபர் திருமதி சுகுணரதி.தெய்வேந்திரம் ஓய்வுநிலை மக்கள் வங்கி முகாமையாளர் எழுத்தாளர் யோகேஸ்வரி சிவப்பிரகாசம், யாழ்.இந்து மகளிர் கல்லூரி அதிபர் திருமதி மிரளாதேவி. விமலராஜன்,திருநெல்வேலி சைவச்சிறுவர் இல்ல பராமரிப்பாளர் செல்வமலர் கந்தவேள் மக்கள் வங்கியின் திருநெல்வேலி பல்கலைக்கழகக் கிளை முகாமையாளர் யாழினி சுரேஸ்குமார், யாழ்ப்பாணம் பாலியல் தொற்று நோய்த்தடுப்பு சிகிச்சை நிலைய பொறுப்பு வைத்திய அதிகாரி தாரணி குருபரன் ஆகியோர் அறிமுக உரை நிகழ்த்துவர்.

தொடர்ந்து வலிகாமம் ஓய்வுநிலை உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி கோகிலா மகேந்திரன் தலைமையில் சிறப்புப் பட்டிமண்டபம் இடம்பெறும்.

இதில் "இன்றைய இளைய தலைமுறையை நெறிப்படுத்த வல்லது விஞ்ஞானக் கல்வியே!" என்ற தலைப்பில் சாந்திகம் உளவளத்துணை நிறுவன பணிப்பாளர் திருமதி வைதேகி பாலமுரளி, சட்டத்தரணி சர்மினி விக்னேஸ்வரன், சண்டிலிப்பாய் பிரதேச செயலக பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி தபாபரி கிரிதரன் ஆகியோரும் "இலக்கியக் கல்வியே!" என்ற தலைப்பில் சண்டிலிப்பாய் சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி தர்மனி ராஜீவன் .யாழ் .பல்கலைக்கழக தமிழ்த்துறை விரிவுரையாளர் செல்வதியம்மா பூலோகம், இலங்கை வங்கியின் யாழ்.கிளை துணை முகாமையாளர் திருமதி சுகந்தி ஜெயச்சந்திரன் ஆகியோர் வாதிடுவர். (இ-7)

# மதுபோதையில் மகனை கடலில் வீசிய தந்தை

(கொழும்பு)

மது போதையில் மகனைக் கடலில் வீசிய தந்தையை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இந்த சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

மாரவில, மகவெவ பகுதியில் மீன்பிடி தொழிலில் ஈடுபட்டு வரும் 24 வயதுடைய மது குடிபோதைக்கு அடிமையானவர், சம்பவ தினமான நேற்றுமுன்தினம் மது அருந்திவிட்டு வீட்டுக்கு வந்துள்ளார்.

இதன்போது மனைவியிடம் மேலும் மது அருந்துவதற்காக பணம் கேட்டுள்ளார். மனைவி பணம் தர மறுத்தமையால் கோபமடைந்த கணவன், தனது ஒரேயொரு மகனை தூக்கிச் சென்று கடலில் வீசியுள்ளார்.

தனது மகனை கணவன் கடலில் வீசியதை, கண்டு மனைவி கூக்குரலிட்டுள்ளார். உடனடியாக சம்பவ இடத்துக்கு விரைந்த பிரதேச மக்கள் கடலில் வீசப்பட்ட சிறுவனை மீட்டு வைத்தியசாலையில் அனுமதித்துள்ளனர்.

சிறுவன் ஆபத்தான நிலையில் மாரவில வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதாகவும், சந்தேக நபரை பொலிஸார் கைது செய்துள்ளதாகவும் தெரிய வருகிறது. (இ-7)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1980 இந்து<br>நட்சத்திரம்: சதயம் 1ஆம் பாதம்<br>கி.பா: செவ் 2 இல்<br>தகைமை/தொழில்: A/L தனியார் தொழில்<br>தொ.இ: B/7780 | பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: ரோகினி 3ஆம் பாதம்<br>கி.பா: 56 செவ் 8 இல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்:A/L<br>தொ.இ: G/2072 |
| பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: மகம்<br>தகைமை/தொழில்:A/L ஜேர்மன்<br>தொ.இ: B/7781 | பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்: பரணி 1ஆம் பாதம்<br>தகைமை/தொழில்:BSc MBA தனியார் தொழில்<br>தொ.இ: G/8196 |
| பிறப்பு: 1983 RC கிறிஸ்தவம்<br>நட்சத்திரம்: புரட்டாதி 2ஆம் பாதம்<br>கி.பா: செவ் 2 இல்<br>உயரம்: 165cm<br>தகைமை/தொழில்: BA தனியார் தொழில்<br>தொ.இ: B/7782 | பிறப்பு: 1992 இந்து<br>நட்சத்திரம்: ரோகினி 1ஆம் பாதம்<br>கி.பா: செவ் 7 இல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்:BA டிப்ளோமா<br>தொ.இ: G/8198 |
| பிறப்பு. 1982 இந்து<br>நட்சத்திரம்: மூலம் 4ஆம் பாதம்<br>கி.பா: 49 செவ் 8 இல்<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்: A/Lலண்டன் PR<br>தொ.இ: B/4473 | பிறப்பு: 1993 இந்து<br>நட்சத்திரம்: திருவாதிரை1ஆம்பாதம்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்:BA<br>தொ.இ: G/8200 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.


# நாட்டில் மீள பயங்கரவாதம் உருவாக ஜனாதிபதி சந்தர்ப்பம் வழங்கமாட்டார்

## அமைச்சர் அமரவீர உறுதி

(கொழும்பு)

நாட்டில் மீண்டும் பயங்கரவாதம் உருவாக ஜனாதிபதியோ, இலங்கை இராணுவத்தினரோ எந்தச் சந்தர்ப்பத்தையும் வழங்க மாட்டார்கள் என விவசாய அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

வெலியத்தை பிரதேசத்தில் நேற்று நடைபெற்ற கூட்டம் ஒன்றில் உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடக்கு, கிழக்கிலுள்ள எந்த இராணுவ முகாம்களை அரசியல் காரணங்களின் அடிப்படையில் அகற்ற இடமளிக்கப் போவதில்லை.

முகாம்களை அகற்றுவது அல்லது அவற்றை இருந்த இடத்திலேயே இருப்பதற்கான சுதந்திரம் முழுமையாக பாதுகாப்பு தரப்பினரிடம் வழங்கப்பட்டுள்ளது.

எனவே எந்த அரசியல் காரணங்களை கொண்டும் வடக்கு, கிழக்கிலுள்ள படை முகாம்கள் அகற்றப்படமாட்டாது எனவும் மகிந்த அமரவீர மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# சுகாதாரத் துறையின் குறைபாடுகளை நிவர்த்தி செய்யக் கோரி முல்லைத்தீவு மாவட்ட செயலகம் முன்பாக மக்கள் ஆர்ப்பாட்டம்





(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தில் சுகாதாரத்துறையில் உள்ள குறைபாடுகளை நிவர்த்தி செய்யக்கோரி முல்லைத்தீவு மாவட்ட செயலகம் முன்பாக நேற்று ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் மருந்தகங்கள் மூடப்பட்டமைக்கு எதிர்ப்பு தெரிவித்தும் வைத்தியசாலைகளில் உள்ள குறைகளை நிவர்த்தி செய்யக் கோரியும் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரை மாற்றம் செய்யக் கோரியும் பல்வேறு கோசங்களை எழுப்பியவாறு மக்கள் மேற்குறித்த போராட்டத்தில் ஈடுபட்டனர்.

முல்லைத்தீவு மாவட்ட செயலக அபிவிருத்தி குழுக் கூட்டம்,நேற்று நடைபெற்ற நிலையில் இந்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டதால் அங்கு வந்த மக்கள் பிரதிநிதிகள் போராட்டக்காரர்களுடன் கலந்துரையாடி அவர்களுடைய கோரிக்கை அடங்கிய மகஜரினை பெற்றுசென்றுள்ளனர்.

குறித்த மகஜரில் முல்லைத்தீவு மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் உடனே மாற்றப்படல் வேண்டும், மருந்தகங்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட நீதிமன்ற வழக்குகள் உடன் நீக்கப்படல் வேண்டும், மருந்தகங்களுக்கு கால அவகாசம் வழங்கப்படுவதுடன் பின்தங்கிய முல்லைத்தீவு மாவட்டத்திற்கு சில அனுகூலங்கள் வழங்கப்படல் வேண்டும். அதேவேளை ஏனைய மாவட்டங்களுக்கும் இந்நடைமுறைகளை பின்பற்றுவதுசாலச்சிறந்தது, முல்லைத் தீவு நகரத்தில் அமைந்துள்ள பிரதேச வைத்தியசாலைக்கு உடன் தமிழ் வைத்தியர் நியமிக்கப்படல் வேண்டும், மூங்கிலாறு வைத்தியசாலைக்கு உடன் நிரந்தர வைத்தியர் நியமிக்கப்படல்வேண்டும், ஐயன்கன்குளம் வைத்திய சாலைக்கு உடன் நிரந்தர வைத்தியர் நியமிக்கப்படல் வேண்டும் மற்றும் பாவிக்கக்கூடிய நிலையில் உள்ள நோயாளர் காவுவண்டி வழங்கப்படல் வேண்டும், அளம்பில், கொக்கிளாய் ஆகிய இரண்டு பிரதேச வைத்திய சாலைகளின் வைத்தியர்களினை கடமை நேர த்தில் கடமையாற்றுதலை உறுதிப்படுத்தல் வேண்டும். அத்துடன், அவர்கள் விடுமுறை பெறும் நாட்களில் மாற்று வைத்தியர் அனுப்பி வைப்பதுடன் அவர்களினால் மேற்கொள்ளப்படும் தவறுகள் தண்டிக்கப்படல் வேண்டும், புதுக்குடியிருப்பு, வேணாவில் கிராமத்தில் அமைக்கப்படும் ஆரம்ப சுகாதார நிலையம் முழுமையாக திருத்தப்படுவதனை உறுதி செய்தல் வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

போராட்டத்தில் கலந்து கொண்டவர்களால் வணிக கைத்தொழில் துறை அமைச்சரும், இணைத் தலைவருமான றிசாத் பதியுதீன், வன்னி மாவட்ட மீள் குடியேற்ற பிரதியமைச்சரும், இணைத்தலைவருமான காதர் மஸ்தான், வடக்கு மாகாண முதலமைச் சரும், இணைத் தலைவருமான முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன், வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும், இணைத்தலைவருமான சி.சிவமோகன் ஆகியோருக்கு மேற்குறித்த கோரிக்கை அடங்கிய மகஜரும் கையளிக்கப்பட்டது. (7-9-281)




# கனிய மணல் அகழ்வது தொடர்பில் ஆராய குழு அமைப்பு



முல்லைத்தீவு மாவட்டத்தில் கொக்கிளாய் பகுதியில் கனியமணல் அகழ்வது தொடர்பில் அரசியல் தலைவர்களை தெளிவுபடுத்தும் கலந்துரையாடல் நேற்று முல்லைத்தீவு மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இந்த கலந்துரையாடலில் வணிக கைத்தொழில் அமைச்சர் றிசாத் பதியுதீன், வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன்,மீள் குடியேற்ற பிரதி அமைச்சர் காதர் மஸ்தான் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், சி.சிவமோகன், சாள்ஸ் நிர்மலநாதன். திருமதி சாந்தி சிறிஸ்கந்தராஜா மற்றும் மாகாண அமைச்சர்கள்,மாகாண சபை உறுப்பினர்கள், பிரதேச சபை உறுப்பினர்கள் மற்றும் திணைக்களங்களின் அதிகாரிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

இதன்போது இந்த திட்டம் நடைமுறைக்கு கொண்டு வருவது தொடர்பில் மாகாண அரசுடன் உரிய முறையில் எதுவும் கலந்துரையாடவில்லை என்ற பல்வேறு கருத்து வேறுபாடுகளுக்கு பின்னர் இந்த திட்டத்துக்கு குழு ஒன்று அமைத்து அந்தக் குழுவின் அறிக்கை சமர்ப்பிக்குமாறு மாகாண முதலமைச்சரால் 7 பேரும் வணிக வாணிப அமைச்சரால் 5 பேரும் மாவட்ட செயலாளரால் 3 பேரும் கரைதுறைப்பற்று பிரதேச சபை தவிசாளர் மற்றும் குறித்த வட்டார உறுப்பினர் உள்ளடங்கலாக 17 பேரும் கலந்துரையாடி அறிக்கை இட்ட பின்னரே இந்த திட்டம் தொடர்பாக கலந்துரையாடுவது என தீர்மானிக்கப்பட்டுள்ளது. (7-281)

# முல்லைத்தீவில் பூரண கடையடைப்பு






(படங்கள்: பனிக்கன்குளம் செய்தியாளர்)

முல்லைத்தீவு மாவட்டத்தில் மருந்தகங்கள் மூடப்பட்டமை தொடர்பிலும் வைத்திய சாலைகளில் உள்ள குறைகளை நிவர்த்தி செய்யக் கோரியும் நேற்றைய தினம் மாவட்ட செயலகம் முன்பாக மக்கள் பாரிய ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தினர். இதற்கு ஆதரவாகவும் முல்லைத்தீவு மாவட்டத்தில் மட்டும் மருந்தகங்களை மூடி நடவடிக்கை மேற்கொண்டமை வைத்தியசாலைகளில் உள்ள குறைகளை நிவர்த்தி செய்தல் உள்ளிட்ட பல்வேறு விடயங்களுக்கு ஆதரவாகவும் கடையடைப்பு மேற்கொள்ளப்பட்டது.

# பத்மநாபாவின் 28 ஆவது நினைவுதினம் அனுஷ்டிப்பு



(குருமன்காடு)

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் செயலாளர் நாயகமான பத்மநாபாவின்28ஆவது நினைவு தினமான தியாகிகள் தினம் நேற்று வவுனியாவில் அனுஷ்டிக்கப்பட்டது.

வவுனியா நகரசபை மண்டபத்தில் தோழர் சோமு அரங்கில் கட்சியின் மத்திய குழு உறுப்பினர் கே. அருந்தவராசா தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில் அக் கட்சியின் தற்போதைய தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன் பத்மநாபாவின் திருவுருவப் படத்திற்கு மலர் மாலை அணிவித்து தீப மேற்றினார்.

இதனையடுத்து வன்னி பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், வட மாகாணசபை உறுப்பினர்களான ஜி.ரி. லிங்கநாதன், எம்.தியாகராசா, ஆர். இந்திரராசா, வவுனியா நகரசபை தலைவர் இ. கௌதமன், ஏனைய கட்சிப்பிரதிநிதிகள், முன்னாள்பாராளுமன்றஉறுப்பினர் வினோநோதராதலிங்கம், முன்னாள்மாகாண சபை உறுப்பினர்களான செ. மயூரன், துரைராசரட்ணம், சமூக ஆர்வலர் கண்ணகி தேவராசா உட்பட பலரும் கலந்துகொண்டு தீபமேற்றி மலர் தூவி அஞ்சலி செலுத்தினர். (7-250-28)

# மன்னாரில் தபால் தொழிற்சங்கத்தினர் போராட்டம்



(மன்னார்)

இலங்கை முழுவதும் அஞ்சல் அலுவலக ஊழியர்கள் மற்றும் பணியாளர்கள் தொடர்ந்தும் முன்னெடுத்து வருகின்ற தொழிற்சங்க போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து மன்னார் மாவட்ட அஞ்சல் ஊழியர்களும் நேற்று திங்கட் கிழமை பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து மன்னார் மாவட்ட அஞ்சல் அலுவலகத்திற்கு முன் முற்பகல் 10 மணியளவில் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

மன்னார் மாவட்ட அஞ்சல் தொழிற்சங்கங்களின் ஏற்பாட்டில் நேற்று திங்கட்கிழமை முற்பகல் 10 மணியளவில் மன்னார் மாவட்ட அஞ்சல் அலுவலகத் திற்கு முன் போராட்டம் இடம் பெற்றது.

மேற்படி போராட்டத்திற்கு மன்னார் மாவட்டத்தில் உள்ள அனைத்து அஞ்சல் அலுவலகங்கள் மற்றும் உப அஞ்சல் அலுவலகங்களில் கடமையாற்றுகின்ற நூற்றுக் கணக்கான பணியாளர்கள் கலந்து கொண்டிருந்தனர்.

குறித்த போராட்டத்தில் ஈடுபட்ட பணியாளர்கள் பல்வேறு வசனங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறு போராட்டத்தில் கலந்து கொண்டிருந்தனர்.

அகில இலங்கை ரீதியாக அஞ்சல் அலுவலக பணியாளர்கள் தொடர்ந்தும் முன்னெடுத்து வருகின்ற தொழிற்சங்க போராட்டம் 14 நாட்களை கடந்துள்ள நிலையில் மன்னார் மாவட்டத்தில் உள்ள அனைத்து அஞ்சல் அலுவலக பணியாளர்களும் தொடர்ந்தும் பணிப் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (7)

# மன்னார் புதைகுழியில் இருந்து 30 மனித மண்டையோடுகள் மீட்பு



(மன்னார்)

மன்னார் நகர நுழைவாயிலில் உள்ள விற்பனை நிலைய வளாகத்தில் கண்டுபிடிக்கப்பட்ட மனித எலும்புகள் அகழ்வு பணிகளின் போது இதுவரை சுமார் 30 மனித எலும்புக்கூடுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக விசேட சட்ட வைத்திய நிபுணர் டபிள்யூ. ஆர்.ஏ.எஸ். ராஜபக்ஷ ஊடகவியலாளர்களுக்கு தெரிவித்தார்.

மன்னார் நகர நுழைவாயிலில் உள்ள விற்பனை நிலைய வளாகத்தில் இடம்பெற்று வந்த அகழ்வு பணிகள் கடந்த வெள்ளிக்கிழமை மதியம் இடைநிறுத்தப்பட்ட நிலையில் ,மீண்டும் நேற்று திங்கட்கிழமை காலை 7.30 மணியளவில் 20 ஆவது தடவையாக ஆரம்பமானது.

விசேட சட்ட வைத்திய நிபுணர் டபிள்யூ. ஆர். ஏ. எஸ்.ராஜபக்ஷ தலைமையில் ஆரம்பமான அகழ்வுப் பணிகளின் போது அவருடன் இணைந்து களனி பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் ராஜ் சோமதேவா மற்றும் அவரின் குழுவினர் மற்றும் அழைக்கப்பட்ட அதிகாரிகள் இணைந்து அகழ்வுப் பணிகள் இடம்பெற்றன.

இதன்போது ஊடகவியலாளர்கள், விசேட சட்ட வைத்திய நிபுணர் டபிள்யூ. ஆர்.ஏ.எஸ்.ராஜபக்ஷ மற்றும் களனி பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் ராஜ் சோமதேவா ஆகியோருக்கும் இடையில் கலந்துரையாடல்.இடம்பெற்றது.

இதன் போது கருத்து தெரிவிக்கையிலேயே அவர் அவ்வாறு தெரிவித்தார்.

குறித்த அகழ்வு பணிகள் மிகவும் நுணுக்கமான முறையில் நடைபெற்று வருகின்றன. சில தடயங்கள் மற்றும் தடய பொருட்கள் காணப்பட்டுள்ளன. அவற்றை மீட்டுள்ளோம் எனவே அகழ்வு பணிகள் நிறைவடையும் வரை எவற்றையும் கூற முடியாது எனவும்.ஆனால் வேறு எந்த அபாயகரமான தடயப் பொருட்களும் இதுவரை கிடைக்கவில்லை எனவும் தெரிவித்தார்.

குறித்த வளாகத்தில் முழுமையாகவும், துண்டு, துண்டுகளாகவும் மனித எலும்புகள் மீட்கப்பட்டு வருகின்றமையினால்,எண்ணிக்கைகளை துல்லியமாக தெரிவிப்பது சிரமமாக காணப்படுவதாகவும் தொடர்ந்து தெரிவித்தார். (7)



சண்டிலிப்பாய்

# வீணாகான குருபீடம்பதி உறையும் உபதேச திருக்கோவில் கல்வித் தெய்வம் ஸ்ரீ சரஸ்வதி அம்பாள் மஹா கும்பாபிஷேகமும் ஞானரத்தின குருகுல அறநெறி வித்தியாலய அங்குரார்ப்பணமும்

சிவனடியார்களே!

சிவபுண்ணிய பூமியில் சிவபூஜையும் சிவநெறியும் தழைத்தோங்கவும் சைவத்தமிழ் கலை கலாசார கல்வி நல்லொழுக்க விழுமியங்கள் குறைவின்றி வளர்ச்சி அடைவதற்கு இன்று அறநெறி போதனைகளும் ஆலய வழிபாடு அவசியமாக வுள்ளது. அதற்கமைவாக இலங்கையில் முதன்முதலாக உபதேச திருக்கோவில் கல்வித் தெய்வம் ஸ்ரீ சரஸ்வதி அம்பாள் திருக் கோவிலும் ஞானரத்தின குருகுலம்– அறநெறி வித்தியாலயம் ஆகியன ஒருங்கே சண்டிலிப்பாய் வீணா கான குரு பீடத்தில் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. இவற்றுக்கான கும்பாபிஷேகம் அங்குரார்ப்பண வைவம் எமது குல தெய்வம் சிவகாமி பாகர் திரு வருளுடனும் காஞ்சிப் பெரியவரின் அருளுடனும் பிரம்மஸ்ரீ ஞானபண்டிதக் குருக்கள் சபாரத்தின சர்மா ஆசியுடனும் எதி ர்வரும் மங்களமிகு விளம்பி வருடம் ஆனித்திங்கள் 14 ஆம் நாள் (28.06.2018) வியாழக்கிழமை மூல நட்சத்திரமும் பௌர் ணமி திதியும் சிங்க லக்கினமும் சித்தயோகமும் கூடிய சுபமுகூர்த்த வேளையில் நடைபெற திரு வருள் பாலித்துள்ளது.

ஸ்ரீ சரஸ்வதி அம்பாள் சந்நிதானத்தில் உபதேச தெய்வங்களாகிய ஸ்ரீ வித்யா கணபதி ஆறு அடி உயரம் கொண்ட மஹா சரஸ்வதி அம்பாள் ஸ்ரீ தெட்சணாமூர்த்தி, ஸ்ரீஹயக்கிரீவமூர்த்தி, கல்விக்கு அதிபதியான குபேர திசை நோக்கிய புதன் பகவான், ப்ரம்ம வித்தியாம்பிகை சமேத சுவேதாரண்யேஸ்வர சிவன் அம்பாள் முதலான தெய்வங்களைச் சிறப்புத் தரிசனம் செய்யலாம்.

## கிரியாகால விபரங்கள்

**25.06.2018 திங்கட்கிழமை மாலை 3.00 மணிமுதல் விநாயகர் வழிபாட்டுடன் மஹா யாகம் ஆரம்பமாகியது**

## எண்ணெய்க்காப்பு

**26.06.2018 இன்று செவ்வாய்க்கிழமை முழுநாளும்**

**27.06.2018 நாளை புதன்கிழமை மாலை 5.00 மணிவரை**

**28.06.2018 வியாக்கிழமை மஹா கும்பாபிஷேகம்- காலை 9.30 மணிமுதல் குருகுல அறநெறி வித்தியாலயம் அங்குரார்ப்பணம்- 10.30 மணிமுதல்**

குறிப்பு:- மாணவர்களின் நலன்கருதி எண்ணெய்க்காப்பு சாத்துவதற்கு விசேட ஒழுங்குகள் செய்யப் பட்டுள்ளது. அடியார்கள், மாணவர்கள் தாங்கள் எண்ணெய்க்காப்பு சாத்தும் தினம் அன்று சைவ போஷனம் இருத்தல் அவசியமாகும்.

## மண்டலாபிஷேகம் 48 தினங்கள் நடைபெறும்

| | | |
|---|---|---|
| தினமும்... | மாலை 4.30 மணி அபிஷேகம் | மாலை 6.30 மணி இலட்சார்ச்சனை |
| | மாலை 5.30 மணி கலை நிகழ்வுகள் | மாலை 7.00 மணி- மாணவர்களுக்கான ஊக்குவிப்பு |

அடியார்கள், மாணவர்கள் பூர்வாங்க கிரியைகள், எண்ணெய்க்காப்பு மற்றும் மஹா கும்பாபிஷேக ஆராதனைகளில் கலந்து கொண்டு தரிசித்து திருவருளுக்கு பாத்திரமாகுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.



**இங்ஙனம்**

**சந்நிதாச்சார்யார்,**


**சிவஸ்ரீ சபா . வாசுதேவக்குருக்கள்**

**குருமுதல்வர்,**

**வீணாகான குருபீடம், சித்தன்கேணி.**



# "அப்பர் திருமுறை சுட்டும் மணி நாகேச்சரம் ஆத்தாள் உறை நயினையம்பதியே"



**மணிநாகேச்சர மகிமை**

இங்கு காணும் நாகாதிபதி ஆதிசேடனின் யோக சமாதியும் நாகேந்திரப் பதவி பெற்ற சுரபதி இந்திரனுக்கு நல்கிய போக போக்கியங்களும் மறுவாழ்வும் எண்ணாயிரம் கோடிசுரர்க்கு அதிபதிப் பேறும் தந்து புவியில் போக சமாதியையும் காட்டா நிற்கும் நினைத்தற்கரிய, சிந்தித்தற்கரிய, வந்தித்தல், பந்தித்தற்கரிய ஏகசிவையின் பேராட்சித் தலமாக மணிநாகேச்சரம் காணப்படுகின்றது.

பஞ்சபூத் வழிபாடு, சூரிய, சந்திர, அக்கினி வழிபாடு, சப்த சமுத்திர, சப்த ஆறுகளின் படுக்கை, சப்த கடல்களின் பிரவாகம், சப்த தீவுகளதும் அருள்வீச்சு, உலகில் இருக்கக்கூடிய இன்றும் நேரடியாகக் காணக்கூடிய அதியற்புத கீர்த்தியின் அதிஉச்ச தலமாக மணி நாகேச்சரம் என்ற நயினை நாகம்மாள் பீடம், மணிப்பீடம் விளங்குவது பரவலான பேராய்விற்கும், அருள்மாட்சிக்கும் சான்றாக நிற்றல் உலகில் எங்கும் காண முடியாது என்பதும் காண்க. ஆபுத்திரன் சமாதியின் எல்லையில் அமைந்து அமுதம் பொழியும் அமுதசுரபி, ஞானசுரபியான கௌதம புத்தர் வதிந்து வழிபட்ட யோகஞான பீடம் வடபாலமைந்த கருடனிருந்த பாறை பாம்பு சுற்றிய கல், தென்பால் காணும் தில்லை மகாகாளியின் பிடாரி ஆட்டத்தின் பேரெல்லை, அம்பாள் தீர்த்தமாம் அருள் நல்கும் அமிர்தபுஷ்பகரணி, பெரியானைக்குட்டி, சித்தானைக்குட்டி, நவநாதர் உள்ளத்தைக் கொள்ளை கொண்ட நயினைச் சித்தர் சமாதி, ஐயப்பன் வளாகத்தில் காணும் குரு பாபா சமாதி வழிபாடு, உலகின் மூலை முடுக்குகளில் இருந்து வரும் யாத்திரிகப் பெருமக்களுக்கு பேரருள் விருந்து எனலாம்.

ஞானத்தின் திருவுருவான ஞானசம்பந்தர் சுவாமிகள் தாம் பாடிய நாகேஸ்வரப் பதிகத்தில் இராவணனைக் கூறவந்த செய்தியில், "ஓயாத அரக்கன் ஒடிந்தலற" என்ற தொடரில் "நாகேஸ்வரத்தாயே" என்று சுட்டுவர். இதன் வழி ஞாலத்தின் முகமாகக் காணும் நயினையம்பதியும், பண்டைய நாகேச்சரமும் ஈழத்தின் பிரதான திருத்தலம் என்பது அதன் நீண்ட பல வரலாற்றின் கண்காண முடியும்.

உலக நாகரிகத்தினதும், பண்பாட்டினதும் பிதாமகர்களாக விளங்கும் நாகர் வரலாறு மிக ஆழமானது. மணிநாக ஈஸ்வரத்தையும் மணிநாக தீவையும், மணிநாக அரசர்கள் நீண்டகாலம் பரிபாலனம் செய்தமை அவர்கள் வரலாற்றால் அறியக்கிடைக்கின்றது. இவர்களுள் குகாதரனும் குலாதரநாகனும் மணிநாக முடியரசர்களும் ஒருவராகவே வரலாற்றால் கூறப்படுதல் காணலாம்.

தொன்மைச் சிவ வழிபாட்டில் இவர்களது செயற்பாடுகள் உரைத்தற்கரியன. சாத்தனார் அன்னையை "பெரியோள்" எனச் சுட்டுவதும் மணிமேகலா தெய்வ பிரசன்னத்தில் மணித்தீவும், மணிப்பீடமும் முக்கியமாகக் காணப்படுகின்றன. இந்திரன் அமைத்த சக்திப் பீடமே மணித்துவீபத்தில் பின்னாளில் மணி ஆசனப் போராக நாக அரசர்களால் மேற்கொள்ளப்பட்டது. மணிபல்லவம், மணித்துவீபம், மணிப்புரம், மணி நாகேச்சரம், மணிப்பீடம், மணி நாகதீவு, நாக நயினாதீவு, நயினாதீவு என்ற பெயர்களால் அழைக்கப்படுவது இன்றைய நயினையம்பதியேயாகும். நாகதீவு எனும் சொல்லின் பாளி மொழித்திரிபே நயினாதீவு ஆகும்.

நாகேச்சரத்து இறைவன் நாகேஸ்வரன், நாகராஜேஸ்வரன், நாகராஜராஜேஸ்வரன், நாகதம்பிரான், நாகநயினார், நாகேச்சரத்தான், நாகபுரத்தான் எனவும் இறைவி நாகேஸ்வரி, ஸ்ரீபுவனேஸ்வரி, நாகராஜேஸ்வரி, நாகம்மாள், நாக பரமேஸ்வரி, சிவநாகபரமேஸ்வரி, ஏகசிவை, நாகராஜராஜேஸ்வரி என்றும் நாகபுரத்தாள் என்றும் இந்நாளில் (நாகத்தை அணிகலனாக அணிந்தவள்) நாகபூஷணி என்றும் நாகம் பூசித்ததால் நாகபூஜினி என்றும் அழைக்கப்படுதல் காணலாம்.

தீர்த்தத்தால் அருங்கீர்த்தி மிக்க இத்தலத்தைத் தரிசிப்பவர்க்குப் போக பாக்கியங்களும், யோக பாக்கியங்களும் கிடைப்பது உறுதி. சாப விமோசனம் பெற்ற போக தேவேந்திரன் மறுவாழ்வு பெற்று நாகேந்திரன் என்ற திருநாமம் பூண்டு அன்னை அருளால் எண்ணாயிரம் கோடி தேவர்க்கும், முப்பத்து முக்கோடி தேவாதிபதிகட்கும் தலைவனானான் என்பது தேவி பாகவதத்தாலும், புவனேஸ்வரி மான்மியத்தாலும் பிற்காலத்தெழுந்த நயினை மாண்மியம் என்ற வரலாற்றாலும் பெறப்படும். மகாகவி நயினை ஸ்ரீ நாக மணிப்புலவரது ஞானகாவியமான "நயினை மாண்மியத்தால்" பெறப்படும் அரிய விடயங்களாகும்.

யோக மோட்சமானது யோகேந்திர பூபதியாக விளங்கும் ஆதிசேடனால் தரப்படுவது. அன்னையின் பேரருளில், திளைத்து தனது ஆயிரம் பணாமுடியை-ஐந்தலை அரவாக சுருக்கி ஊழியைக்கடந்து நின்று இன்றும் நயினையம்பதியில் ஆதிசேடன் போற்றி நிற்பது ஸ்ரீபுவனேஸ்வரியின் பீடமாட்சியை உலகம் காண வைக்கின்றது. ஆதிசேடனுக்கு பதினான்கு உலகைத் தாங்கும் பதமும் பதஞ்சலியாகத் தில்லையில் யோக சூத்திரங்களை அருளும் பதமும், என்றும் நயினையில் நின்று பேரருள் வியப்பை காட்டும் பதமும் ஸ்ரீபுவனேஸ்வரியால் தரப்பட்டவை என்பதை தேவிபாகவதமும், புவனேஸ்வரி மான்மியமும், பிற்காலத்தில் ஆதிசேடன் அர்ச்சனை மாலையும் சொட்டுவதைக்காணலாம்.

சப்தங்களின் தோற்றம் பற்றி கூறும் இசை நூல்கள் சப்த தீவுகளை முதன்மைப்படுத்தும் செய்தி உணர்தற்கரியது. குமரிக் கண்டத்தின் ஒரு பகுதியாக நாவலந்தீவும் ஏனைய தீவுகளும் விளங்குவது காணலாம். ஏழிசையின் மத்ய (ஸ்ரீவித்ய) பீடமாகவும், ஸ்ரீவித்யா வாசனா பீடமாகவும் நயினாதீவு போற்றப்படுதல் காணலாம். நாவலந்தீவை அண்டிக் காணும் சிந்தாதேவியின் பீடம்-சுருதி மற்றும் இசைத்தோற்றங்களின் மூலமாக போற்றப்படுதல் சங்கீத கல்பத்ருமம் மூலம் அறியலாம். இப்பீடம் நாதாந்த பீடம், சிந்தாமணிப்பீடம, மணிப்பீடம், "ஓசை ஒலிகளின் உற்பத்திப் பீடம்" என இதன் வரையறைகளை எண்ணிலாத இசைக்கிரந்த நூல்கள் சுட்டுதல் காணலாம்.

சிந்தாதேவியிடமிருந்து கிடைத்த அக்ஷய பாத்திரத்தை ஆபுத்திரன் இங்கேயே பொய்கையில் இட்டு ஜலசமாதியுற்ற வரலாறும் சிந்திக்கற்பாலது. மணிமேகலை தனது அக்ஷய பாத்திரத்தை இப் "பெரியோள் உறையும் கோவில் பக்கத்தில் வைத்துத் தாங்கியதாக மணிமேகலையும் சுட்டு தல் காண்க.

இத்தலம் பற்றிய காலநிர்ணயம் இந்திய சிற்ப அகழ்வாராய்வு நிபுணர்களால் (எஸ்.நரசிம்மன்) 14,000 ஆம் ஆண்டுகட்கு மேற்பட்டதாகக் கருதப்படுகின்றன. உலகில் காணும் வேறு எந்த ஆலயத்திற்கும் நாக வழிபாடு மூலமான இத்துணை உயரிய சான்று கிடைக்கவில்லை என்பது தெளிவு என்பது இங்கு பதிவு செய்யப்படுகின்றது.

தேவார முதலிகள் மூவரில் சம்பந்தர் பாடிய திருநாகேச்சரப்பதிகம் சுட்டும் தலம் குறிப்பாக காவிரியின் தென்பால் குறிக்கப்படுதல் காணலாம். ஆனால் இவர்களுள் மூத்தவரான அப்பர் சுவாமிகள் சுட்டும் நாகேச்வரப் பதிகங்கள் காவிரியின் தென்கரை நாகேச்வரத்தைச் சுட்டவில்லை என்பதும் அவர் சுட்டும் நாகேஸ்வரம் நாவலந்தீவின் தென்கிழக்கே காணப்படும் மணி நாகேஸ்வரத்திற்கு உரியன என்பதும் இங்கு கவனித்தற்பாலது.

"நாவலம் பெருந்தீவினில் வாழ்பவர்
மேவிவந்து வணங்கி வினையொடு
பாவமாயின் பற்றறு வித்திடும்
தேவர் போற்றிரு நாகேச்சரவரே"
"சந்திரன்னொடு சூரியர் தாமுடன்
வந்து சீர்வழிபாடுகள் செய்த பின்
ஐந்தலை அரவின் பணி கொண்டருள்
மைந்தர் போலும் மணிநாகேச்சரவரே"
"முறை முறையமர் கூடி முடிகளாதல் வணங்க நின்ற
நறவமர் கழலர் போலும் நாக வீச்சரவனாரே"
"ஆர்த்து வந்துலகத்தவராடிடுந்
தீர்த்தர் போற்றிரு நாகேச்சரவரே"
"வேலை வாய் வந்தெழுந்த....
நஞ்சணிமிடற்றர் போலும் நாக வீச்சரவனாரே"
"ஐந்தலையரவர் போலும் நாக வீச்சரவனாரே"

என்பது அப்பர் திருமுறைகள் மூலம் பெறப்படும் அரிய கருத்து நிதியங்களாகும். இக்கருத்துக்கள் ஏனைய தேவார முதலிகள் இருவராலும் முன்வைக்கப்படவில்லை. இவர்கள் பாடிய நாகேச்சரம் வேறு, அப்பர் பாடிய நாகேச்சரம் வேறு என்பது பெறப்படும்.

நாக இனத்தைச் சேர்ந்த நாவலந்தீம் பொழில் தமிழர்கள் கடலிலே மேவிவந்து வழிபட்ட தலமாகவே "இம்மணி நாகேச்சரம்" விளங்கியது. இதனை மணிமேகலை முதலாய தமிழ்க்காப்பியங்களின் வழியறியலாம். 16 ஆம் நூற்றாண்டில் தமிழக ஈழக்கரையோரங்களில் வளர்ச்சியடைந்த கிறிஸ்தவமும் தமிழர்களின் நாகேச்சர வழிபாடு நெறியையும், அவர்களது மணிநாகேச்சர வருகையையும் ஒட்டியே கச்சதீவில் அந்தோனியார் வழிபாட்டை ஏற்படுத்தி இருக்கலாம்.

கில் பண்டையில் நாவலம் பெருந்தீவு அமைந்திருக்கக் காணலாம். நாகேச்வரம் சப்ததீவுகளுள் முக்கிய பகுதியாகலாம். மணிமேகலையிலும் ஈழவேந்தன் பற்றிய குறிப்பிலும் நாவலந்தீவு காணப்படுகின்றது. குமரிக்கண்டத்தின் பெரும் பகுதியாக நாவலந்தீவு இடம்பெறுதல் காணலாம். கடற்கோள் இப்பகுதி களை உருமாற்றியிருக்கலாம். ஆக நாகேஸ்வரம் இதில் எஞ்சிய பகுதிகளில் ஒன்றாகலாம். கிரேதாயுகத்தில் தேவர்களின் வழிபாட்டின் இறுதிக்கட்டத்தில் ஆதிசேடனது வழிபாடு மிக முக்கியமான ஒன்றாக நாகேஸ்வரப் பகுதியை சங்கமித்து நிற்பது அப்பர் சுட்டும் "ஐந்தலை அரவின் பணி கொண்டருள் மைந்தர்" என்ற தேவார அடிகள் மூலம் பெற அதிக வாய்ப்புள்ளது.

இவ்வாறான ஒரு கருத்தை ஏனைய தேவார ஆசிரியர்கள் விரிவாக சுட்டவில்லை என்பதும் இது நாகேச்வரத்தில் வழி பாடு இயற்றிய ஆதிசேடனை நினைவுறுத்துவதாகவே அமைந்துள்ளது என்பது பெறப்படும்.

இதன் சாராம்சத்தை தேவி பாகவதமும், ஸ்ரீபுவனேஸ்வரி மான்மியமும், பிற்காலத்தில் நயினை மான்மியமும் அழுத்தமாகச் சுட்டிக்காட்டின.

"முறைமுறை அமரர் கூடி முடிகளால் வணங்கி நின்ற நாக வீச்சரவனார்" தேவகோனதும் அவர் குழாத்தினதும் வழிபாட்டுச் சிறப்பைக்கூறும் இடம் மணிநாகேச்வரம் என்பதும் இன்னும் "வேலை வாய்வந்து எழுந்த நஞ்சணி கண்டர்" என்றும் நாக வீச்சரவனார்க்கு அடையாளம் காட்டுபவர் பிறிதோர் இடத்தில் "ஐந்தலை அரவர்" நாக வீச்சரவனார் என்பதால் மூல லிங்கமாக நயினையம்பதியின் தோற்றம் முன்னிறுத்தப்படுகின்றது.

தமிழர்களின் நாகவழிபாட்டை பிற்காலத்தில் தமிழகம் உட்பட பௌத்தர்களும் வைதீக சமயத்தவர்களும் கைக்கொண்டார்கள் எனலாம். அதன்வழியாகவே தமிழர்களின் நாகவழிபாடு சிறந்தோங்கிய மணிபல்லவமும் நாக தீபமாகப் பௌத்தர்களாலும் மணி நாகேஸ்வரமாக தமிழ்ச் சைவர்களாலும் மணிநாகர்களாலும் போற்றப்படுதலாயிற்றெனலாம். நாக வழிபாட்டினைப் பௌத்தர்கள் கைக்கொண்டமைக்கான சான்று கஸ்ள மணிமேகலையில் தெளிவுறக் காணலாம்.

மணிநாகதீவின் பதியமர்ந்த இறைவனையும் ஐக்கியமாகிய நிற்கும் பிற்கால ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் திருக்கோயிலையும் சுட்டுவது காணலாம்.

"உலகொடுவானும் தொழுதலால்
என்றென்றும் பற்றதாங் கருணை
பொழிதலால் அன்னை பராபரை
நாகபூஷணியாள்" - (நயினை மான்மியம்)

இசைப் பேரறிஞர், கலாவிபூஷன்
டாக்டர் நயினை வி.எம். நவரத்தினம்

# காணாமல் போனோர் அலுவலகத்தால் ஒருவரைக் கூடக் கண்டறிய முடியாது

## பிரபா கணேசன் கூறுகிறார்

(குருமன்காடு)

காணாமல் போனோர் தொடர்பான அலுவலகத்தினால் ஒருவரை கூட கண்டறிய முடியாது என ஜனாதிபதியின் விசேட அபிவிருத்தி செயலணியின் பணிப்பாளரும் முன்னாள் பிரதி அமைச்சருமான பிரபா கணேசன் தெரிவித்தார்.



நேற்று முன்தினம் இரவு வவுனியா வெளிக்குளத்தில் உள்ள அவரது அலுவலகத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே இவ்வாறு தெரிவித்தார். இது தொடர்பாக மேலும் அவர் தெரிவிக்கையில்,

அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பாக ஆரம்ப காலங்களில் வேறு கட்சியில் இருந்த போதும், அதன் பின் புதுக் கட்சி ஆரம்பித்த போதும் நான் பல போராட்டங்களை வெலிக்கடை சிறைச்சாலைக்கு முன்பு நடத்தியிருக்கின்றேன். அது போல் அரசியல் கைதிகளின்விடுதலை தொடர்பாக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிற்கு பாரிய அழுத்தத்தை கொடுத்திருந்த போதும் அந்த அழுத்தங்கள் சரியான முறையில் செயற்படுத்தப்படவில்லை.

காணாமல் போனவர்களின் விடயங்கள் மற்றும் வெள்ளைவான் விடயங்களை வைத்து அரசியலில் புகழாரம் பெற்றவர்கள் இன்று தேசிய அரசாங்கத்தில் இருந்து கொண்டு அவர்களை பற்றி பேசுவது இல்லை. எமது பிரதமர் ரணில் விக்கிரமசிங்க காணாமல் போனவர்கள் என்று யாரும் இல்லை என்றும், அவர்கள் இறந்து விட்டார்கள் இல்லாவிடின் வெளிநாட்டிற்கு தப்பி ஓடிவிட்டார்கள் என நேரடியாகவே கூறியிருக்கிறார்.

இப்படியான ஒரு நிலைமை இங்கு இருக்கின்ற போது காணாமல் போனவர்களுக்காக புதிய அலுவலகம்ஒன்றை அமைத்திருக்கிறார்கள். இந்த அலுவலகம்என்பதுவெளிநாட்டினை ஏமாற்றுவதற்கான கண்கட்டி வித்தை என்று தான் நான் பார்க்கின்றேன். இந்த காணாமல் போன அலுவலகத்தினால் ஒருவரை கூட கண்டறிய முடியாது என்று எனக்கு நன்றாக தெரியும்.

அத்துடன், வன்னிப் பிரதேசம் போரால் மிகவும் பாதிக்கப்பட்ட பிரதேசம். இந்த பிரதேசத்தில் மக்களின் வாக்குகளைப் பெற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் அரசியல் தீர்வு நோக்கி நகர்கிறார்கள். அவர்கள் சமஷ்டியைப் பெற்றுத் தருவதாக கூறுகிறார்கள். அரசியல் தீர்வு என்பது ஒரு புறமிருக்க, இந்த மக்கள் மிகவும் பொருளாதார ரீதியாக பாதிக்கப் பட்டுள்ளார்கள். அவர்களது அபிவிருத்தி பற்றி கவனம் செலுத்தப்படவில்லை. ஒரு இனத்தின் இருப்புக்கு அபிவிருத்தியும், அரசியல் கோரிக்கையும் இரண்டு தண்டவாளங்கள் போன்று சமாந்தரமாக செல்ல வேண்டும். ஆனால், அதை கூட்டமைப்பினர் செய்யவில்லை.

இந்த மக்களின் அபிவிருத்தியை முன்னெடுக்கவே நாம் வன்னியில் கால் பதித்துள்ளோம். இந்த மக்களுக்கு ஒரு மாற்றத்தை ஏற்படுத்த முடியும்.

இளைஞர்கள் அரசியலில் ஈடுபட வேண்டும். அபிவிருத்தியையும், அரசியல் கோரிக்கையையும் சமாந்தரமாக நகர்த்த வேண்டும். தேசிய கட்சியில் வன்னியில் தமிழர் ஒருவர் வர வேண் டும்.

அதன் மூலமே வன்னியின் அபிவிருத்தியை முன்னகர்த்த முடியும் என அவர் மேலும் தெரிவித்தார். (7-250)

# தபால் தொழிற்சங்கத்தினர் கவனயீர்ப்புப் போராட்டம்





கிளிநொச்சியில் தபால் தொழிற்சங்கத்தினர் கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்றை நேற்றைய தினம் முன்னெடுத்திருந்தனர்.

நேற்றுக்காலை 9.30 மணியளவில் கிளிநொச்சி தபாலகம் முன்பாக ஆரம்பிக்கப்பட்ட குறித்த போராட்டத்தில் கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களை சேர்ந்த தபால் ஊழியர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதன்போது பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய பதாகைகளையும் அவர்கள் ஏந்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (7-250)

# த.தே.கூ. தமிழ் மக்களுக்கு உரிமைகளை பெற்றுத் தந்துவிட்டு அமைச்சை பொறுப்பேற்கட்டும்

## அமைச்சர் அனந்தி தெரிவிப்பு


(கண்டாவளை)

"தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழ் மக்களுக்கு உரிமைகளை பெற்றுத் தந்து விட்டு அமைச்சுப் பதவியை பொறுப்பேற்கட்டும். இல்லையேல் அவர்கள் தமிழ் மக்களுக்கு செய்யும் துரோகமாகவே தமிழ் மக்கள் இதனை பார்ப்பார்கள்" என வடக்கு மாகாண மகளிர் விவகார அமைச்சர் அனந்தி சசிதரன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி, முல்லைத் தீவு மாவட்டங்களின் பெண்கள் அமைப்பினர் ஏற்பாடு செய்திருந்த மக்கள் மன்றம் நிகழ்வில் கலந்துகொண்டு ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனை தெரிவித்தார்.

இன்று மக்களின் அபிவிருத்தி திட்டங்கள் பலவற்றுக்கு தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களே தடையை ஏற்படுத்தி விடுகின்றனர். மாகாண அமைச்சின் திட்டங்கள் பலவற்றிலும் அவர்களின் தலையீடு காரணமாக தடைகள் ஏற்பட்டிருக்கின்றன. இந்த நிலையில் அமைச்சுப் பொறுப்புகளும் எடுப்பின் அது இன்னும் மோசமான நிலைமையையே ஏற்படுத்தும். சிங்கள மக்களுக்கோ முஸ்லிம்மக்களுக்கோ உரிமை தொடர்பாக அரசியல்வாதிகள் ஒன்றிணைந்து செயற்படுகின்றனர். ஆனால் தமிழ் மக்களுக்கு சரியான தலைமை இன்றி அவர்கள் அரசியல் அநாதையாய் உள்ளனர். எனவே தமிழ் மக்களுக்கான உரிமைகளை பெற்றுத் தந்து விட்டு அந்தக் கட்சிகளுடனேயே இணைந்து அவர்கள் அமைச்சுப் பொறுப்புக்களை எடுத்துக் கொள்ளட்டும் எனவும் அனந்தி சசிதரன் மேலும் தெரிவித்தார்.

பெண்கள் சமகாலத்தில் எதிர்நோக்கும் சமூக அழுத்தங்களுக்கு தீர்வு காணும் வகையில் இந்த "மக்கள் மன்றம்" நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இதன் போது பெண்கள் அமைப்பின் பிரதிநிதிகளால் கோரிக்கைகள் அடங்கிய மனுக்களும் அனந்தி சசிதரனிடம் கையளிக்கப்பட்டிருந்தன. கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களின் பெண்கள் அமைப்பு பிரதிநிதிகள் பலரும் இந்நிகழ்வில் கலந்து கொண்டிருந்தனர். (7-315)




# பாண்டியன்குளம் மகா வித்தியாலயத்தின் பொன்விழா

(கண்டாவளை)

முல்லைத்தீவு மாந்தை கிழக்குப் பிரதேசத்தில் மிகவும் பழைமைவாய்ந்த பாடசாலைகளில் ஒன்றான பாண்டியன்குளம் மகா வித்தியாலயத்தின் பொன்விழா நிகழ்வுகள் நாளை மறுதினம் 28ஆம்திகதி இரண்டு அமர்வுகளாக இடம்பெறும்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் மாந்தை கிழக்குப் பிரதேசத்திற்குட்பட்ட மிகவும் பழைமை வாய்ந்த பாடசாலைகளில ஒன்றான பாண்டியன்குள மகா வித்தியாலயம் 1966ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு தனது கல்வி வளர்ச்சிப்போக்கில் பயணித்துக்கொண்டிருக்கினறது.

நாளை மறுதினம் 28ஆம் திகதி காலை 9 மணிக்கு பாடசாலை அதிபர் த. அருமைநாயகம் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் விருந்தினர்களாக வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், பாராளுமன்ற உறுப்பினர் சாந்தி சிறிஸ்கந்தராஜா மற்றும் வடக்கு மாகாண சபையின் பிரதி அவைத்தலைவர் கமலேஸ்வரன் வடக்கு மாகாண சபை உறுப்பினர் சு.பசுபதிப்பிள்ளை மாந்தை கிழக்கு பிரதேச செயலர் செல்வி றஞ்சனா நடராஜா, பாண்டியன்குளம் மகா வித்தியாலயத்தின் முன்னாள் அதிபர் சு.திருஞானம், பழைய மாணவனும் வைத்தியருமான ந.பரம்நாதன், ஆகியோர் கலந்து கொள்வர்.

1.30 மணிக்கு ஆரம்பமாகும் இரண்டாவது அமர்வின் வடக்குமாகாண கல்வி அமைச்சர் சர்வேஸ்வரன், வடக்குமாகாண விவசாய அமைச்சர் சிவநேசன், வடக்கு மாகாண சபை உறுப்பினர் து.ரவிகரன், மாகாண கல்விப் பணிப்பாளர் செ. உதயகுமார், மாவட்ட அரசாங்க அதிபர் ரூபவதி கேதீஸ்வரன் ஓய்வு பெற்ற அதிபர் துரைசிங்கம் உள்ளிட்டோர்கலந்து கொள்வர். (7-315)





ஒட்டுசுட்டான் தான்தோன்றீஸ்வரர் ஆலய வேட்டைத் திருவிழா நேற்று முன்தினம் மாலை நடைபெற்றது. இதன்போது ஆலயத்தில் இடம்பெற்ற பூசைகளைத் தொடர்ந்து எம்பெருமான் வேட்டைக்காக எழுந்தருளி சென்று வேட்டை முடிந்ததும் பக்தர்களுக்கு அருள்பாலித்தவாறு நெடுங்கேணி ஒட்டுசுட்டான் வீதிவழியாக எழுந்தருளி ஆலயத்தை வந்தடைந்ததும் பூசை வழிபாடுகள் இடம்பெற்றன. பல நூற்றுக்கணக்கான அடியவர்கள் வேடுவர் உடையணிந்து தமது நேர்த்திக்கடன்களை பூர்த்தி செய்தனர். பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் வேட்டை திருவிழாவில் பங்குகொண்டனர். (7-281)

# வீதியைப் புனரமையுங்கள்!

## பிரதேச மக்கள் கோரிக்கை

(கண்டாவளை)

கிளிநொச்சி முக்கொம்பன் அரசபுரம் வீதியினை புனரமைத்து தருமாறு பிரதேச மக்கள் கோரியுள்ளனர்.

கிளிநொச்சி முக்கொம்பன் கிராமத்திலிருந்து அரசபுரம் ஊடாக செல்லும் பிரதான வீதி இதுவரை எதுவித புனரமைப்பு பணிகளும் இன்றி நீண்டகாலமாக காணப்படுகின்றது.

இவ்வாறு குறித்த வீதி புனரமைக்கப்படாமையினால் இங்குள்ள பொதுமக்கள், பாடசாலை மாணவர்கள் எனப்பலரும் சொல்லொணாத் துன்பங்களை அனுபவித்து வருகின்றனர். கடந்தகால யுத்த காலத்தில் புதிதாக அமைக்கப்பட்ட இவ்வீதியூடாக பெருமளவான பொது மக்கள் பயணித்து வருகின்றனர்.

எனவே குறித்த வீதியை புனரமைத்து தருமாறும் பிரதேச மக்கள் கோரியுள்ளனர். (7-315)




## தி.மு.கவினர் கறுப்புக்கொடி ஆர்ப்பாட்டம்

# ஆளுநரின் சிறை எச்சரிக்கை மிரட்டும் தொனியில் உள்ளது

## தினகரன் சுட்டிக்காட்டு

(கரூர்)

ஆளுநரின் சிறை தண்டனை எச்சரிக்கை மிரட்டும் தொணியில் இருக்கிறது என்று டி.டி.வி.தினகரன் நிருபர்களிடம் அளித்த பேட்டியில் தெரிவித்துள்ளார்.

கரூரில் நடைபெற்ற பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதற்காக அம்மா மக்கள் முன்னேற்றக் கழக துணை பொதுச் செயலாளர் டி.டி.வி.தினகரன் நேற்று கரூர் வந்தார்.

இதையடுத்து தான்தோன்றி மலைப் பகுதியில் கட்சி கொடியேற்றி வைத்த அவர், திறந்த வானில் நின்றவாறு நிர்வாகிகள் மற்றும் தொண்டர்களின் வரவேற்பை ஏற்றுக்கொண்டார். இந்நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சர் செந்தில் பாலாஜி, கரூர் மாவட்ட அவைத் தலைவர் லோகநாதன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

பின்னர் டி.டி.வி.தினகரன் நிருபர்களுக்கு பேட்டியளித்தார். அப்போது நிருபர்கள் கேட்ட கேள்விக்கு அவர் அளித்த பதில் வருமாறு.

கே:ஆளுநரின் ஆய்வு பணியை தடுத்தால் 7 ஆண்டு சிறை தண்டனை விதிக்கப்படும் என ஆளுநர் மாளிகை எச்சரிக்கை விடுத்துள்ளதே?

ப: இது ஜனநாயக நாடா? அல்லது ஜனாதிபதி ஆட்சி நடைபெறும் பாகிஸ்தானா? என்று தெரியவில்லை. ஜனநாயக முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு ஆட்சி தமிழகத்தில் நடக்கிறது. இந்த ஆட்சி நமக்கு பிடிக்கிறதோ, இல்லையோ? குற்றம் சாட்டப்பட்ட ஆளுநர் சுற்றுப்பயணம், ஆய்வு மேற்கொள்வது தவறு. இதனை கண்டிக்கிறோம்.

ஆளுநர் மீது தமிழக மக்களுக்கு நம்பிக்கை இல்லை. தமிழகத்தில் எத்தனையோ ஆளுநர்கள் இருந்துள்ளனர். அவர்கள் எப்படி இருந்தார்கள் என்பது எல்லோருக்கும் தெரியும்.

தற்போது ஆளுநரின் சுற்றுப்பயணம்-ஆய்வை கண்டித்து ஜனநாயக முறையில் ஒரு அரசியல் கட்சி கறுப்பு கொடி காட்டி போராட்டம் நடத்துகிறது. இதற்காக வழக்கு தொடர்வோம் என்று சொல்லலாம். அதைவிட்டு விட்டு 7 வருடம் சிறை தண்டனை அளிப்போம் என்று கூறுவது மிரட்டும் தொணியில் உள்ளது.

கே:சேலம்-சென்னை 8 வழிச்சாலை திட்டம் பற்றி உங்கள் கருத்து என்ன?

ப:சேலம்-சென்னை 8 வழிச்சாலை திட்டம் தொடர்பாக மக்களின் அச்சத்தை போக்கும் வகையில் விளக்க வேண்டும். சேலம் முதல்வரின் சொந்த மாவட்டம். எனவே அவரே நேரிடையாக மக்களை சந்தித்து விளக்கலாம்.

கே:ஆளுநரை கண்டித்து போராட்டம் நடத்துவீர்களா?

ப:என்னைப் பொறுத்த வரை மக்கள் பிரச்சினைகள், மக்கள் விரும்பாத திட்டங்களை எதிர்த்து போராடுவதைத்தான் விரும்புகிறேன். ஆளுநர் விவகாரத்தை பெரிதுபடுத்த விரும்பவில்லை இவ்வாறு அவர் கூறினார். (7)

# காவிரி நதி நீர்ப்பிரச்சினையில் தமிழக அரசுடன் மோதக்கூடாது

## கர்நாடக முதல்வருக்கு தேவகௌடா அறிவுரை

(பெங்களூர்)

காவிரி நதிநீர் பிரச்சினையில் தமிழக அரசுடன் மோதல் போக்கை கடைப்பிடிக்க வேண்டாம் என்று முதலமைச்சர் குமாரசாமிக்கு முன்னாள் பிரதமர் தேவகௌடா அறிவுரை வழங்கி உள்ளார்.

தமிழ்நாட்டுக்கும் கர்நாடகவுக்கும் உள்ள காவிரி நதி நீர் பங்கீடு பிரச்சினையை தீர்ப்பதற்காக உச்ச நீதிமன்ற உத்தரவுப்படி மத்திய அரசு "காவிரி நதிநீர் ஆணையம்" உருவாக்கியுள்ளது.

இந்த ஆணையத்தில் உறுப்பினராக இருந்து செயற்படுபவர்களின் விபரங்களை மத்திய அரசு, தமிழக அரசு, புதுச்சேரி, கேரளா ஆகியவை தெரிவித்து விட்டன.

ஆனால் கர்நாடகா மட்டும் இன்னமும் உறுப்பினர்களின் பெயர்களை அறிவிக்காமல் உள்ளது.

காவிரி ஆணையம் அமைக்கப்பட்டது பற்றி பாராளுமன்றத்தில் விவாதம் நடத்தி முடிவு செய்ய வேண்டும் என்று கூறி வரும் கர்நாடக முதலமைச்சர் குமாரசாமிக்கு அறிவுரை வழங்கினார். (7)

# ஆளுநர் மாளிகை முற்றுகை ஸ்டாலின் உட்பட 1,111 பேர் கைது

## வழக்கும் பதிவு செய்யப்பட்டது



(ஆலந்தூர்)

ஆளுநர் மாளிகையை முற்றுகையிட சென்ற மு.க. ஸ்டாலின் உட்பட தி.மு.க. வினர் 1,111 பேர் மீது 2 பிரிவுகளின் கீழ் பொலிஸார் வழக்குப்பதிவு செய்து உள்ளனர்.

நாமக்கல் மாவட்டத்தில் ஆய்வு மேற்கொண்ட தமிழக ஆளுநர் பன்வாரிலால் புரோகித்துக்கு எதிர்ப்பு தெரிவித்து, கறுப்பு கொடி காட்டி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட தி.மு.க. நிர்வாகிகள் உட்பட 293 பேர் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர்.

இதை கண்டித்தும், ஆளுநர் பதவி விலகக் கோரியும் தி.மு.க. செயல்தலைவர் மு.க. ஸ்டாலின் தலைமையில் முன்னாள் மத்திய அமைச்சர் ஆ.ராசா, தி.மு.க. எம்.எல்.ஏ.க்கள் மா.சுப்பிரமணியன், ஜெ.அன்பழகன், தா.மோ. அன்பரசன், வாகை சந்திரசேகர், பி.கே.சேகர்பாபு உட்பட ஆயிரக்கணக்கான தி.மு.க.வினர் கறுப்பு கொடியுடன் சைதாப்பேட்டை நீதிமன்றம் அருகில் இருந்து ஆளுநர் மாளிகைக்கு பேரணியாக சென்று முற்றுகையிட முயன்றனர்.

அப்போது பாதுகாப்பு பணியில் இருந்த பொலிஸார் ஆளுநர் மாளிகைக்கு அனுமதி இன்றி செல்லக்கூடாது என்று கூறி அவர்களை தடுத்தனர்.

இதையடுத்து தி.மு.க. வினர் வீதியில் அமர்ந்து மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர். பின்னர் மு.க.ஸ்டாலின் உட்பட அனைவரும் கைது செய்யப்பட்டு, மாலையில் விடுவிக்கப்பட்டனர்.

இந்த நிலையில் கிண்டி பொலிஸ் அதிகாரி குமார், ஆளுநர் மாளிகையை முற்றுகையிட சென்ற தி.மு.க. செயல் தலைவர் மு.க.ஸ்டாலின் உட்பட தி.மு.க.வினர் 1,111 பேர் மீது இந்திய தண்டனை சட்டப்பிரிவு 143(முன் அனுமதி இன்றி ஒன்று கூடி போராட்டம் செய்தல்), 188 (போக்குவரத்துக்கும் பொது மக்களுக்கும் இடையூறு செய்தல்) ஆகிய 2 பிரிவுகளின் கீழ் வழக்குப்பதிவு செய்தார். (7)

# நைஜீரியாவில்

# 86 பேர் ப...

(ஜோஸ்)

மத்திய நைஜீரியாவில் இரு பிரிவினருக்கு இடையே ஏற்பட்ட கலவரத்தில் 86 பேர் கொல்லப்பட்டுள்ளனர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நைஜீரியாவின் மத்திய பகுதியில் உள்ள பிளாட்டோ



# சட்டவிரோதமாக நு...

# உடனடியாக நாடு க...

## ஜனாதிபதி ட்ரம்ப் வலியு...

(வோஷிங்டன்)

சட்டவிரோதமாக அமெரிக்காவிற்குள் நுழைந்தவர்களை, எந்தவொரு நீதிமன்ற நடைமுறையுமின்றி உடனடியாக நாடுகடத்த வேண்டும் என, அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

உள்நாட்டு மற்றும் சர்வதேச அழுத்தத்தை தொடர்ந்து சட்டவிரோதமாக அமெரிக்காவிற்குள் நுழையும் குடியேற்றவாசிகளிடமிருந்து குழந்தைகளைப் பிரிக்கும் அமெரிக்க கொள்கையிலிருந்து ட்ரம்ப் அண்மையில் பின்வாங்கினார்.

இந்நிலையில், இந்த புதிய அறிவிப்பை நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை தனது டுவிட்டர் பக்கத்தில் அவர் வெளியிட்டுள்ளார்.

குடிவரவு மற்றும் சுங்க அமுலாக்க பிரிவினரால் கைது செய்யப்படும் ஆவணமற்ற குடியேற்ற வாசிகளுக்கு அமெரிக்க குடிவரவு சட்டத்தின் கீழ் சில உரிமைகள் வழங்கப்படுகிறது. அதன்படி பெரும்பாலான சந்தர்ப்பங்களில் அவர்கள் நாடு கடத்தப்படுவதற்கு முன்னர் முழு விசாரணைக்காக குடியேற்ற நீதிபதியின் முன்னால் முன்னிலைப்படுத்தப்படுவர்.

இந்நிலையில், குடிவரவு சட்டத்தின் கீழ் வழங்கப்படும் இந்த உரிமைகளை தடுக்கும் வகையில் ட்ரம்பின் அறிவிப்பு வெளியாகியுள்ளது.

யாரேனும் நாட்டிற்குள் வந்தால்,

# உலகின் அழகற்ற நாய் பே...

## பட்டத்தை வென்ற இங்கிலிஷ்...

(நியூயோர்க்)

அமெரிக்காவில் நடைபெற்ற உலகின் மிக அழகற்ற நாய் போட்டியில் இங்கிலிஷ் புல்டோக் வகையைச்சேர்ந்த சீசா சீசா வெற்றி பெற்று பட்டத்தை கைப்பற்றியது.

அமெரிக்காவின் கலிபோர்னியா மாகாணத்தில் உள்ள பெடலுமா நகரில் ஆண்டுதோறும் அழகற்ற நாய்களுக்கான போட்டி நடைபெறும். இப்போட்டியில் உலகின் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த வித்தியாசமான நாய்கள் பங்குபெறும். அருவருப்பான தோற்றம் கொண்ட நாய்களுக்கிடையே கடுமையான போட்டி நிலவும். அதில், மிகவும் அசிங்கமான நாயை நடுவர்கள்



# வெளிநாடு



# ில் கலவரம்!

# ுகொலை

மாகாணத்தின் பரிகின் லாடி பகுதியில் இரு இனக் குழுக்களுக்கு இடையில் நேற்று மோதல் ஏற்பட்டது. இதையடுத்து, இரு பிரிவினரும் ஒருவரை ஒருவர் சரமாரியாக தாக்கிக் கொண்டனர்.

அப்போது ஏற்பட்ட கலவரத்தில் சிக்கி 86 பேர் பலியாகி உள்ளனர். மேலும் பலர் காயம் அடைந்துள்ளனர்.

5 0இற்கு மேற்பட்ட வீடுகள் சூறையாடப்பட்டுள்ளது என முதல் கட்டமாக தகவல் வெளியாகியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். கலவரம் ஏற்பட்ட பகுதிகளில் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

நைஜீரியாவில் நிலப் பிரச்சினை தொடர்பாக பல் வேறு இனக் குழுக்களுக்கு இடையில் மோதல்கள் நடப்பது வழக்கம். கடந்த 2009 ஆம் ஆண்டில் இது போன்று நடைபெற்ற மோதலில் ஆயிரக்கணக்கானோர் பலியாகினர் என்பது குறிப்பிடத்தக்கது. (7)

# நுழைந்தவர்களை

# கடத்த வேண்டும்

# ியுறுத்து

அவர்கள் நீதிபதிகளின் முன்னோ அல்லது நீதிமன்றத்திலோ முன்னிலைப்படுத்தப்படாது உடனடியாக அவர்கள் எங்கிருந்து வந்தார்களோ அங்கேயே திருப்பி அனுப்பப்பட வேண்டும் என ட்ரம்ப் குறிப்பிட்டுள்ளார்.

அவரது இந்த டுவிட்டர் பதிவு, ட்ரம்பின் சொந்த கட்சியான குடியரசு கட்சிக்குள்ளேயே பல விமர்சனங்களை தோற்றுவித்துள்ளது.

இதேவேளை, ட்ரம்ப் நிர்வாகத்தின் குடியேற்ற கொள்கைகளுக்கு எதிராக பல ஆர்ப்பாட்டங்களும் வலுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (7)



# வெடிகுண்டு தாக்குதல் நடத்தியமை கோழைத்தனமான செயலாகும்

## சிம்பாவே ஜனாதிபதி தெரிவிப்பு

(ஹறாரே)

தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் வெடிகுண்டு தாக்குதல் நடத்தியமை கோழைத்தனமான செயல் என்று சிம்பாவே நாட்டு ஜனாதிபதி Emmerson Mnangagwa தெரிவித்துள்ளார்.

சிம்பாவே நாட்டின் ஜனாதிபதித் தேர்தல் அடுத்த மாதம் நடைபெறவுள்ள நிலையில் இதற்கான தேர்தல் பிரசாரங்கள் தற்போது சூடு பிடித்துள்ளது.

இந்த நிலையில், நாட்டின் தென்மேற்கு பகுதியில் உள்ள புலாவாயோ நகரில் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற தேர்தல் பிரசார கூட்டத்தில் ஜனாதிபதி Emmerson Mnangagwa கலந்து கொண்டிருந்தார்.

இதன்போது, தனது உரையை முடித்துவிட்டு மேடையில் இருந்து கீழே இறங்கிய எம்மர்சனை நோக்கி ஒரு வெடிகுண்டு வீசப்பட்டது.

எனினும், வெடிகுண்டு ஜனாதிபதியின் மீது படாத வகையில் அங்கிருந்த பாதுகாவலர்கள் அவரைக் காப்பாற்றினர். அதேநேரம், இந்த தாக்குதலில் துணை ஜனாதிபதிகளில் ஒருவரும் மற்ற கட்சியினர் சிலரும் படுகாயம் அடைந்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உயிராபத்துக்கள் எதுவும் இந்தக் குண்டுத் தாக்குதலினால் ஏற்படவில்லை என்றாலும் இந்த விடயமானது தற்போது சிம்பாவேயில் பெரும் பரபரப்பையே ஏற்படுத்தியுள்ளது.

மேலும், இவ்வாறு தேர்தல் பிரசார கூட்டத்தில் வெடிகுண்டு தாக்குதல் நடத்தியமை கோழைத்தனமான செயல் என சிம்பாவே ஜனாதிபதி தெரிவித்துள்ளார். (7)

# எதியோப்பியாவில் பிரதமரை குறிவைத்த குண்டு வெடிப்பில் படுகாயமடைந்த 2 பேர் பலி

(அடிஸ் அபாபா)

எதியோப்பியாவில் பிரதமரை குறிவைத்து நிகழ்த்திய குண்டு வெடிப்பில் படுகாயம் அடைந்து சிகிச்சை பெற்று வந்தவர்களில் 2 பேர் பலியானதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

எதியோப்பியா நாட்டின் தலைநகரான அடிஸ் அபாபாவில் கடந்த சனிக்கிழமை ஒரு பேரணியின் நிறைவில் நடந்த பொதுக்கூட்டத்தில் அந்த நாட்டின் பிரதமர் அபிய் அகமது (வயது-41) கலந்து கொண்டு பேசினார்.

அவர் பேசி முடித்ததும், அங்கே ஒரு குண்டுவெடிப்பு நடந்தது. மேடையில் இருந்த பிரதமரை குறிவைத்து நடத்தப்பட்ட குண்டுவெடிப்பில், அவர் காயமின்றி தப்பினார்.

ஆனால் இந்த குண்டு வெடிப்பில் 153 பேர் படுகாயம் அடைந்தனர். அவர்கள் உடனடியாக வைத்தியசாலைகளில் சேர்க்கப்பட்டனர். அவர்களில் ஒருவர் சிறிது நேரத்தில் இறந்தார்.



இந்த நிலையில், மேலும் ஒருவர் நேற்று முன்தினம் இறந்தார். இதனால் குண்டு வெடிப்பில் பலியானவர்களின் எண்ணிக்கை 2 ஆக உயர்ந்தது.

இதுபற்றிய தகவலை வெளியிட்ட அந்த நாட்டின் சுகாதார அமைச்சர் அமிர் அமன், "குண்டுவெடிப்பில் மேலும் ஒரு எதியோப்பியர் இறந்துவிட்டார் என்று தகவல் வந்து உள்ளது என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன். அவரது குடும்பத்துக்கு ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக்கொள்கிறேன்" என்று கூறினார்.

இந்த குண்டுவெடிப்பில் 6 பேரை பிடித்து பொலிஸார் விசாரித்து வருகின்றனர். பாதுகாப்பு குளறுபடிகள் தொடர்பாகவும் 8 பேரை பிடித்து பொலிஸ் காவலில் வைத்து விசாரிப்பதாக அடிஸ் அபாபா நகர துணை பொலிஸ் அதிகாரி தெரிவித்தார். (7)

# போட்டியில்

# ிஷ் புல்டோக்



தேர்வு செய்து வெற்றி பெற்றதாக அறிவிப்பர்.

இந்நிலையில், இந்தாண்டு நடைபெற்ற உலக அழகற்ற நாய்களுக்கான போட்டியில் அமெரிக்காவின் மிசோரியைச் சேர்ந்த நாய் வெற்றி பெற்று பட்டத்தை கைப்பற்றியது. இங்கிலிஷ் புல்டோக் வகையைச் சேர்ந்த இந்த நாய் பார்ப்பதற்கு மிகவும் அருவருப்பான தோற்றத்தை கொண்டுள்ளது. சீசா சீசா என்ற பெயர் கொண்ட நாயின் நாக்கை பார்ப்பதற்கு மிகவும் அழகற்றதாக உள்ளது.

சென்ற ஆண்டு மார்தா என்ற நாய் வெற்றி பெற்றது. இந்த ஆண்டு வெற்றி பெற்ற சீசா சீசாவிற்கு வெற்றி கோப்பையுடன் ஆயிரத்து ஐநூறு டொலர் பரிசுத் தொகையும் அத்துடன் நியூயோர்க்கில் நடைபெறும் என்.பி.சி. டுடே ஷோ என்ற நிகழ்ச்சியில் கலந்து கொள்வதற்கான வாய்ப்பும் அளிக்கப்படும். (7)

# மீண்டும் துருக்கி ஜனாதிபதியாகும் தாயிப்



(அங்காரா)

துருக்கி ஜனாதிபதி பதவிக்கான தேர்தலில் போட்டியிட்ட தாயிப் எர்டோகன் மீண்டும் ஜனாதிபதி பதவியை கைப்பற்றியுள்ளார்.

550 இடங்களை கொண்ட துருக்கி நாட்டு பாராளுமன்றத்துக்கு கடந்த 01.11.2015 அன்று தேர்தல் நடைபெற்றது. பாராளுமன்றத்தின் தற்போதைய பதவிக்காலம் வரும் அடுத்தாண்டு வரை இருக்கும் நிலையில், முன்னதாகவே தேர்தலை நடத்த ஜனாதிபதி தாயிப் எர்டோகன் முடிவெடுத்தார்.

அதன்படி, ஜனாதிபதி தேர்தலின் போது பாராளுமன்றத்திற்கும் சேர்த்து தேர்தல் நடத்தும் மசோதா பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. ஜனாதிபதித் தேர்தலில் தனக்கு செல்வாக்கு நிலவுவதால், அதன் மூலம் பாராளுமன்றத்திலும் அதிக இடங்களை வெல்லலாம் என்ற கணக்கில் எர்டோகன் இந்த ஏற்பாடுகளை செய்திருந்தார்.

இதற்கிடையே, ஜனாதிபதி மற்றும் பாராளுமன்ற தேர்தல் வாக்குப்பதிவு நேற்றுக்காலை தொடங்கியது.

ஏ.கே. கட்சி சார்பில் தாயிப் எர்டோகனும் குடியரசு மக்கள் கட்சி சார்பில் முஹாரம் இன்ஸ் ஆகியோருக்கு இடையே கடும் போட்டி நிலவியது.

இந்நிலையில், வாக்குப் பதிவு முடிந்த நிலையில், வாக்குகளை எண்ணும்பணி நடைபெற்றது.

இதில் 98 சதவீத வாக்குகள் எண்ணப்பட்டுள்ள நிலையில் 53 சத வீதத்துக்கும் மேல் வாக்குகள் பெற்று தாயிப் எர்டோகன் வெற்றி பெற்றுள்ளார். (7)

## ஞானசார தேரருக்குப் பிணை

# மரண அச்சுறுத்தல்களை எதிர்கொண்டுள்ளேன்!

## சந்தியா எக்னெலிகொட தவிப்பு



(கொழும்பு)

ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொடவின் மனைவி சந்தியா எக்னெலிகொட, தான் புதிதாக அச்சுறுத்தல்களையும் மிரட்டல்களையும் எதிர்கொள்வதாகத் தெரிவித்துள்ளார்.

ஞானசார தேரர் விவகாரம் தொடர்பிலேயே தனக்கு மிரட்டல்கள் விடுக்கப்படுவதாக தெரிவித்துள்ள அவர் சமூக ஊடகங்கள் ஊடாகவே அதிக அச்சுறுத்தல்கள் விடுக்கப்படுவதாக அவர் தெரிவித்துள்ளார்.

பேஸ்புக் ஊடாக நாளாந்தம் அச்சுறுத்தல்களும் கொலைமிரட்டல்களும் விடுக்கப்படுவதாக அவர் தெரிவித்துள்ளார்.

உண்மையை அறியாமல் விபரங்களை அறிந்துகொள்ளாமல் மக்கள் என்னையும் எனது பிள்ளைகளையும் உளவியல் ரீதியில் சித்திரவதை செய்கின்றனர் என சந்தியா தெரிவித்துள்ளார்.

பொதுபலசேனாவின் ஞானசார தேரர் விவகாரத்திற்குப் பின்னர் அடையாளம் தெரியாத முகப்புத்தக பயனாளர்கள் மரண அச்சுறுத்தலை விடுக்கின்றனர்.

அவர்களில் பலர் ,எனது கணவர் விடுதலைப் புலிகளின் உளவாளி என்ற குற்றச்சாட்டை முன்வைத்து மிரட்டல் விடுக்கின்றனர் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

சில ஆண்கள் உண்மையை அறியாமல் ஆதரவற்ற பெண் மீது குற்றச்சாட்டுகளை சுமத்துகின்றனர்.

மகிந்த ராஜபக்ஷவும் கோத்தபாய ராஜபக்ஷவும் ஆட்சி புரிந்த வேளை இவற்றை மக்கள் மனதில் புகுத்தியுள்ளனர்.

அவை இன்றும் நீடிக்கின்றன என சந்தியா எக்னெலிகொட மனவருத்தத்துடன் தெரிவித்துள்ளார். (இ-7)

# மகிந்த ராஜபக்ஷ பிரதமரானால் ஜனாதிபதித் தேர்தல் தேவையில்லை

## வாசுதேவ எம்.பி.தெரிவிப்பு



(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தல் ஒன்றை நடத்தவிடாமல் ஆட்சியைக் கைப்பற்றும் முறைமையொன்று குறித்து மகிந்த அணி பாராளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

தற்போதைய அரசாங்கத்தை வீழ்த்துவதற்கு அரசாங்கத்துக்கு ஆதரவளிப்பவர்களை எந்தவகையிலாவது எதிரணியில் இணைத்துக் கொள்ள வேண்டும்.

பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படும் நிதி அறிக்கைகளை தோல்வியடையச் செய்து அரசாங்கத்துக்குள்ள ஆதரவை இல்லாமல் செய்ய வேண்டும். இதனையடுத்து புதிய அரசாங்கமொன்றை அமைப்பதற்கு ஜனாதிபதி மைத்திரி மகிந்தவை அழைக்கச் செய்ய வேண்டும்.

மகிந்த ராஜபக்ஷ பிரதமராக ஆட்சிப் பொறுப்பை ஏற்பார். பின்னர் ஜனாதிபதித் தேர்தல் ஒன்றை நடத்தாமலேயே நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை நீக்கி பிரதமர் ஆட்சியொன்றை ஏற்படுத்த நடவடிக்கை எடுப்போம். பின்னர் மகிந்த ராஜபக்ஷ தொடர்ந்தும் பிரதமராக நாட்டை ஆட்சி செய்வார் எனவும் வாசுதேவ நாணயக்கார விளக்கமளித்தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

# எதிர்காலம் ஐ.தே.கவுக்கு பொற்காலம்

## இராஜாங்க அமைச்சர் சுஜீவ நம்பிக்கை



(கொழும்பு)

இளம் அரசியல் தலைமைத்துவத்தின் ஊடாக எதிர்காலத்தில் ஐக்கிய தேசியக்கட்சிக்கு பொற்காலம் ஏற்படலாம் என இராஜாங்க அமைச்சர் சுஜீவ சேனசிங்க தெரிவித்துள்ளார்.

கண்டியில் நேற்று முன்தினம் ஊடகங்களிடம் கருத்து வெளியிடும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் நிறுத்தப்படும் எந்த வேட்பாளரும் ஐக்கிய தேசியக்கட்சிக்கு சவாலாக இருக்க மாட்டார்.

ஐக்கிய தேசியக்கட்சிக்கு நாட்டில் எதிர்காலத்திற்கான அரசியல் ரீதியான தூய்மையான தலைவர்கள் இருக்கின்றனர்.

அந்தத் தலைவர்கள் ஐக்கிய தேசியக்கட்சியின் வெற்றிக்காகப் பாடுபடுவார்கள் எனவும் இராஜாங்க அமைச்சர் சுஜீவ சேனசிங்க மேலும் தெரிவித்தார். (இ-7)

# கடலில் தத்தளித்த 6 இளைஞர்கள் மீட்பு ஒருவரின் நிலைமை கவலைக்கிடம்



(நிலாவெளி)

திருகோணமலை நிலாவெளி கடற்கரையில் நீராடிக் கொண்டிருந்த 6 இளைஞர்கள் கடற்படையினர் மற்றும் பொலிஸாரின் உதவியுடன் உயிருடன் மீட்கப்பட்டுள்ளனர்.

குறித்த 6 இளைஞர்களும் அக்குறணைப் பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது.

அக்குறணையைச் சேர்ந்த ஆறு இளைஞர்கள் சுற்றுலா சென்ற சமயம் நிலாவெளி கடலில் நீராடியுள்ளனர். அப்போது கடலில் உருவான பாரிய அலையால் இழுத்துச் செல்லப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் அவர்கள் கடலில் தத்தளித்தபடி அபயக்குரல் எழுப்பிய வேளை வெளிநாட்டு சுற்றுலாத்துறையினரை அழைத்து செல்லவந்த படகு ஒன்றில் இருந்தவர்களும் அதற்குப் பாதுகாப்பாக வந்த பொலிஸ் ரோந்து படகில் இருந்தவர்களும் குறித்த இளைஞர்களைக் காப்பாற்றியுள்ளனர்.

இவ்வாறு. பொலிஸ் பிரிவைச் சேர்ந்த இருவரும் கடற்படையைச் சேர்ந்த நால்வரும் மேற்படி சம்பவத்தில் நீரில் மூழ்கியவர்களை காப்பாற்றியுள்ளனர். அதில் ஒருவரின் நிலைமை கவலைக்கிடமாக இருப்பதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

16 பேர் கொண்ட ஒரு குழுவினரே இவ்வாறு சுற்றுலா சென்று நீராடியுள்ளதாக முதற்கட்ட விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (இ-7)

# இன்று ஒரு தகவல்

## அன்பை வெளிப்படுத்த வாய்ப்புகள்

பையன் தேர்வில் தோல்வி அடைந்ததற்காக, ''என்னப்பா இப்படி பெயிலாயிட்டு வந்து நிக்கிறியே!'' என்று மட்டும் தான் அப்பா சொல்லியிருக்கிறார்.

இதற்கே மகன் தன்னை மாய்த்துக் கொண்டு விட்டான். இத்தனைக்கும் ஒரே மகன்.

அவன் மீது அந்தப் பெற்றோர் விழுந்து விழுந்து அழுததைப் பார்த்தால் கல்மனமும் கரையும். இந்த அன்பின் சில சதவிகிதங்கள் அவனுக்குத் தெரிந்திருந்தால் கூட அவன் நிச்சயம் அப்படி ஒரு முடிவுக்கு வந்திருக்க மாட்டான். அன்பாக, ஆறுதலாக நான்கு வார்த்தை சொல்ல வேண்டிய அந்த முக்கியமான கட்டத்தில் அன்பு மறுக்கப்பட்டதாலேயே இந்தக் கோரமான முடிவு.

தன் அக்கா மகளை திருமணம் செய்து கொள்ள மறுத்து, வேறு ஒரு பெண்ணைக் காதலிக்க ஆரம்பித்திருந்த ஓர் இளைஞன், தன் காதலைக் கைவிட்டு, மறுபடி தன் அக்கா மகளையே திருமணம் செய்து கொள்ள முடிவு செய்திருந்தான். இந்த இளைஞனை நான் சந்தித்தேன்.

இந்தத் திடீர் மாற்றத்திற்கு என்ன காரணம் என்று கேட்டேன். "என் அக்கா எனக்குத்தான் தன் பெண்ணைக் கொடுப்பேன் என்கிறார். அக்கா என் மேல் இவ்வளவு பிரியம் வைத்திருக்கிறார் என்பதே எனக்கு இவ்வளவு நாள் தெரியாமல் போயிற்று'' என்றான்.

இந்த இரு சம்பவங்களிலிருந்து உங்களுக்கு ஓர் உண்மை பிடிபட்டிருக்கும். இரண்டு பேர் விடயத்திலும் உள்ளத்திலிருக்கும் அன்பு காலம் கடந்தே வெளிப்பட்டிருக்கிறது. வேறு வகையில் சொன்னால் விடயம் திசைமாறிய பின்பே வெளிப்பட்டிருக்கிறது.

நம்மில் பெரும்பாலானவர்கள் இந்தத் தவறைத் தொடர்ந்து செய்து வருகிறோம். ஆமாம்! மனதிற்குள் தொன் கணக்கில் அன்பு வைத்துக் கொண்டு கிராம் கணக்கில்தான் அதை வெளிப்படுத்தி வருகிறோம். இதனால் நல்லுறவு நிலவுவது இல்லை.

மாறாக கோளாறுகள் வேறு நிகழ்ந்து விடுகின்றன.

கணவன்-மனைவிக்குள் பிரச்சினை. ஆனால் ,ஒரு நாள் கணவனின் பேர்ஸில் தனது போட்டோவைக் கண்டு மனைவி உருகிப் போனாள். இதயத்தில் உள்ளவள் என்பதைக்கூட பேர்ஸில் போட்டோவை வைத்துக் காண்பித்து தான் நிரூபணம் செய்ய வேண்டியிருக்கிறது.

அன்பை வெளிப்படுத்த எவ்வளவோ சந்தர்ப்பங்கள் கிடைக்கின்றன. நாம்தான் அவற்றை உதாசீனப்படுத்தி வருகின்றோம். இன்னும் ஒருபடி மேலே பேய்ச் சொல்வது என்றால் அன்பை வெளிப்படுத்த சந்தர்ப்பங்கள உருவாகாவிட்டால் அவற்றை நாம் வலிந்து உருவாக்கிக் கொள்வது கூடத் தவறில்லை.

**லேனா தமிழ்வாணன்**

# அஞ்சல் உத்தியோகத்தர்கள் கவனயீர்ப்புப் போராட்டம்






(ஏறாவூர்)

மட்டக்களப்பு அஞ்சல் மற்றும் தொலைத் தொடர்பு உத்தியோகத்தர்கள் சங்கத்தினரின் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம் நேற்று திங்கட்கிழமை காலை மட்டக்களப்பு நகரின் பிரதான அஞ்சலகத்திற்கு முன்னால் இடம் பெற்றது.

நாடு தழுவிய ரீதியில் பல கோரிக்கைகளை முன்வைத்து, இடம் பெற்று வரும் தொடர்ச்சியான தொடர் வேலை நிறுத்தப் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவிக்கும் முகமாகவே தாம் மட்டக்களப்பில் இந்த கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டத்தை ஏற்பாடு செய்துள்ளதாக அஞ்சல் மற்றும் தொலைத்தொடர்பு உத்தியோகத்தர்கள் சங்கத்தினர் தெரிவித்தனர்.

இந்தக் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான ஞா. சிறிநேசன், எஸ். வியாழேந்திரன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

சக்தி வாய்ந்த அஞ்சல் மற்றும் தொலைத்தொடர்பு உத்தியோகத்தர்கள் சங்கம் மற்றும் ஒருங்கிணைந்த தபால் தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பு ஆகியவற்றின் தொடர் வேலை நிறுத்தத்தால் கடந்த 12ஆம் திகதியிலிருந்து நாட்டின் சகல அஞ்சல் சேவைகளும் ஸ்தம்பித்துள்ளன, இதனால் நாட்டு மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கியுள்ளனர்.

12 வருடங்களாக நிகழும் அஞ்சல் சேவைப் பிரச்சினைகளுக்கு உடனடியாகத் தீர்வு வழங்கு.

5 வருடங்கள் கடந்த 2ஆம் வகுப்பு நியமனங்களை உடனடியாக உறுதி செய்.

கணனி தொழில்நுட்பக் கோளாறுகளைச் சீர் செய்,

ஜனவரி 10ஆம் திகதி வாக்குறுதியளித்த கெபினெட் பத்திரிகைக்கு அனுமதி வழங்கி தீர்வைப் பெற்றுக் கொடு,

2012 பொறுப்புப் பரீட்சையை நடைமுறைப்படுத்து.

பொறுப்புக் கொடுப்பனவை உடனடியாக வழங்கு,

விரிவுரையாளர் சம்பளத்தை புதிய சம்பளத்துக்கு பெற்றுக் கொடு,

பொறுப்புப் பரீட்சையில் சித்தியடைந்த 1ஆம் வகுப்பு உத்தியோகத்தர்களுக்கு எம்.என். 7 வேதன மட்டத்தைப் பெற்றுக் கொடு என்பனவற்றுடன் மேலும் அரசாங்கத்தின் மூடிய திணைக்கள ஆட்சேர்ப்பு முறைகள் முடிவுக்குக் கொண்டு வரப்பட வேண்டும். போன்ற கோரிக்கைகள் முன்வைத்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

# அஞ்சலகங்கள் மூடப்பட்டுள்ளதால் பிரதேச செயலகங்கள் ஊடாக சேவையை வழங்க அறிவுறுத்தல்

(கொழும்பு)

தபால் ஊழியர்களின் வேலை நிறுத்தம் காரணமாக அஞ்சலகங்கள் மூடப்பட்டுள்ளதால் சேவைகளைப் பெற்றுக் கொள்வதில் பொது மக்களுக்கு ஏற்படும் அசௌகரியங்களை குறைக்கும் பொருட்டு அந்தந்தப் பிரதேச செயலகங்களில் சேவையை வழங்கு மாறு உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் மேலதிக செயலாளர் எஸ்.எஸ். என்.டீ. சில்வா அறிவுறுத்தல் வழங்கியுள்ளார்.

அமைச்சின் இந்தப் பணிப்புரை மாவட்ட செயலகங்கள் ஊடாக பிரதேச செயலகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. அந்தப் பணிப்புரையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

தற்போது நாட்டில் இடம்பெறும் தபால் ஊழியர்களின் வேலை நிறுத்தம் காரணமாக பரீட்சைக் கட்டணம், தண்டப் பணம் என்பன தபால் நிலையங்கள் ஊடாக செலுத்த முடியாத காரணத்தினால் பொது மக்கள் அசௌகரியங்களுக்கு முகம்கொடுத்து வருவதாக முறைப்பாடுகள் கிடைத்து வருகின்றன.

பொது மக்களின் அசௌகரியங்களை தடுப்பதற்காக தற்காலிக ஏற்பாடாக பொதுமக்கள் அரசுக்கு செலுத்த வேண்டிய பரீட்சைக் கட்டணம், தண்டப்பணம், போன்ற கட்டணங்களையும், அரசாங்கத்தினால் பொது மக்களுக்கு செலுத்த வேண்டிய முதியோர் கொடுப்பனவு போன்ற கொடுப்பனவுச் சேவைகளையும் பிரதேச செயலகம் ஊடாக செலுத்துவதற்கான நடவடிக்கைகளை உடனடியாக பின்பற்றுமாறும் இது தொடர்பாக பிரதேச செயலாளர்களை தெளிவுபடுத்துமாறும் அறிவிக்கின்றோம் என்று கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. (இ-7)

# மாத்தறையில் துப்பாக்கிச் சூடு ஹீரோவாக மாறிய இளைஞன்

## பொலிஸார் பாராட்டு, கௌரவிக்க திட்டம்



(மாத்தறை)

அண்மையில் மாத்தறையில் நகைக் கடையில் கொள்ளையடிக்க வந்த கொள்ளைக்காரர்களின் துப்பாக்கிச் சூட்டில் பொலிஸ் அதிகாரி ஒருவர் படுகாயமடைந்தார்.

குறித்த பொலிஸ் அதிகாரியை தனியாக தூக்கி வாகனத்தில் ஏற்றிய இளைஞன் அவரை வைத்தியசாலையில் அனுமதித்துள்ளார். இளைஞனின் செயற்பாடு குறித்து தற்போது பலரும் பாராட்டு தெரிவித்து வருகின்றனர்.

பொதுமக்கள் மட்டுமன்றி, சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ஒருவர் அவரை பாராட்டியுள்ளார்.

குறித்த இளைஞனுக்கு பணப் பரிசு ஒன்றை வழங்குவதோடு அவரின் செயற்பாட்டிற்கு கௌரவம் வழங்கவும் தீர்மானித்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ருவான் குணசேகர தெரிவித்துள்ளார்.

எனினும் குறித்த இளைஞனால் வைத்தியசாலையில் அனுமதித்த 33 வயதான பொலிஸ் அதிகாரி சுரங்க பிரதீப் சிகிச்சைப் பயனின்றி உயிரிழந்துள்ளார். (இ-7)




## நயினை நாயகியே தேரில் பவனி வருகவே

அகிலம் போற்றும் நயினை நாயகியே போற்றி
ஆதவன் போன்று ஒளிவீசும் நயினை நாயகியே போற்றி
இன்ப மயமான ஜோதி நயினை நாயகியே போற்றி
ஈடில்லாச் செல்வங்களை அடியார்களுக்கருளும் நயினை நாயகியே போற்றி
உத்தம நாயகி எனும் நாகங்களின் தலைவி நயினை நாயகியே போற்றி
ஊக்கமான மழலையில் வழி காட்டும் நயினை நாயகியே போற்றி
எல்லையில்லா இன்பத்தின் தத்துவமான நயினை நாயகியே போற்றி
ஓர் முனைக்கு நிகர் ஒப்பற்ற அமுதசுரபி நாயகியே போற்றி
ஐங்கரன் துணைநிற்க நயினை நாயகியே தேரில் பவனி வருகின்ற மாண்புமிகு காட்சியே போற்றி! போற்றி!!

சமூகஜோதி,
தி.வேலுப்பிள்ளை.

---

## காத்திடுவாய் தேவி

ஆர்ப்பரிக்கும் அலை ஓசை அன்னை உன் புகழ்பாடும்
ஆர்வமுடன் பக்தர் சூழ ஆசையெல்லாம் தீர்த்திடுவாய்
இப்புவியும் மகிழ்வுறவே இன்பமெல்லாம் பெருக்கிவிடுவாய்
வணங்கி தொழுதிடவே நம்மையெல்லாம் காத்திடுவாய் தேவி

தாவடியூர்
ச.சுப்பிரியன்

---

## நல்வழி காட்டு...

நயினையம்பதி வாழும் எம் நாயகியே நாகபூஷணி தாயே!
உம்மை நாடி வருவோர்க்கு ஓர் நல்வழி காட்டு...
வன்னி மரம் உன் தல விருட்சம்
விண்ணை மோதிடும் உன் அருட் கடாச்சம்
கற்பூர சட்டி ஏந்தி -கன பால் காவடிகள் ஆனந்தமாக ஆட
சக்தி கொண்டு நாம் எழுவோம். பத்தி கொடு எம் தாயே...

அரியாலையூர்
அம்பிகாசக்தி



# இனப்படுகொலைக்கான நீதி கோரலில் விக்னேஸ்வரனின் பங்கு காத்திரமானது

## இருதய சிகிச்சை நிபுணர் லக்ஸ்மன் சுட்டிக்காட்டு



(நேற்றைய தொடர்ச்சி...)

எமது மக்களின் எதிர்பார்ப்பு வெறுமனே அதிகாரப் பகிர்வு மட்டுமல்ல இந்தத் தீவில் தாம் இழந்த சகல உரித்துக்களையும் பெற்று சம அந்தஸ்துள்ள பிரஜைகளாக வாழ விருப்பப்படுகிறார்கள் என்பதனை அவர் நேரடி அரசியலினுள் பிரவேசிக்கும் முன்னரே 2001 ஆம் ஆண்டு நடந்த தனது உயர் நீதிமன்ற பதவியேற்பு விழாவின் போது மிகத் தெளிவாக குறிப்பிட்டிருந்தார்.

அதிகாரங்களைப் பகிர்வது அல்ல தீர்வு. எமது மக்கள் வெறுமனே அதிகாரங்களுக்காக மட்டும் போராடவில்லை. இந்தத் தீவிலே தமக்கான சம அந்தஸ்தும் அனைத்து உரித்துக்களும் வேண்டும் என்பதே அவர்களது வேணவா என்பதையும் அழுத்தம் திருத்தமாக தனது பதவியேற்பு நிகழ்வில் கூறியிருக்கின்றார்.

தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வு எனும் பெயரில் ஒரு அரசியலமைப்பு கொண்டு வரப்பட ஏற்பாடுகள் ஆரம்பித்த அந்த 2015ஆம் ஆண்டு காலப்பகுதியில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் நடந்த கூட்டம் ஒன்றின் போது மாகாணசபை ஒன்றின் முதல்வராக இருந்த போதிலும் அந்த மாகாண சபை முறைமையை மிகத் தெளிவாக நிராகரித்து எமக்கான தீர்வாக எம்தேசத்தின் அங்கீகாரமும் சுயநிர்ணய உரிமையுமே வேண்டுமென்பதையும் பதிவு செய்திருந்தார்.

இந்தத் தீவின் பிரச்சினை என்றால் இங்கு இருக்கும் தேசங்களை அங்கீகரிக்காமையே என்பதை 2014ஆம் ஆண்டு பேர்னாட் டி சொய்சா நினைவுப்பேருரையில் வெளிப்படுத்திய அவர் 2015ஆம் ஆண்டு ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேன முன்னிலையில் பிரச்சினை அதுவெனில் அதன் தீர்வு அந்த தேசங்களின் அங்கீகாரமே என்பதனை வெளிப்படுத்தினார்.

அதுபோல அபிவிருத்தி, புனரமைப்பு, புனர்நிர்மாணம் போன்றவற்றை ஆயுதங்களாகக் கொண்டு எமது இனத்தின் இருப்பிற்கு அவசியமான அடிப்படை அரசியல் கோரிக்கைகளையும் எமக்கு இழைக்கப்பட்ட அநீதிகளுக்கான பொறுப்புக் கூறலையும் நீர்த்துப் போகச் செய்வதற்கான முயற்சிகள் நடைபெற எமது அரசியற் கோரிக்கைகளோ நீதிக்கான பொறுப்புக் கூறல் கோரிக்கைகளோ ஒன்றை ஒன்று பிரதியீடு செய்ய முடியாதவை என்பதையும் அதேவேளை இந்த இரண்டையும் மழுங்கடிப்பதற்காக அபிவிருத்தி எனும் பெயரில் நாடகம் ஆட முடியாதென்பதையும் அவர் அழுத்தமாக தெரிவித்திருந்தார்.

ஒரு வைத்திய பின்புலம் உடைய ஒருவன் என்கிற வகையில் நீதியரசரின் இந்தக் கூற்றுக்களை தர்க்கரீதியானதொன்றாகவே நான் பார்க்கிறேன்.

ஒரு நோயாளிக்கு நோய் ஏற்பட்டுள்ளதெனில், அந்த நோயின் விளைவுகளை தீர்ப்பதுதான் தீர்வு என ஒருவரும் நினைப்பதில்லை.

நோய் நாடி நோய் முதல் நாடி அது தணிக்கும் வாய் நாடி அது தணிக்கும் வாய்ப்பச் செயலே நேர்மையானது.

நோய்குணம் குறிகளோடு நோய்க்கான மூலகாரணியை குணப்படுத்துவதே அங்கு நோக்காக இருக்க வேண்டுமே தவிர குணம்குறிகளினை மறையச் செய்யும் வழிமுறைகளை கையாண்ட உங்கள் நோய் மறைந்துவிட்டது என சொல்பவர்களை அடிப்படை அறம் அற்றவர்கள் எனவே நான் பார்க்கிறேன்.

அதேவேளை ஒரு குறித்த நோய்க்குகுறித்ததொரு மருந்துதான் தீர்வு எனில் அதனை அடைவதற்கு உரிய முயற்சிகளை நாம் செய்ய வேண்டும். அது தான் தேவையான மருந்து என்பதை நாம் நோயாளிகளுக்கும் சொல்ல வேண்டும். அதுதான் தேவையான மருந்து என்பதை நாம் நோயாளிக்கும் சொல்ல வேண்டும். ஆனால் அந்த நேரத்தில் குறித்த அந்த மருந்து இல்லை என்பதற்காக உரிய மருந்து என்ன என்பதை மறைப்பதும் எதுவித பிரச்சினையும் அற்று கிடைக்கக்கூடியதாக இருக்கிறதென்பதற்காக சம்பந்தமே இல்லாத ஒரு மருந்தை வழங்குவதும் அந்த நோயாளிக்கும் தன் தொழில் தர்மத்துக்கும் மனச்சாட்சிக்கும் இழைக்கும் துரோகமாகவே நான் பார்க்கிறேன்.

இந்த உதாரணத்தின் ஊடாக எமது இனப்பிரச்சினை தீர்வுக்கான அணுகுமுறையையும் நாம் புரிந்து கொள்ள முடியும்.

இனப்பிரச்சினை என்றால் என்ன என்பதைச் சொன்னார். எனவே அந்த பிரச்சினைக்குத் தீர்வு எப்படியானதாக இருக்க வேண்டும் என்பதையும் அவர் சொன்னார். எமது இலக்கு எதுஎன்பதையும் சொன்னார். களயதார்த்தத்தினை அந்த இலக்கினை நோக்கி மக்கள் சக்தியின் துணையுடன் நகர்த்துவதே உண்மையான அரசியலாக இருக்க முடியும்.

மாறாக எமது இலக்கை பிரச்சினைக்கான தீர்வை இப்போது என்ன சாத்தியமோ அதை நோக்கி இறக்குவது அல்ல அரசியல் என்பதை தனது ஒவ்வொரு உரையிலும் செயலிலும் காட்டி வந்தார் முதல்வர்.

நீதியரசர், தமிழர்களின் வரலாற்றில் ஆற்றிய மிகப் பெரிய உதவி அல்லது ஆவணம் என நாம் கருதுவது 2015ஆம் ஆண்டு நிறைவேறிய இனப்படுகொலை தீர்மானமாகும்.

மாகாணசபையில் ஒரு தீர்மானமாக நிறைவேற்றி அதனை ஜனநாயக வலுவுள்ள ஆவணமாக்கி அதனை ஐ.நா உட்பட சர்வதேச மனித உரிமை மையங்களுக்கு ஆவணமாக அனுப்பி வைத்தார்.

அதற்காக அவர் உள்ளும் புறமும் சந்தித்த எதிர்ப்புக்கள் அழுத்தங்கள் ஏராளம். ஆனால் அவற்றையெல்லாம் கடந்து அவர் செய்து முடித்த அந்த இனப் படுகொலைத் தீர்மானம் எந்தக் காலத்திலும் எமது மக்களின் நீதிக்கான பயணத்தில் கைகொடுக்கின்ற மிக முக்கிய ஆவணமாகவிளங்கும்.

அவரின் இத்தகைய செயற்பாடுகள், அவர் வளர்ந்து வாழ்ந்த தென்பகுதி மண்ணில் அவரை அந்நியனாக மாற்றியது. தன் இனத்தின் நியாயமான உரிமைகளை கேட்டமையினால் ஒரு இனவாதியாக குறிசுட்டது.

ஆனால் என் இனத்தின் நியாயமான உரிமைகளுக்கு குரல் கொடுப்பதற்கு பெயர் இனவாதம் என நீங்கள் சொன்னால் பரவாயில்லை. நான் நியாயமானது உரிமைகளுக்காய் குரல் கொடுக்கும் இனவாதியாகவே இருந்து விட்டு போகிறேன் என நேர்மைத் திறத்துடன் கூறினார்.

தன் மக்களின் அபிலாசைகளை தன் மக்களுக்கு தேர்தல் காலத்தில் தான் அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்ற நினைப்பது அல்லது அவற்றை மீள சொல்வது தென்னிலங்கையில் அவரை ஒரு இனவாதியாக பார்க்க வைத்ததை இத்தீவின் வரலாற்றை உணர்ந்த எவராலும் புரிந்து கொள்ள முடியும்.

2009இற்குப் பிற்பட்ட காலத்தில் தமிழ்த் தேசிய அரசியல் போக்கு கீழ் நோக்கி சரிந்து விடாது காத்தவர்களில் விக்னேஸ்வரனும் ஒருவர். இனத்துடன் காலத்தால் அவர் செய்த உதவி அது. ஆனால், காலம் அவருக்கு இன்னமும் பொறுப்புக்களை அளித்திருக்கிறது.

எம் மக்களுக்காக, மக்களின் அர்ப்பணிப்புகளிற்காக காலம் அவருக்கு அளிக்கும் கட்டளையை பொறுப்பெடுத்து உள்ளொளி பெருக ஆத்ம பலத்துடன் முழு ஆரோக்கியத்துடன மக்களுக்கான சிறந்த ஒரு வழிகாட்டியாக இருப்பார் என எம் மக்கள் சார்பில் எனது நம்பிக்கையை வெளிப்படுத்துகின்றேன்.

இறுதியாக இந்த ஆவண நூலை தொகுத்து வழங்கிய ஆர்.டி. இரட்ணசிங்கம் அவர்களிற்கு எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன் என அவர் மேலும் தெரிவித்தார். (முற்றும்)

# பிறந்த எண்களின் அதிர்ஷ்ட இரகசியம்




**எண் 2 (சந்திரன்)**
**(சமுதாயச் சிற்பிகள்)**

2 எண் சந்திரனைக் குறிப்பதாகும். 2 ஆம் எண் ஆதிக்கத்தில் பிறந்தவர்கள் 2,11, 20,29 போன்ற திகதிகளில் பிறந்தவர்களாவர். எந்தவொரு மாதமாக இருந்தாலும் மேற்கண்ட திகதி பிறந்தவர்கள் 2 எனும் சந்திர ஆதிக்கத்தில் பிறந்தவர்கள். உலகில் உள்ள படைப்புகளில் நல்லது, கெட்டது என்று இரண்டு இருக்கும். அதைப் போலவே சந்திர ஆதிக்கத்தினரின் நடவடிக்கையும் இரண்டு விதமாகவே இருக்கும்.

உலக இயக்கத்தைச் சார்ந்தே இவர்கள் இயங்குவார்கள். வெற்றி, தோல்வி மாறி மாறி வரும். சுகம், துக்கம் இரண்டும் வரும். படைப்பின் போது ஒன்றாக இருந்து, இயற்கை மாற்றத்தால் இரண்டாக மாறியதால் நிலையில்லாத மனமுடையவர்கள். சந்திரன் மனோகாரனாக செயற்படுவதால் பொது ஜனங்கள் மத்தியில் மிகப் பிரசித்தியும் பிரபல்யமும் அடைவார்கள். மிகவும் புகழ் பெற்ற நல்ல மனிதர்களாகவும், மிகவும் கொடூரமான தொழில் செய்யும் தீவிரவாதிகளாகவும் இருக்கிறார்கள். உடல் பாகங்களாகிய கண், காது, கை, கால் என்று இரண்டாக அமைந்து மனம் மட்டும் ஒன்றாகி இரண்டு விதமாகக் குழம்பிக் கொண்டிருக்கும். பேச்சும் இரண்டு விதமாகவே இருக்கும். நல்லது என்று நினைப்பதை மனம் கெட்ட கோணத்தில் சிந்தித்துப்பார்க்கும்.

மக்கள் மத்தியில் மிகவும் பிரபலமடையச் செய்யும். நாலும் தெரிந்தவர் என்று எல்லோராலும் பாராட்டப்படுவார்கள். மனோபலம் மிகுந்த சந்திர ஆதிக்கத்தினர் கற்பனை வளமிக்கவர்கள். கற்பனையில் கோட்டை கட்டி ஆட்சி செய்வார்கள். கற்பனை கடல் அலைபோன்று ஓயாது வந்து கொண்டேயிருக்கும். ஆராய்ச்சியில் மிகுந்த ஈடுபாடு இருக்கும். எப்பொழுதும் ஏதாவது திட்டம் தீட்டிக்கொண்டிருப்பார்கள். மனம் எப்போதும் எதிர்காலத்தைப் பற்றிச் சிந்தித்துக் கொண்டேயிருக்கும். புதுப் புதுக் கருத்துக்கள் உதயமாகிக்கொண்டே இருக்கும். தனி மனிதனாக பெரிய சாதனைகள் செய்வார்கள்.


தனிமையில் கற்பனை வானில் மிதப்பார்கள். கடந்த கால நிகழ்வுகள் பற்றியே அதிகம் சிந்திப்பார்கள். தீவிரவாத குணம் உடையவர்கள். மனதைப் பலப்படுத்தியவர்கள். எதற்கும் பயப்படாது செயற்கரிய செயலைச் செய்வார்கள். உண்மையை விடக் கற்பனையே இவர்களை அதிகம் கவர்ந்திழுக்கும். இயற்கையிலேயே மனபலம் குறைந்தவர்கள். தைரியம் குறைந்தவர்கள். பிடிவாத குணம் மிக்கவர்கள். மனோ பலம் மிக்க சந்திர ஆதிக்கத்தினர். பல தன்மையுடையது சந்திரன். அதுபோல பிறரது ஊக்கம் பாராட்டுக்களே இவர்களைத் தைரியமுடையவர்களாக மாற்றும். மனதில் பலவிதமான பாவனைகள் தோன்றிக் கொண்டேயிருக்கும். கற்பனா சக்திகள் இவர்களுடைய உயிர் நாடி. எப்பொழுதும். சிந்தனை செய்து கொண்டேயிப்பார்கள். மனதைக் கவர்ந்திழுத்து கற்பனைக் கடல் இவர்களை மூழ்கடித்துவிடும். எதிர்காலத்தில் நடக்கும் நல்ல, கெட்ட சம்பவங்களைத் தாமாகக் கற்பனை செய்து கொண்டு சிந்தனையில் மூழ்கி விடுவார்கள். திடமான நம்பிக்கை, தன்னம்பிக்கையை வளர்த்துக் கொண்டால் எப்பேர்பட்டக் காரியத்தையும் வெகு சுலபமாகச் செய்து முடிப் பார்கள்.

அறிவுபூர்வமான, மூளைக்கு வேலை கொடுக்கும் செயல்களில் ஈடுபட்டு வெற்றி காண்பார்கள். ஆராய்ச்சிகள் வெற்றியைக் கொடுக்கும். தியாகம், நேர்மை, அகிம்சை, யோகம், தவம், தூய்மை, கற்பனை போன்ற பல விடயங்கள் தெரிந்தவர்கள். செயற்கரிய செயல்கள் மூலம் பலரது பாராட்டைப் பெறுவார்கள். இவர்களுக்குத் தன்மேல் உள்ள சொந்த நம்பிக்கையை விட தெய்வ நம்பிக்கையே பல நன்மைகளைச் செய்யும். இலட்சியப் புருஷர்கள் ஆவார்கள். பொதுவாக நம்பிக்கை குறைந்தே காணப் படுவார்கள். பிறரை எளிதில் நம்பவே மாட்டார்கள். எந்தக் காரியத்தையும் தாமே முன் னின்று செய்து முடிக்க வேண்டும் என்று எண்ணுவார்கள். பிறரிடம் தன்னுடைய காரியத்தை ஒப்படைக்க மனம் இடந்தராது. தன்னையே நம்பாத இவர்கள் பிறரை நம்புவது கடினம். எந்த ஒரு சிறு செயலையும் பிறரை நம்பி ஒப்படைக்க மாட்டார்கள். தானே செய்தால் தான் மனம் திருப்தியடையும். தன் வேலைகளைப்பிறர் செய்வது இவர்களுக்குப் பிடிக்காது. மற்றவர்களின் தலையீட்டை விரும்பமாட்டார்கள். வீண் சிரமங்களை இவர்களே இழுத்துக் கொள்வார்கள்.

வாழ்க்கையில் சம்பந்தமில்லாத பிரச்சினைகளுக்காகக் கவலைப்பட்டு பிறரையும் தம்மையும் குழப்பிக் கொள்வார்கள். வீண் தொந்தரவுகள் மிகுந்து காணப்படும். எதையும் முழுமன நம்பிக்கையுடன் செய்தால் வெற்றி கிட்டும். இவர்கள் ஈடுபடும் எந்த ஒரு காரியத்தையும் முழுமையாகச் செய்யாமல் பாதியிலேயே விட்டு விடும் பழக்கமுண்டு. இவர்களுக்குத் தொட்டதெல்லாம் சந்தேகமாயிருக்கும். மனதில் குழப்பம் குடிகொள்ளும். முகத்தில் பயத்துடன் கூடிய புன்முறுவலும் தென்படும். இயற்கையாகவே மிகுந்த பயந்த சுபாமுடைய இவர்கள் வெளியில் தைரியசாலி போல பேசுவார்கள். சிறந்த பேச்சாற்றல் இருக்கும். சில நேரத்தில் காரசாரமாகப் பேசி விவாதம் செய்வார்கள்.

(தொடரும்....)

# சிங்கராஜவன யானைகளால் பாடசாலைக்கு அச்சுறுத்தல்



(கொழும்பு)

சிங்கராஜ வனத்திலுள்ள இரண்டு யானைகளால், இறக்குவானை - கஜுகஸ் வத்த, கோப்பிகல ஆரம்பப் பாடசாலை, அச்சுறுத்தலை எதிர்நோக்கியுள்ளது.

இவ்வச்சுறுத்தல் காரணமாக, குறித்த பாடசாலையை மூட வேண்டுமாயின், அதற்கு முன்னர், வனஜீவராசிகள் திணைக்களத்தின் அனுமதியைப் பெறவேண்டுமென, சப்ரகமுவ மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் மகிந்த எஸ்.வீரசூரிய தெரிவித்துள்ளார்.

குறித்த யானைகள் இரண்டும், கடந்த 20ஆம் திகதியன்று, மேற்படி ஆரம்பப் பாடசாலைக்குள் நுழைந்து, பாடசாலை உபகரணங்கள் மற்றும் உடைமைகளுக்குச் சேதம் விளைவித்தது. இதன்போது, பாடசாலை மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் பாதுகாப்பு வழங்கமுடியாத காரணத்தால், பாடசாலையை மூட நடவடிக்கை எடுத்ததாக, பாடசாலை அதிபர், ஊடகங்களுக்குத் தெரிவித்திருந்த கருத்து தொடர்பில், மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளரிடம் வினவப்பட்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

குறித்த பாடசாலை மூடப்பட்டிருந்த பாடசாலையாகும். தாம் இதனை, மீண்டும் இயங்கச்செய்ததால், இதனை அண்மித்த பகுதிகளிலுள்ள பெற்றோர், இப்பாடசாலைக்கே மாணவர்களை அனுப்புகின்றனர். அவர்கள், வருமானம் குறைந்த பெற்றோர்களாவர். குறித்த பாடசாலை மூடப்படுமாயின், 2 - 3 கிலோமீற்றர் தூரத்திலுள்ள கஜுகஸ்வத்த பாடசாலைக்கே, இந்த மாணவர்கள் செல்லநேரிடும். அத்துடன், பாடசாலையை மூடுவதா? இல்லையா? என்பது குறித்து முடிவெடுக்கும் உரிமை பாடசாலை அதிபருக்கு இல்லையெனத் தெரிவித்தார்.

தற்போது, வனஜீவராசிகள் திணைக்களத்தில் பயிற்சிபெற்றவர்களே, இந்தப் பாடசாலை மாணவர்களைக் காலையில் பாடசாலைக்கு அழைத்து வருவதோடு, மாலையில் அழைத்துச் செல்கின்றனரெனத் தெரிவித்த செயலாளர், மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் பாதுகாப்பு வழங்க முடியுமென, வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள், தமக்கு கடிதம் மூலம் அறிவித்துள்ளனரென்றும் தெரிவித்தார்.

இந்த யானைப் பிரச்சினையானது, கடந்த மார்ச் மாதம் முதல் ஜுன் மாதங்களுக்கிடையில் ஏற்பட்ட பிரச்சினையாகுமெனத் தெரிவித்துள்ள சப்ரகமுவ மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர், குறித்த யானைகள், மேற்படி பாடசாலையின் வாயிலுக்கு அருகில் சென்று, அங்கிருந்த வாழைத் தோட்டத்தைச் சேதப்படுத்தியுள்ளன என்றும் இதனைக் காரணங்காட்டி, பாடசாலையை மூடுவதற்குப் பெற்றோர் விரும்பவில்லை எனவும் தெரிவித்துள்ளார்.(இ-7)

# கிராமிய புரட்சி செயற்றிட்டம் விரைவில் நடைமுறைக்கு வரும்

## ஜனாதிபதி மைத்திரி தெரிவிப்பு



(கொழும்பு)

அரசாங்கத்தின் கிராமிய புரட்சி செயற்றிட்டம் வெகு விரைவில் நாடளாவிய ரீதியில் நடைமுறைப்படுத்தப்படுமென ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொலநறுவை தொகுதி அமைப்பினை ஸ்தாபிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது. இந்நிகழ்வில் உரையாற்றிய போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"வறுமையை இல்லாதொழித்து, சகலருக்கும் அனுகூலங்களை பெற்றுத் தரும் அபிவிருத்தித் திட்டங்களையே அரசாங்கம் முன்னெடுக்கின்றது. நீண்டகாலத் திட்டங்களினூடாக முறையான அபிவிருத்திக்கு வித்திடும் வகையிலேயே அவை முன்னெடுக்கப்படுகின்றன.

இந்த அபிவிருத்தித் திட்டங்கள் ஒரு சாராருக்கு மாத்திரம் நன்மைகளை வழங்கும் வகையில் அமையாது, ஒட்டுமொத்த நாட்டு மக்களின் இதயத் துடிப்பையும் உணர்ந்த, சகல மக்களின் அபிமானத்துடன் வளர்ச்சியடைந்த ஒரு தேசமாக உலகளாவிய ரீதியில் முன்னேற்றம் அடைவதற்காக முன்னெடுக்கப்படும் செயற்றிட்டங்களாகும்.

வறுமை ஒழிப்பு திட்டமாக ஆரம்பிக்கப்பட்டுள்ள கிராம சக்தி மக்கள் இயக்கம், சிறந்தவொரு செயற்றிட்டமாக தற்போது நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. கிராமியப் புரட்சி செயற்றிட்டம் வெகு விரைவில் நாடளாவிய ரீதியில் நடைமுறைப்படுத்தப்படும்.

மேலும், நாட்டிலுள்ள தொழில் முயற்சியாளர்களை ஊக்கப்படுத்துவதற்கான புதிய கடன் திட்டமொன்றினை அறிமுகப்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது. அதனூடாக வேலையில்லாப் பிரச்சினைக்கு தீர்வு காண்பதோடு, உள்நாட்டு உற்பத்தித் துறையில் உத்வேகமும் ஏற்படும்.

தேசிய பொருளாதார சபையினூடாக நாட்டின் பொருளாதார அபிவிருத்தி மற்றும் மக்களின் வாழ்வாதார பிரச்சினைகளுக்கு தீர்வு காணுதல் தொடர்பாக விரிவான கவனம் செலுத்தப்படும்.

தேசிய உற்பத்திகளுக்கு கூடிய முக்கியத்துவம் பெற்றுக்கொடுத்தலே அரசாங்கத்தின் கொள்கையாகும். அதனைப் பெற்றுக்கொள்ள சிறந்த செயற்றிட்டங்களை முன்னெடுப்போம்" என அவர் மேலும் தெரிவித்தார்.(இ-7)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1448

Search for people, places and things | Nagendram Home

### மிதுன்

ஒரு இங்கிலீஷ்காரர்: What is this?
கடைக்காரர்:This is தயிர்
இங்கிலீஷ்காரர்: What is தயிர்?



கடைக்காரர்: Milk sleep at might and morning become tight
யார்கிட்ட நாங்களும் இங்கிலீஷ் பேசுவோம்ல

### மிருனாளினி

தீயதைப் பேசிவிட்டு பாதுகாப்பாய் ஒளிந்து கொள்கிறது நாக்கு



தண்டனை அனுபவிப்பது ஏனைய உறுப்புக்கள் தானே...!

### மிதுளா

யாரையும் அற்பம் என்று எண்ணி விடாதீர்கள்...



சிறிய தீக்குச்சியின் வலிமைதான் பெரும் இருட்டையே கிழித்தெறிகிறது

### அஸ்வந்த்

வேறொரு பிள்ளையை உங்கள் பிள்ளைக்கு உதாரணம் காட்டி வளர்க்காதீர்கள்...



உங்கள் பிள்ளையை மற்றவர்கள் உதாரணம் காட்டும் அளவிற்கு வளருங்கள்

### லீசா

Sorry என்பது மட்டுமல்ல



சாப்பிட்டியா? என்பதும் ஒரு வகையில் சமாதான வார்த்தைதான்...!

### பிரதிக்ஷா

நிலத்திற்கு பிரசவம் பார்த்து ப(உ)யிர் வளர்க்கும் மண் மருத்துவர்



விவசாயி

நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

## போர்க்குற்றச்சாட்டு விவகாரம்

# ஐ.நா.அமைதிப் படைக்கு இலங்கைப் படையினரை அனுப்பும் பணி தாமதம்

(கொழும்பு)

இலங்கை இராணுவத்தினர் மீது கடந்த காலங்களில் சுமத்தப்பட்டுவந்த போர்க் குற்றச்சாட்டுகள் காரணமாக, ஐ.நா. அமைதிகாக்கும் படைக்கு இலங்கை வீரர்களை அனுப்பும் பணிகள் தாமதிக்கப்பட்டுள்ளன.

அமைதிகாக்கும் பணிக்கு தரமானவர்களை தெரிவு செய்யும் பணிகளை இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு தாமதித்து வருகின்றமையே இதற்கான காரணம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வெளிநாடுகளில் அமைதி காக்கும் பணிக்காக அனுப்பப்பட்ட இலங்கை இராணுவ வீரர்கள் மீது பாலியல் மீறல்கள் தொடர்பில் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டுள்ளதுடன், இலங்கையின் இறுதிக்கட்ட யுத்தத்தின் போது போர்க்குற்றங்களில் ஈடுபட்டதாகவும் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டது.

இவ்வாறான பல்வேறு போர்க் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்ட இலங்கை இராணுவத்தினரை தனது அமைதி காக்கும் படையில் இணைப்பதற்கு ஐக்கிய நாடுகள் சபை அனுமதியளித்தது.

இவர்கள் மீது சுமத்தப்பட்ட குற்றங்களுக்கு நீதி எட்டப்படாது ஆயிரக்கணக்கான இலங்கை இராணுவத்தினரை ஐ.நா. தனது அமைதி காக்கும் படையில் இணைத்தமையால் உலக நாடுகளிலும் இவ்வாறான குற்றங்களில் இலங்கை இராணுவத்தினர் ஈடுபடுவதாக தெரிவிக்கப்பட்டது.

அதனால், எதிர்காலத்தில் அமைதி காக்கும் படைக்கு வீரர்களைத் தெரிவு செய்யும் போது தரமானவர்களைத் தெரிவு செய்வது தொடர்பாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவின் அனுமதியை பெற வேண்டும் என்ற சட்டம் கடந்த மார்ச் மாதம் அமுல்படுத்தப்பட்டது.

அதற்கமைய எதிர்காலத்தில் இலங்கையிலிருந்து அனுப்பப்படும் வீரர்கள் தொடர்பாக 2005இற்கு பின்னரான தனிப்பட்ட தகவல்கள் மற்றும் அவர்கள் இராணுவத்தில் பணியாற்றும் போது மேற்கொண்ட செயற்பாடுகள் தொடர்பில் ஆராயப்பட்டே அமைதி காக்கும் பணியில் ஈடுபடுத்தப்படவுள்ளனர்.

அதற்கமைய இப் பணிகள் தாமதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# சில பின்னிணைப்புகளை பகிரங்கப்படுத்தினால் பாதகமாக அமையும்

(கொழும்பு)

இலங்கை மத்திய வங்கியின் பிணைமுறி மோசடி விவகாரம் தொடர்பில், விசாரணை செய்த ஜனாதிபதி ஆணைக்குவின் அறிக்கையின் பின்னிணைப்புக்களை வெளிப்படுத்தல் தொடர்பில் ஜனாதிபதியின் செயலாளருக்கு கடிதமொன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளதென சட்டமா அதிபர் திணைக்களம் அறிவித்துள்ளது.

ஜனாதிபதியின் செயலாளர் ஒஸ்டின் பெர்னாண்டோவின் கோரிக்கைக்கு அமையவே சட்டமா அதிபர் ஜயந்த ஜெயசூரியவால் இந்தப் பதில் கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

விசாரணை அறிக்கையின் சில பிரிவுகளைப் பகிரங்கப்படுத்தினால், அது தற்போது விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு கொண்டிருக்கும் குற்றவியல் வழக்குகள் மற்றும் சிவில் வழக்குகளின் மீது தாக்கத்தை ஏற்படுத்தக் கூடுமென அந்தப் பதில் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை, அந்த விசாரணை அறிக்கையின் சில பின்னிணைப்புகளை பகிரங்கப்படுத்தினால், அது விசாரணைகளுக்கு எவ்விதமான பாதகங்களையும் ஏற்படுத்தாது என்றும் சட்டமா அதிபர் தன்னுடைய பதில் கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ஆணைக்குழுவுக்கு இலங்கை மத்திய வங்கி மற்றும் நாணய வாரியம் ஆகியன அனுப்பிவைத்துள்ள இரகசிய அறிக்கையை பகிரங்கப்படுத்த் வேண்டுமாயின் அந்தந்த நிறுவனங்களின் பரிந்துரைகள் அவசியமாகும் என்றும் அந்தப் பதில் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை, ஆணைக் குழுவுக்கு மூன்றாவது தரப்பினரால் முன்வைக்கப்பட்டுள்ள ஆவணங்கள் தொடர்பில் தனித்தனியாக பரிந்துரைகளைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்றும்,

இதேவேளை, மத்திய வங்கியில் இடம்பெற்ற பிணைமுறி மோசடி தொடர்பில் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தால் முன்னெடுக்கப்படும் விசாரணைகளில் வெளிப்படுத்தப்படும் விபரங்கள் தொடர்பில் விசேட ஆய்வுகள் முன்னெடுக்கப்படுகின்றன என்றும் அந்தப் பதில் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

# தபால் ஊழியர்களுடன் இணைய ஏனைய அரச நிறுவனங்களும் தயார்

## சிந்தக பண்டார தெரிப்பு

(கொழும்பு)

எமது போராட்டத்துக்கு மேலும்வலுச்சேர்க்கும்வகையில் வங்கிகள், கல்வித் திணைக்களங்கள், புகையிரதத்திணைக்களம், துறைமுகம் போன்ற பல்வேறுஅரசநிறுவனங்களும் கைகோர்க்கவுள்ளனர் என தபால் ஊழியர் சங்கத்தின் ஒருங்கிணைப்பாளர் சிந்தக பண்டார தெரிவித்தார்.

அவர் இது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில், இரண்டாவது வாரமாகவும் நாம் போராட்டத்தை தொடர்கின்றோம். எனினும் அரசாங்கமோ தபால் சேவைகள் அமைச்சோ இது தொடர்பில்எந்தத் தீர்வினையும் வழங்குவதாக இல்லை. எமது போராட்டத்தை மேலும் பலப்படுத்தி அரசாங்கத்திற்கு அழுத்தத்தை கொடுப்பதற்காக வங்கிகள், கல்வித் திணைக்களங்கள், புகையிரத திணைக்களம், துறைமுகம் போன்ற பல்வேறு அரசசார் நிறுவனங்கள் எமது தொடர்ச்சியான போராட்டத்திற்கு உதவுவதாக தெரிவித்துள்ளன.

மேலும் மல்வத்து, அஸ்கிரிய மாநாயக்க தேரர்களையும் சந்தித்து நாம் கலந்துரையாடியுள்ளோம். அவர்களும் அரசாங்கத்தின் மீது அதிருப்தியிலேயே உள்ளனர் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# சரஸ்வதி அம்பாள் மஹா கும்பாபிஷேகமும் அறநெறி வித்தியாலய அங்குரார்ப்பணமும்

(யாழ்ப்பாணம்)

சண்டிலிப்பாய் வீணாகான குருபீடம்பதி உறையும் உபதேச திருக்கோவில் கல்வித் தெய்வம் ஸ்ரீ சரஸ்வதி அம்பாள் மஹா கும்பாபிஷேமும் குருகுல அறநெறி வித்தியாலய அங்குரார்ப்பணமும் நாளை மறுதினம் வியாழக்கிழமை நடைபெறும்.

நேற்றுத் திங்கட்கிழமை தொடக்கம் நாளை புதன் கிழமை வரை எண்ணெய் காப்பு சாத்தகப்படும்.

தொடர் ந்து மண்டலாபிஷேகம் 48 தினங்கள் இடம்பெறும். (இ)

# மகிந்தவின் ஊடகச்செயலர் சிங்கப்பூரில் வைத்து கைது



(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் ஊடக இணைப்புச் செயலாளரும், சி.எஸ்.என். தொலைக்காட்சியின் முன்னாள் பணிப்பாளருமான ரொஹான் வெலிவிட்ட சிங்கப்பூரில் கைது செய்யப்பட்டு, விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

நேற்று திங்கட்கிழமை சிங்கப்பூருக்கு புறப்பட்டு சென்ற முன்னாள் ஜனாதிபதியின் ஊடகச் செயலாளர், குடிவரவு அதிகாரிகளினால் கைது செய்யப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

இலங்கையில் அவர் மீது சுமத்தப்பட்டுள்ள ஊழல், மோசடி குற்றச்சாட்டுகள் தொடர்பிலேயே சிங்கப்பூர் குடிவரவு அதிகாரிகள் விசாரணை நடத்தியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

ஆனால், அவரது கைது விடயத்தில் இலங்கை அதிகாரிகளின் தலையீட்டை அடுத்து அவர் உடனடியாக விடுவிக்கப்பட்டுள்ளார்.

இதற்கு முன்னர் ஒளிபரப்பு கண்காட்சியொன்றில் பங்குபற்றுவதற்காக சிங்கப்பூருக்கு விஜயம் செய்திருந்த ரொஹான் வெலிவிட்ட, அங்கிருந்து நாடு கடத்தப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (இ-7)

# பிள்ளையானை விடுதலை செய்யக் கோரி அடையாள உண்ணாவிரதப் போராட்டம்




(ஏறாவூர்)

கிழக்கு மாகாணசபையின் முன்னாள் முதலமைச்சரும் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் தலைவருமான சிவநேசதுரை சந்திரகாந்தன் (பிள்ளையான்) மீதான பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்கி சுயமாக ஜனநாயகப் பாதையில் ஈடுபட வழிவிடுமாறு கோரி அக்கட்சியின் முக்கியஸ்தர்கள் நேற்று திங்கட்கிழமை அடையாள உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தமிழ்மக்கள்விடுதலைப்புலிகள் கட்சியினரின் ஏற்பாட்டியில் மட்டக்களப்பு காந்தி பூங்கா முன்றலில் நடைபெற்ற உண்ணாவிரதப் போராட்டத்தில் கட்சியின் பொதுச் செயலாளர் பூ. பிரசாந்தன், உப தலைவர் நா. திரவியம், கட்சியிலிருந்து உள்ளூராட்சி சபைகளுக்கு தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்கள் மற்றும் கட்சி உறுப்பினர்கள் பங்கேற்றனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் கடந்த 2005ஆம் ஆண்டு மட்டக்களப்பு மரியாள் இணைப் பேராலயத்தில் நடைபெற்ற நத்தார் நள்ளிரவு ஆராதனையில்கலந்துகொண்டிருந்த போது சுட்டுக்கொல்லப்பட்டிருந்தார்.

இந்தக் கொலைச் சம்பவம்தொடர்பில்கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சரான சிவநேசதுரை சந்திரகாந்தன் (பிள்ளையான்), தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் முன்னாள் தேசிய அமைப்பாளரும் முன்னாள் மாகாணசபை உறுப்பினருமான பிரதீப் மாஸ்டர் என அழைக்கப்படும் எட்வின் சில்வா கிருஸ்ணானந்தராஜா, கஜன் மாமா எனப்படும் கனகநாயகம் மற்றும் இராணுவப் புலனாய்வு உத்தியோகத்தர் எம்.கலீல், முன்னாள் இராணுவச் சிப்பாயான மதுசங்க (வினோத்) ஆகியோர் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இக்கொலைச் சம்பவம் தொடர்பில் சந்தேக நபரான சிவநேசதுரை சந்திரகாந்தன் கடந்த 11.10.2015 அன்று கைதுசெய்யப்பட்டு தொடர்ந்து விளக்கமறியலில் இருந்து வருகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# கலாசார மரபுரிமைகளை எதிர்காலச் தலைமுறைக்கு வழங்க வேண்டியது அரசாங்கத்தின் பொறுப்பாகும்

## ஜனாதிபதி மைத்திரி தெரிவிப்பு

(கொழும்பு)

வரலாற்றுப்பாரம்பரியங்களைக் கொண்ட எமது கடந்த கால கலாசார மரபுரிமைகளைப் பாதுகாத்து அவற்றை எதிர்கால தலைமுறைக்கு வழங்க வேண்டியது அரசாங்கத்தின் பொறுப்பாகும் என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.



நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் புனர்நிர்மாணம் செய்யப்பட்ட பொலநறுவை ஹிங்குரக்கொட உனகலா வெஹர ரஜமகா விகாரையின் வரலாற்று முக்கியத்துவமிக்க தூபியை திறந்து வைக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

பொலநறுவை மாவட்டத்திலுள்ள தொல்பொருள் முக்கியத்துவமிக்க இடங்களையும் அனைத்து சமயங்களுக்குமான சமய ஸ்தாபனங்களையும் பாதுகாக்கவும் அவற்றின் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றும் வகையில் அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் ஜனாதிபதியின் எண்ணக்கருவின்படி நடைமுறைப் படுத்தப்படும் எழுச்சி பெறும் பொலநறுவை மாவட்ட அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் உனகலா வெஹர புனர்நிர்மாண நடவடிக்கை துரிதமாக முன்னெடுக்கப்பட்டது.

பொலநறுவையிலுள்ள வரலாற்று முக்கியத்துவமிக்க பௌத்த மற்றும் இந்து தொல்பொருள் சிறப்பு வாய்ந்த இடங்களில் உனகலா வெஹர முக்கிய இடம் வகிக்கின்றது.

நினைவுப் பலகையை திரைநீக்கம் செய்து சைத்தியவின் தூபியை திறந்து வைத்த ஜனாதிபதி மலர் பூஜை வழிபாடுகளில் ஈடுபட்டார்.

மல்வத்தை பிரிவின் அநுநாயக்க தேரர் கலாநிதி சங்கைக்குரிய நியங்கொட விஜித்தசிறி தேரர், சங்கைக்குரிய பஹமுனே சிறி சுமங்கல தேரர், சங்கைக்குரிய உடுகம தம்மானந்த நாயக்க தேரர், உனகலா வெஹர ரஜமகா விகாராதிபதி சங்கைக்குரிய கிறித்தலே ஞானீஸ்ஸர நாயக்க தேரர் ஆகியோர் உட்பட மக்கள் பிரதிநிதிகளும், மக்களும் இந்த புண்ணிய நிகழ்வில் கலந்துகொண்டனர். (இ-7)

# சோளத்திற்கு உத்தரவாத விலை

(கொழும்பு)

பெரும்போகத்திலிருந்து சோளத்திற்கு உத்தரவாத விலையொன்றை நிர்ணயிக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

உள்நாட்டு சோளச் செய்கையாளர்களைப் பாதுகாப்பதற்காக அடுத்த பெரும் போகத்திலிருந்து இந்த உத்தரவாத விலையை அமுல்படுத்த நடவடிக்கை எடுப்பதாக விவசாய அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

இதேவேளை, உத்தரவாத விலையின் கீழ் மரவள்ளிக்கிழங்கை இலங்கை ஹதபிம அதிகார சபை கொள்வனவு செய்து வருகின்றது. இதன்படி நாளாந்தம், இரண்டு தொன் மரவள்ளிக் கிழங்கு விவசாயிகளிடமிருந்து கொள்வனவு செய்யப்படுகின்றது.

கொள்வன்வு செய்யப்படும் மரவள்ளிக் கிழங்கை நியாயமான விலைக்கு நுகர்வோருக்கு விற்பனை செய்வதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# ஹெரோயினுடன் மூவர் கைது

(கொழும்பு)

பொரள்ள பகுதியில் பொலிஸார் மேற்கொண்ட சோதனையின் போது ஹெரோயினுடன் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் மாலை 6.10 மணியளவில் பொரள்ள பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கிதுல்வத்த பகுதியில் வைத்து 24 கிராம் 110 மில்லி கிராம் ஹெரோயினுடன் 20 வயதுடைய ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அத்துடன் நேற்று முன்தினம் இரவு 7.10 மணியளவில் பொரள்ள மயானத்திற்கு அருகில் வைத்து 23 கிராம் 520 மில்லி கிராம் ஹெரோயினுடன் 23 வயதுடைய ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். இதேவேளை இரவு 8.30 மணியளவில் பொரள்ள மயானத்திற்கு அருகில் வைத்து 23 கிராம் 10 மில்லி கிராம் ஹெரோயினுடன் 20 வயதுடைய ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். (இ-7)

# வாக்குறுதிகள் நிறைவேற்றப்படுவதை அமெரிக்கா உறுதி செய்யும்-ஜயந்த

(கொழும்பு)

ஐக்கியநாடுகள் மனித உரிமை பேரவைக்கு இலங்கை அளித்த வாக்குறுதிகள் நிறைவேற்றப்படுவதை அமெரிக்கா உறுதிசெய்யும் என இலங்கையின் ஐ.நாவிற்கான முன்னாள் இராஜதந்திரி ஜயந்த தனபால தெரிவித்துள்ளார்.



அமெரிக்கா தனது நேச நாடுகள் ஊடாக இதற்கான அழுத்தத்தை தொடர்ந்தும் கொடுக்கும் என அவர் தெரிவித்தார். ஐக்கியநாடுகளின் உறுப்பு நாடு என்ற வகையில் அந்தத் தீர்மானத்தை நிறைவேற்றவேண்டிய கடப்பாடு இலங்கைக்கு உள்ளது எனவும் அவர் தெரிவித்தார்.

அமெரிக்காவின் முன்னைய குடியரசுக்கட்சி அரசாங்கத்திற்கும் ஐக்கியநாடுகள் மனித உரிமை பேரவையுடன் பிரச்சினைகள் காணப்பட்டன. அவர்கள் அதிலிருந்து விலகி பின்னர் மீண்டும் இணைந்து கொண்டனர் என ஜயந்த தனபால தெரிவித்துள்ளார்.

இஸ்ரேல் தொடர்பான பிரேரணைகளே அமெரிக்காவிற்கு பிரச்சினை. எங்களுடைய பிரேரணைகள் அவர்களுக்கு பிரச்சினையில்லை என ஜயந்த தனபால மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# சர்வதேச போதைப்பொருள் எதிர்ப்பு தினம் இன்று

## 1000 மாணவிகள் பங்கேற்புடன் யாழில் விழிப்புணர்வு ஊர்வலம்

(யாழ்ப்பாணம்)

சர்வதேச போதைப்பொருள் எதிர்ப்பு தினத்தை முன்னிட்டு போதை ஒழிப்பு தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் 1000 மாணவிகள் இணைந்த விழிப்புணர்வு ஊர்வலம் இன்று 26 ஆம் திகதி காலை 8 மணிக்கு யாழ். இந்து மகளிர் கல்லூரியில் ஆரம்பமாகும்.

பேண்தகு பாடசாலை நிகழ்ச்சித்திட்டத்தின் போதைப் பொருள் ஒழிப்பு தேசிய வேலைத்திட்டத்தின் கீழ் இன்று காலை பாடசாலை முன்றலில் ஆரம்பமாகவுள்ள இந்த ஊர்வலம் அரசடி வீதியூடாக பிறவுண் வீதியையடைந்து இராமநாதன் வீதி ஊடாக பலாலி வீதியையடைந்து அங்கிருந்து அரசடி வீதியினூடாக பாடசாலையை வந்து அடையவுள்ளது என பாடசாலை அதிபர் அறிவித்துள்ளார். (இ-9)

# நீரில் மூழ்கிய கிராமம் மீண்டது



(சிலாபம்)

சில மாதங்களுக்கு முன்னர் நீரில் மூழ்கிப் போன கிராமம் ஒன்று மீண்டும் வழமையான நிலைக்கு வந்துள்ளது.

சிலாபம் மைல்குளம் - ஈபட் சில்வா தோட்டத்தில் சுமார் 800 குடும்பங்களின் வீடுகளில் நீர் வடிந்து செல்லாமல் தேங்கி நிற்பதாக தெரிவிக்கப்படுகிறது.

பல பகுதி நீர்த்தேக்கங்களின் நீர் அந்த கிராமத்தின் ஊடாக பயணிப்பதனாலேயே இந்த நிலை ஏற்பட்டுள்ளது.

வருடத்தின் ஒவ்வொரு மழை காலத்திலும் இந்த நிலைமைக்கு முகம்கொடுக்க நேரிடுவதாக அந்தப் பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் அதிகாரிகளுக்கு அறிவிக்கப்பட்ட போதிலும் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை என பிரதேச மக்கள் தெரிவித்துள்ளனர். இவ்வாறான அனர்த்தம் காரணமாக அந்த பகுதிமக்களின்தினசரிவாழ்க்கை மோசமாக பாதிப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

# ஐ.தே.க. பாரிய பின்னடைவு

## அமைச்சர் நவீன் ஒப்புதல்

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சி பாரிய பின்னடைவை சந்தித்துள்ள நிலையில், அதனை பாதுகாத்து வெற்றியடையும் கட்சியாக மாற்ற வேண்டுமென கட்சியின் தேசிய அமைப்பாளர் நவீன் திஸாநாயக்க தெரிவித்துள்ளார். புதிய கட்சிகளையும் விட பின்தங்கிய ஒரு நிலைக்கு ஐக்கிய தேசியக் கட்சி சென்று கொண்டிருப்பதாகவும் அவர் கவலை வெளியிட்டார்.



கொத்மலையில் நேற்று முன்தினம் (ஞாயிற்றுக்கிழமை) இடம்பெற்ற நிகழ்வொன்றிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

"2015இல் தேசிய அரசாங்கம் அமைக்கப்பட்டதன் பின்னர் தமது கனவுகளை நிறைவேற்றிக்கொள்ள முடியும் என அரசாங்கம் நம்பியது. ஆனால் அந்த நம்பிக்கை இப்போது சிதைந்து விட்டது. அவ்வாறான ஒரு நிலைமை இப்போது இல்லை.

ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி போன்ற புதிய கட்சிகளை விட ஐக்கிய தேசிய கட்சி பின்தங்கிய நிலைக்குச் சென்றுள்ளது.

இந்நிலையில் கட்சியை கட்டியெழுப்புவதற்கு முழுமையான முயற்சிகளை முன்னெடுப்பது அவசியம். தலைமையுடன் முரண்பட்டேனும் தற்போது காணப்படும் பிரச்சினைக்கு தீர்வு காண்போம்" என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# இலங்கை முப்படையினர் 160பேர் இந்தியாவுக்கு குடும்பத்துடன் சுற்றுலா





(டில்லி)

இலங்கையின் முப்படைகளைச் சேர்ந்தவர்கள் மற்றும் அவர்களின் குடும்பத்தினர் அடங்கலாக 160 பேர் இந்தியாவுக்கு சுற்றுலா மேற்கொண்டுள்ளனர்.

நேற்று இவர்கள் இந்தியாவில் புத்தகயாவுக்கு அழைத்துச் செல்லப்படவுள்ளதாக கொழும்பிலுள்ள இந்திய உயர்ஸ்தானிகராலயம் தெரிவித்துள்ளது.

இந்திய விமானப்படையின் சீ-17 ரக விமானத்தில் இவர்கள் இந்தியாவுக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர்.

இராணுவ உறவுகளைப் பலப்படுத்தும் நோக்கில் இலங்கையின் முப்படைகளையும் சேர்ந்த ஒரு தரப்பினர் இந்தியாவுக்கு அழைத்துச் செல்லப்பட்டதாக இந்திய இராணுவப்பேச்சாளர் அமன் ஆனந்தை மேற்கோள்காட்டி அந்நாட்டு ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது. (இ-7)

# படகு கவிழ்ந்து காணாமல் போன இருவரின் சடலங்கள் மீட்பு

(கொழும்பு)

குருநாகல், வாரியப்பொல, மலகனே குளத்தில் படகொன்று கவிழ்ந்ததில் காணாமல்போயிருந்த இருவருடைய சடலங்களும் மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த இருவருடைய சடலங்களும் நேற்று முன்தினம் மாலை மீட்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர். இதேவேளை, குறித்த இரு சடலங்களும் ராகம, பட்டுவத்த பகுதியைச் சேர்ந்த 20 மற்றும் 48 வயதுடையவர்களுடையதென விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது. (இ-7)





## தாமதம் வேண்டாமே!

காலதாமதம் என்பது இப்போது சாதாரணமாகி விட்டது.

"தாமதமா வந்ததைப் போயி பெரிசா பேசுறீங் களே" என்று கூட சிலர் கோபிப்பதுண்டு. காலதாம தத்தின் விபரீதத்தைச் சொல் லும் கதை இது.

தேவலோக சபைக்கு வந்த தேவேந்திரன் சிம் மாசனத்தில் அமர்ந்து விட் டான். எல்லா தேவர்களும் அவனுக்கு முன்பாக வந்து காத்திருந்தார்கள். காம தேனு மட்டும் நீண்டநேரம் கழித்தே சபைக்கு வந்ததால் இந்திரனுக்கு கடும் கோபம் வந்தது. "காமதேனுவே! காலம் கடந்து வந்த நீ பூலோ கத்தில் காட்டுப்பசுவாக பிறப் பாய்" என்று சபித்தான்.

காமதேனு இந்திராணியி டம் சென்று அழுதது. இந்தி ராணி காமதேனுவிடம் கவ லைப்படாதே! பூலோகத்தில் வகுளாரண்யக்ஷேத்திரம் சென்று சிவபெருமானை வழி படு. சாப விமோசனம் உண் டாகும் என்று வழிகாட்டினாள்.



கடவுள் ஒரு கதவை மூடி னால், மற்றொரு கதவைத் திறந்து விட்டாரே என்று காமதேனுவுக்கு ஆறுதல்...!

அது பூவுலகில் கபில முனிவரின் ஆச்சிரமத்தை அடைந்தது. முனிவரின் ஆணைப்படி, தினமும் காது மடலில் கங்கை நீரை ஏந் திச் சென்று சிவனுக்கு அபி ஷேகம் செய்து வழிபட்டது. சாப விமோசனம் கிடைக் கும் காலம் நெருங்கியது. ஒருநாள்.....

வழிபாட்டிற்கு செல்லும் வழியில் அந்தப் பசுவை சிவன் வேங்கைப்புலியாக மாறி வழி மறித்தார். பயம் சிறிதும் அற்ற பசு, புலியே! என் அன்றாடக் கடமை யான சிவவழிபாட்டுக்குச் சென்று கொண்டிருக்கி றேன். திரும்பி வரும்போது, என்னை நீ உணவாக்கிக் கொள்! என்றது. புலியும் சம்மதித்தது. சொன்ன வாக்குத் தவறாமல் பசு, சிறிது நேரத்தில் திரும்பி வர புலி அங்கு தென்படவி ல்லை. சத்திய நெறி தவ றாத பசுவின் முன் சிவன், தன் துணைவி பார்வதியு டன் ரிஷப வாகனத்தில் காட்சியளித்தார். பசு சாப விமோசனம் பெற்று, காம தேனுவாக தேவலோ கத்தை அடைந்தது.

வேங்கை வடிவில் சிவன் தோன்றிய இடம் "வேங் கைவாசல்" என அழைக் கப்படுகிறது. புதுக்கோட்டை அருகிலுள்ள இத்திருத்த லம், பசு (கோ) தன் காதில் (கர்ணம்) கங்கை நீரை ஏந்தி வந்து அபிஷேகம் செய்ததால் "கோகர்ணம்" என பெயர் பெற்றது.

புரிந்து கொள்ளுங் கள்... காலதாமதத்தால் சுகமான வாழ்க்கை பறிபோய் விடும். இனி, நேரத்துக்கு எதையும் செய்து முடிப்பீர்களா!




❖363-உரோமப் பேரரசர் யூலியன் சாசானியாவில் இருந்து பின்வாங்கும் போது கொல்லப்பட் டார். தளபதி யோவியன் போர்க்களத்தில் பேரரசராக போர்வீரர்களால் நியமிக்கப்பட் டான்.

❖1409-மேற்கு சமயப்பிளவு: கத்தோலிக்க திருச்சபை இரண்டாகப் பிளவடைந்தது. பீசா பொதுச் சங்கம் உரோமின் திருத்தந்தை பன்னி ரெண்டாம் கிரகோரியையும் பன்னிரண் டாம் பெனடிக்டையும் இணைத்ததை அடு த்து, பெத்ரோசு பிலார்கசு எதிர்-திருத்தந்தை ஐந்தாம் அலெக்சாண்டர் ஆக நியமிக் கப்பட்டார்.

❖1830-நான்காம் வில்லியம் பிரித்தானியாவின் அரசராக முடிசூடினார்.

❖1936-முதலாவது செயல்முறை ரீதியான உலங்கு வானூர்தி (Focke-Wulf Fw 61) பறக்க விடப்பட்டது.

❖1945-ஐக்கிய நாடுகள் பட்டயம் சான் பிரான்சிஸ் கோவில் கையெழுத்திடப்பட்டது.

❖1948-முதலாவது இருமுனை சந்தி திரான்சிஸ்டருக் கான காப்புரிமத்தை வில்லியம் ஷாக்லி பெற்றார்.

❖1975-இந்திரா காந்தி இந்தியாவில் அவசரகாலச் சட்டத்தைப் பிறப்பித்தார்.

❖1977-எல்விஸ் பிரெஸ்லி தனது கடைசி இசை நிகழ்ச்சியை இந்தியானாபோலிசுவில் நடத்தினார்.

❖1995-அடிஸ் அபாபாவில் எகிப்திய அரசுத்தலைவர் ஒசுனி முபாரக் மீது கொலை முயற்சி மேற்கொள்ளப்பட்டது.

❖2015-ஐக்கிய அமெரிக்க உச்ச நீதிமன்றம் அரசமைப்பின் 14வது திருத்தத்தின் படி ஒரு- பால் இணையரின் திருமணம் புரிவதற்கு உரிமை உள்ளதென தீர்ப்பு வழங்கியது.

**பிறப்புகள்**

❖1730-சார்லசு மெசியர், பிரான்சிய வானியலாளர் (இ. 1817)

❖1797-இமாம் சாமீல் செச்சினிய முஸ்லிம் அரசியல் தலைவர் (இ. 1817)

❖1824-வில்லியம் தொம்சன், அயர்லாந்து-இசுக் கொட்டிய இயற்பியலாளர் (இ. 1907)

❖1838-பங்கிம் சந்திர சட்டர்ஜி, வங்காளக் கவிஞர், ஊடகவியலாளர் (இ. 1894)

❖1892-பேர்ல் பக், நோபல் பரிசு பெற்ற அமெரிக்க எழுத்தாளர் (இ. 1973)

❖1906-ம.பொ.சிவஞானம், தமிழக அரசியல்வாதி, தமிழறிஞர் (இ. 1995)

❖1914-இலைமன் சுட்டிராங் சுபிட்சர், அமெரிக்கக் கோட்பாட்டு இயற்பியலாளர், வானியலா ளர், மலையேறி (இ. 1997)

❖1916-செம்மஞ்சேரி குன்னிராமன் நாயர், கேரள கதகளி நடனக் கலைஞர்

❖1924-இளையபெருமாள், தமிழக தலித் அரசி யல்வாதி (இ. 2005)

❖1930-சு.சபாரத்தினம், ஈழத்துப் பத்திரிகையா ளர், எழுத்தாளர் (இ. 2013)

❖1943-யாரொசுலாவ் வாச்செக், செக் தமிழறிஞர், இந்தியவியலாளர் (இ. 2017)

❖1954-ஏ.பி.ஜிதேந்திர ரெட்டி, இந்திய அரசி யல்வாதி

❖1960-சுரேஷ் கோபி, மலையாள நடிகர்

❖1962-ஒலாண்டா உமாலா, பெரு அரசியல்வாதி

**இறப்புகள்**

❖1274-நசீருத்தீன் அத்-தூசீ, பாரசீக அறிவிய லாளர், எழுத்தாளர் (பி. 1201)

❖1541-பிரான்சிஸ்கோ பிசாரோ, எசுப்பானிய நாடுகாண் பயணி, அரசியல்வாதி (பி. 1471)

❖1796-டேவிட் ரிட்டன்ஹவுஸ், அமெரிக்க வானி யலாளர் (பி. 1732)

❖1827-சாமுவேல் கிராம்டன், ஆங்கிலேயக் கண்டுபிடிப்பாளர் (பி. 1753)

❖1856-மக்சு இசுரேனர், செருமானிய மெய்யிய லாளர் (பி. 1806)

❖1972-எம்.எம். தண்டபாணி தேசிகர், தமிழிசைக் கலைஞர் (பி. 1908)

❖1975-ஓசேமரிய எஸ்கிரிவா, ஸ்பானிய மதகுரு, புனிதர் (பி. 1902)

❖1985-செ.எ.ஆனந்தராஜன், இலங்கைத் தமிழ் கல்வியாளர் (பி. 1932)

❖2010-டி.சுதர்சனம், தமிழக அரசியல்வாதி (பி. 1941)

❖2015-கே.எம்.பஞ்சாபிகேசன், இலங்கை நாதஸ்வரக் கலைஞர் (பி. 1924)

**சிறப்பு நாள்**

❖விடுதலை நாள் (மடகாசுகர், 1960)

❖விடுதலை நாள் (சோமாலியா)

❖சித்திரவதைக்கு ஆளானோருக்கான சர்வதேச ஆதரவு நாள்




| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | மருதனார்மடம் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 100 | 100 | 70 | 100 | 120 | 100 |
| உருளைக்கிழங்கு | 110 | 140 | 110 | 120 | 140 | 140 |
| பச்சைமிளகாய் | 250 | 400 | 330 | 320 | 500 | 300 |
| தக்காளி | 300 | 300 | 320 | 280 | 250 | 280 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 50 | 35 | 50 | 40 | 40 |
| கோவா | 200 | 200 | 130 | 160 | 200 | 200 |
| கரட் | 250 | 400 | 230 | 320 | 400 | 300 |
| பூசணி | 40 | 40 | 20 | 30 | 40 | 30 |
| புடோல் | 120 | 120 | 140 | 120 | 160 | 120 |
| வாழைக்காய் | 80 | 80 | 35 | 80 | 80 | 80 |
| சின்ன வெங்காயம் | 150 | 200 | 100 | 180 | 160 | 130 |
| பெரிய வெங்காயம் | 100 | 140 | 95 | 120 | 140 | 120 |
| பாகற்காய் | 400 | 500 | 330 | 240 | 300 | 340 |
| வெண்டிக்காய் | 130 | 150 | 110 | 100 | 120 | 100 |
| கருணைக் கிழங்கு | 120 | 100 | 80 | 120 | 120 | 100 |
| பயற்றங்காய் | 200 | 250 | 160 | 180 | 140 | 200 |
| லீக்ஸ் | 250 | 400 | 240 | 340 | 400 | 280 |
| பீற்றூட் | 140 | 250 | 80 | 260 | 200 | 300 |
| கறிமிளகாய் | 300 | 400 | 140 | 260 | 400 | 340 |
| முருங்கைக்காய் | 600 | 600 | 390 | 400 | 400 | 800 |
| போஞ்சி | 320 | 400 | — | 300 | 320 | 300 |
| கத்தரிதம்புள்ள | 80 | 50 | — | — | 120 | 80 |
| கீரை-1பிடி | 40 | 30 | 30 | 50 | 40 | 30 |
| தேசிக்காய் | 80 | 70 | 90 | 120 | 160 | 140 |
| தேங்காய் (ஒன்று) | 70 | 30-60 | 25-60 | 65 | 50-70 | 70 |
| இராசவள்ளி | 200 | 200 | 140 | 160 | 160 | 160 |
| வெங்காயப்பூ | 300 | 300 | — | 240 | 320 | 200 |
| முள்ளங்கி | 140 | 150 | 40 | 120 | 200 | 80 |
| பொன்னாங்காணி | 40 | 40 | 10 | 50 | 30 | 30 |
| வல்லாரை | 15 | 20 | 10 | 20 | 20 | 60 |
| ஈரப்பலா | 60 | 50 | 120 | 70 | 100 | 100 |

ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு
ஒற்றுமை நீங்கில் அனைவருக்கும் தாழ்வு
- மகாகவி பாரதியார்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## ஒற்றுமை பற்றி இப்போதுதான் புரிகிறதா?

தமிழ்த் தலைவர்கள் பிரிந்து செல்வார்களாக இருந்தால் அது தமிழினத்தின் அழிவுக்கே வழிவகுக்கும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான இரா.சம்பந்தர் கூறியுள்ளார்.

வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் அவர்களின் நூல் வெளியீடு நேற்று முன்தினம் யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்றபோது, அதில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே இரா.சம்பந்தர் அவர்கள் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

ஒற்றுமை பற்றிக் கூறுவதென்பது ஏற்புடைய கருத்து என்ற அடிப்படையில் சம்பந்தர் கூறிய கருத்தை எவரும் நிராகரிக்க மாட்டார்கள் என்பது நிறுதிட்டமான உண்மை.

பொதுவில் அரசியல்வாதிகள் விலக்க முடியாத சில கருத்துக்களை முன்வைத்து தங்களின் அரசியல் ஏற்ற இறக்கங்களை சீராக்கிக் கொள்வர்.

அந்தவகையில்தான் தமிழ் அரசியல் தலைவர்களின் ஒற்றுமை பற்றி இரா.சம்பந்தர் கருத்துரைத்துள்ளார்.

தமிழ் அரசியல் தலைவர்கள் ஒற்றுமையாக இருக்காவிட்டால் தமிழினம் அழிந்துவிடும் என்பது அவரின் எச்சரிக்கை. இந்த எச்சரிக்கை ஒன்றும் புதியதல்ல.

அப்படியாயின் இரா.சம்பந்தர் அவர்கள் ஒற்றுமை பற்றி ஏன் அழுத்திக் கூறினார் எனில்,

தனது உரை நியாயமானது. அந்த உரையை எவரும் நிராகரிக்க முடியாது, அவ்வாறு யாரேனும் நிராகரிக்க முற்பட்டால், முற்பட்டவர் வெகுசன விரோதியாகுவார்.

தவிர, தமிழ்த் தலைவர்கள் ஒற்றுமையாக இருக்க வேண்டும் என 2018ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் கூறியிருந்தேன் என எதிர்காலத்து நியாயப்படுத்தலுக்கும் அதனைப் பயன்படுத்த முடியும்.

இந்த வகையில்தான் தமிழ்த் தலைவர்களின் ஒற்றுமையின் அவசியத்தை சம்பந்தர் மீள்வலியுறுத்தலுக்கு உட்படுத்தினார்.

இவ்வாறு ஒற்றுமை பற்றிக் கூறுவதனூடு; புதிய கட்சியை ஆரம்பிக்கும் நோக்கம் முதலமைச்சர் விக்னேஸ்வரனுக்கு இருந்தால் அதனை வெட்டிவிடுவதுதான் சம்பந்தரின் தந்திரோபாயம்.

எதுஎவ்வாறாயினும் நாம் இங்கு கேட்பதெல்லாம் தமிழ்த் தலைவர்களின் ஒற்றுமை பற்றிக் கூறுகின்ற சம்பந்தர் அவர்கள் கூட்டமைப்பில் தனித்து, தான் தீர்மானம் எடுத்தபோது; தமிழ்க் கட்சிகள் கூட்டமைப்பில் இருந்து வெளியேறியபோது; வடக்கின் முதல்வர் விக்னேஸ்வரனுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவந்தபோதெல்லாம் புரியாமல் போனது ஏன் என்பதுதான்?

ஆம், அப்போது கூட்டமைப்புக்கு தமிழ் மக்கள் வாக்களித்தனர். இலங்கை தமிழரசுக் கட்சியின் வீட்டுச் சின்னத்துக்கே தமிழ் மக்களின் வாக்கு என்ற நிலைமை இருந்தபோது எவரையும் தூக்கி எறிய முடிந்ததுடன் யார் கேள்வி கேட்டாலும் அதனை உதாசீனம் செய்யவும் துணிவிருந்தது.

ஆனால் நடந்து முடிந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலில் கற்றுக் கொண்ட பாடம் இப்போது தமிழ்த் தலைவர்களின் ஒற்றுமை அவசியம் என்று சம்பந்தர் அவர்களைக் கூறவைக்கிறது.

ஐயா! தமிழ்ச் சனங்கள் ஒற்றுமையாக நின்று தங்கள் வாக்குகளை உங்களுக்கு வழங்கிய போது, நீங்கள் ஒற்றுமையின் பலத்தை உணர்ந்திருந்தால், சமகாலத்தில் தமிழ் மக்களுக்கு ஏற்பட்டிருக்கக்கூடிய அவலம் ஏற்பட்டிருக்குமா? என்பதை நீங்களே சிந்தித்துப் பாருங்கள்.

# ஹிட்லரின் மூத்த சகோதரர் பெற்ற கடனிலிருந்து தப்பித்துக் கொண்டோம்

## பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு

தான் தொடர்ந்து ஆட்சியில் இருந்திருந்தால் மாகம்புற, மத்தள போன்று துறைமுகம், விமான நிலையங்கள் பல அமைத்திருப்பேன் என ஹிட்லரின் மூத்த சகோதரர் கூறியுள்ளார். எனினும் அவரது ஆட்சிக் காலத்தின் போது துறைமுகம், விமான நிலையத்தை நிர்மாணிக்க எடுத்த கடனில் இருந்து நாம் இலகுவாக தப்பிக்கொண்டோம் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

காலி வெலிவிட்டிய திவிதுர பிரதேச செயலகத்திற்கான புதிய கட்டடத்தை திறந்து வைத்து உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

டொலரின் பெறுமதி அதிகரிப்பதனை எம்மால் தடுக்க முடியாது. அது எமது கைகளில் இல்லை. ஆனால் ரூபாயின் பெறுமதியை பாதுகாக்க வட்டி வீதத்தை அதிகரிக்கலாம். அவ்வாறு செய்தால் எமது வியாபாரிகளிடம் பணம் இல்லாமல் போய்விடும். இவ்வாறான பெரும் நெருக்கடியான நிலைமைக்கே நாம் முகங்கொடுத்துள்ளோம்.

தற்போது நாம் பிரதேச செயலகங்கள் பலவற்றை நவீன மயப்படுத்தி வருகின்றோம். இதன்படி தெற்கு அபிவிருத்தியை பொறுத்த வரையில் நாம் விசேட அவதானம் செலுத்தியுள்ளோம்.

குறிப்பாக தெற்கில் சுற்றுலா துறை உட்பட பல்வேறு துறைகளை நாம் வளர்ச்சிக்கு உட்படுத்த திட்டமிட்டுள்ளோம்.

இதன்பிரகாரம் தெத்துவ, பென்தர போன்ற பகுதிகளை இதற்காக தேர்ந்தெடுத்து பெரும் வலயமொன்றை ஆரம்பிக்கவுள்ளோம். அத்துடன் கிராமிய தொழில் முயற்சியாளர்களுக்கான பூரண உதவி ஒத்தாசை வழங்கும் வேலைத்திட்டத்தை தற்போது நாம் ஆரம்பித்துள்ளோம்.

அரசாங்கத்திடம் பணம் இல்லாமல் நாட்டை கட்டியெழுப்புவது பெரும் கடினமாகும். நாட்டின் அபிவிருத்திக்காக அதிகளவில் கடன் பெறப்பட்டன. எனினும் தற்போது நாம் செலுத்த வேண்டிய கடன் தொகையை முகாமைத்துவம் செய்து பொருளாதாரத்தை சீரான நிலைமைக்கு கொண்டு வருகின்றோம்.

இந்நிலையில் தான் தொடர்ந்து ஆட்சியில் இருந்திருந்தால் மாகம்புற, மத்தள போன்று துறைமுக, விமான நிலையங்கள் பல அமைத்திருப்பேன் என ஹிட்லரின் மூத்த சகோதரர் கூறியுள்ளார்.

எனினும் அவரது ஆட்சி காலத்தின்போது துறைமுகம், விமான நிலையத்தை நிர்மாணிக்க எடுத்த கடனில் இருந்து நாம் இலகுவாக தப்பிக்கொண்டோம்.

இன்று பலர் நாட்டை வெளிநாடுகளுக்கு தாரை வார்ப்பதாக எம் மீது குற்றம் சுமத்துகின்றனர். எனினும் விற்பது எமது நோக்கமல்ல. அந்நிய செலாவணியை அதிகரிப்பதே எமது நோக்கமாகும். தற்போது சீன மெர்சன்ட் நிறுவனத்தின் வருகையை அடுத்து பல நிறுவனங்கள் இலங்கையில் முதலீடு செய்ய ஆர்வம் கொண்டுள்ளன.

இந்நிலையில் தற்போது நாம் 2025இல் வளமான நாடு என்ற திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளோம். இதனூடாக நாட்டின் வருமானத்தை அதிகரித்து வளம் பெறசெய்ய நாட்டு மக்கள் எமக்கு ஆதரவு வழங்க வேண்டும் என்றார். (ம)

# இராணுவ அதிகாரியின் மிரட்டலால் மயங்கி விழுந்த தமிழ்ப் பெண்

## ஐ.நா கூட்டத்தொடரில் சம்பவம்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் பக்க அறையில் இடம்பெற்ற கூட்ட தொடர் ஒன்றின்போது தமிழ் பெண் ஒருவர் மயங்கி வீழ்ந்த நிலையில் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் கூட்டத்தொடர் இடம்பெற்று வரும் நிலையில், இதன் பக்க அறையில் கூட்டந் தொடர் ஒன்று இடம்பெற்றது.

இதில் ஈழத்தில் இருந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் ஐந்து பேர் கலந்துகொண்டிருந்தனர். இந்த கூட்டத்தின்போது இலங்கை இராணுவத்தின் முன்னாள் அதிகாரிகள் மிரட்டல் தொனியில் பேசியுள்ளனர்.

இதன்போது மயக்கமடைந்த தமிழ்ப் பெண் ஒருவர் ஜெனிவா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து கருத்து தெரிவித்துள்ள தோழர் திருமுருகன் காந்தி, "ஐ.நா. மனித உரிமைகள் ஆணையகத்தில், தமிழீழத்தில் இலங்கை அரசால் கடத்தப்பட்டோர் பற்றி வாக்குமூலம் அளிக்க வந்த அப்பாவி தமிழர்களை இலங்கை அதிகாரிகள் மிரட்டியுள்ளனர்.

இதன் மூலம் இலங்கை அரசின் அராஜகம் உச்சகட்டத்தை அடைகிறது" என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ம)

## அன்றாட வாழ்வில் ஐஸ்வர்யம் அதிகரிப்பதற்கான ஆசாரங்கள்




### பூஜைகளில் செய்யக்கூடாதவைகள் எவை?

பிரதிமை, படம், யந்திரம் இவைகளைத் தினந்தோறும் ஸ்நானம் செய்விக்கக்கூடாது.

பருவ தினங்களிலும் தூசி படிந்த போதும் மட்டும் ஸ்நானம் செய்வித்தால் போதும்.

விஷ்ணுவுக்கு அட்சதையால் அர்ச்சனை செய்யக்கூடாது.

துர்க்கையை அருகம்புல்லால் அர்ச்சிக்கக் கூடாது.
சூரியனை வில்வதளத்தால் அர்ச்சிக்கக்கூடாது.
விஷ்ணுவுக்கு ஊமத்தையும் எருக்கம்பூவும் கூடாது.
லக்சுமியை தும்பைப் பூ கொண்டு அர்ச்சிக்கக்கூடாது.
சரஸ்வதியை பவள புஷ்பத்தால் அர்ச்சிக்கக்கூடாது.
பைரவரை மல்லிகைப்பூவினால் அர்ச்சிக்கக்கூடாது.
பரமசிவனை தாழம்பூவால் அர்ச்சிக்கக்கூடாது. *(தொடரும்)*

# அனைத்து மத மக்களும் ஒன்றாக வாழவேண்டும்

## முருகன் கோவில் கும்பாபிஷேகத்தில் ரவி

(கொழும்பு)

இந்த நாட்டில் பல மதங்கள் பல இனங்களைக்கொண்ட மக்கள் வாழ்ந்து வருகின்றனர். அனைவரும் ஒன்றாக வாழ வேண்டும் என்பதே அனைவருடைய எதிர்பார்ப்பாகும் என ஐ.தே.க நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பு - 7 டொரிங்டன் ஸ்ரீமுருகன் ஆலய கும்பாபிஷேகம் நேற்று இடம் பெற்றது. இதில் கலந்து கொண்ட ரவி கருணாநாயக்க ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே இவ் வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்த நாட்டிலுள்ள ஒவ்வொரு பிரஜையும், இது எனது நாடு, நான் இலங்கையன் என்ற பெருமையோடு வாழ வேண்டும்.

நாடு முழுவதும் இது என்னுடைய நாடு என்று சுதந்திரமாக வாழும் நிலை ஏற்பட வேண்டும் என்பதே எனது ஆசை எனவும் ரவி தெரிவித்துள்ளார். (இ-7)

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



- பிறருக்கு உதவுவது என்பது நம்மை நாம் பண்படுத்திக் கொள்வதற்காக நேரப்படுகின்ற வாய்ப்பு என்பதை உணர்ந்து கொள்ளுங்கள்.
- இறைவன் ஒரு பெரிய காந்தக் கல்லினை போல இருக்கிறார். நாமெல்லாம் இரும்பு துகள்களைப் போல அவரால் எப்போதும் கவரப்பட்டு இருக்கிறோம்.
- வாழ்வில் ஏற்படும் கொடிய போராட்டங்கள், கொந்தளிப்புகள் அனைத்தும், முடிவில் இறைவனை அடைந்து அவருடன் ஒன்று கலப்பதற்காகவே.
- எண்ணத்தையும், புத்தியையும், ஆராய்ச்சி மனப்பான்மையையும் கடக்கும்போது தான் கடவுளை நோக்கி முதல் அடியை எடுத்து வைக்கிறீர்கள்.
- தன்னலம், கணக்குப் பார்த்தல், பேரம்பேசுதல், அர்த்தமற்ற பயம் போன்றவற்றில் இருந்து கடந்து வந்தவனால் மட்டுமே முழுமையான பக்தி செலுத்த முடியும்.
- அன்பே உலகை அரவணைத்துச் செல்லும் உயர்ந்த குணம். அன்பு நிறைந்திருக்குமிடத்தில் குறுகிய சிந்தனைகள் உண்டாவதில்லை.

# யாழ்.வீரர்கள் இருவர் தேசிய அணியில் பயிற்சி

## கிரிக்கெட் சபை அறிவிப்பு



தேசிய 19 வயதுப்பிரிவு அணித் தெரிவுக்காக இலங்கை கிரிக்கெட் சபையில் நடைபெறும் 35 வீரர்களைக் கொண்ட பயிற்சி முகாமில் கலந்துகொள்வதற்காக செல்வராசா மதுசன் மற்றும் விஜயகாந்த் விஜஸ்காந்த் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி வீரர்களான இவர்கள், கடந்த வாரம் நடைபெற்று முடிந்த, மாகாணங்களுக்கிடையிலான கிரிக்கெட் போட்டியில் வடமாகாண அணிக்காக பங்குபற்றியிருந்தனர். இதில் செல்வராசா மதுசன் பந்து வீச்சு மற்றும் துடுப்பாட்டத்தில் கலக்கியிருந்தார். அதேபோல், விஜஸ்காந்தும் சிறப்பாகச் செயற்பட்டு இருந்தார். இந்நிலையில் இவர்களின் தனிப்பட்ட திறமைகளை கவனத்தில் எடுத்து, இலங்கை தேசிய அணிக்கு வீரர்களை தெரிவு செய்யும் 35 வீரர்களைக் கொண்ட குழாமுக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கான பயிற்சிகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இதிலிருந்து, தெரிவு செய்யப்படும் 15 வீரர்கள் கொண்ட அணியானது, இந்திய 19 வயதுப்பிரிவு அணியுடன் நடைபெறவுள்ள போட்டியில் மோதவுள்ளது.

செல்வராசா மதுசன் வலது கை துடுப்பாட்ட வீரர் என்பதுடன், அவருடைய மிகப்பெரிய பலம் வலது கை மிதவேகப் பந்துவீச்சு ஆகும். மாகாணங்களுக்கிடையிலான போட்டியில், வடமேல் மாகாண அணிக்கு இடையிலான போட்டியில் 6 விக்கெட்களைக் கைப்பற்றியதுடன், 34 ஓட்டங்களையும் பெற்றிருந்தார். விஜயகாந் விஜஸ்காந்த் வலது கை துடுப்பாட்ட வீரர் என்பதுடன், வலது கை சுழற்பந்துவீச்சாளர் ஆவார். (க-26)



யாழ்.மாவட்ட கனிஷ்ட மெய்வல்லுநர் போட்டியில் பதக்கங்களைப் பெற்ற யாழ்.உயரப்புலம் மெதடிஸ்மிஷன் வித்தியாலய மாணவர்கள் விளையாட்டுப் பொறுப்பாசிரியருடன் நிற்பதைப் படத்தில் காணலாம்.

# வடமாகாண ரீதியிலான கயிறிழுத்தல் போட்டி

அரியாலை சரஸ்வதி சன சமூக நிலையத்தின் 99 ஆவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு போட்டிகள் நடத்தப்பட்டு வருகின்றன.

அந்த வகையில் யாழ். மாவட்ட கயிறிழுத்தல் சங்கத்தின் அனுமதியுடன் வடமாகாண ரீதியிலான ஆண்களுக்கான கயிறிழுத்தல் போட்டி ஒன்று நடத்தத் தீர்மானித்துள்ளது. எனவே இக் கயிறிழுத்தல் போட்டியில் பங்குபற்ற விரும்பும் அணிகள் 077 309 5745 எனும் இலக்கத்துடன் தொடர்பு கொண்டு தங்கள் பதிவுகளை மேற்கொள்ளவும். (க)

# அருந்தவன் சகல துறையிலும் அசத்தல் கனகராயன்குளம் ஐக்கியம் சம்பியன்



மருதோடை செஞ்சுடர் விளையாட்டுக்கழகத்தின் ஒழுங்குபடுத்தலில் ஊஞ்சற்கட்டி, வெடி வைத்தகல்லு, மருதோடை ஆகிய கிராமங்களிலிருந்து உயிர் நீத்த வீரர்கள் நினைவான மென்பந்து வெற்றிக் கிண்ண மென்பந்து கிரிக்கெட் போட்டி கடந்த சனி,ஞாயிறு ஆகிய இரண்டு தினங்கள் மருதோடை பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

எட்டு அணிகள் A,B என்ற இருபிரிவுகளில் உள்வாங்கப்பட்டு லீக் முறையிலான ஆட்டங்கள் நடைபெற்றன. இரண்டு பிரிவுகளிலுமிருந்து இரண்டு அணிகள் தெரிவு செய்யப்பட்டு அரையிறுதி வாய்ப்பைப் பெற்றன.

அரையிறுதியில் மருதோடை செஞ்சுடர் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து கனகராயன் குளம் ஐக்கிய விளையாட்டுக்கழகம் மோதியது. விறுவிறுப்பான போட்டியில் மூன்று ஓட்டங்களால் ஐக்கியம் வெற்றி பெற்றது. மற்றைய பிரிவில் பழையவாடி உதயசூரியனை எதிர்த்து ஒலுமடு யங்ஸ்ரார் விளையாட்டுக்கழகம் மோதியது.

இந்தப் போட்டியும் விறுவிறுப்பான போட்டியாக அமைந்தாலும் இறுதியில் பதினெட்டு ஓட்டங்களால் உதய சூரியன் வெற்றி பெற்று இறு திப்போட்டியில் கனக ராயன் குளம் ஐக்கியம் அணியுடன் மோதியதில் கனகராயன் குளம் ஐக்கியம் அணி இருபது ஓட்டங்களால் வெற்றி பெற்று வெற்றிக் கிண்ண த்தை தனதாக்கியது.

பழையவாடி உதயசூரியன் அணி இரண்டாம் இடத்தைப் பெற்றது. இறுதிப் போட்டியின் ஆட்டநாயகனாக கனகராயன் குளம் ஐக்கியம் அணிவீரர் அருந்தவனும், தொடரின் ஆட்டநாயகன் மற்றும் சிறந்த பந்து வீச்சாளராக அதே அணியைச் சேர்ந்த மிதுர்சனும், ஒரு போட்டியில் அதிகூடிய ஓட்டங்கள் பெற்ற வீரராக மரு தோடை செஞ்சுடர் அணி வீரர் லிதனும் தெரிவு செய்யப்பட்டார்கள். (க)



யாழ். மாவட்ட இளைஞர் சம்மேளன துடுப்பெடுத்தாட்ட இறுதிப் போட்டியில் கரவெட்டி பிரதேச இளைஞர் அணியை 7விக்கெட்டுக்களால் வீழ்த்தி தேசிய மட்ட துடுப்பாட்டப் போட்டிக்கு தெரிவாகியது பருத்தித்துறை பிரதேச இளைஞர் அணி. கடந்த ஞாயிற்றுக்கிழமை புற்றளை மாவில் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டியில் 66 ஓட்டங்களை வெற்றி இலக்காக கொண்டு களமிறங்கிய பருத்தித்துறை பிரதேச இளைஞர் அணி 6.3 பந்துப் பரிமாற்றங்களில் 3 இலக்குகளை மாத்திரம் இழந்து வெற்றி இலக்கை அடைந்து சம்பியன் பட்டத்தை வென்றது. (க-60)

# மைக்கல் ஹற்றிக் கோல் வவு.வோரியர்ஸ் வெற்றி



மைக்கல் ஹற்றிக் கோல் அடித்தார். வவுனியா வோரியர்ஸ் அணி, 04:00 என்ற கோல்கள்கணக்கில்வென்றது.

வடக்கு கிழக்கு மாகாண வீரர்களை ஒன்றிணைத்து நடத்தப்படும் வடக்கு, கிழக்கு பிறிமியர் லீக்கின், மூன்றாவது லீக் சுற்று ஆட்டங்கள் தற்போது யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெற்று வருகின்றன.

இதில் கடந்த 23 ஆம் திகதி நடைபெற்ற போட்டியில் வவுனியா வோரியர்ஸ் அணியை எதிர்த்து மட்டு நகர் சுப்பர் கிங்ஸ் அணி மோதியது.

போட்டி தொடங்கிய முதல் வவுனியா வோரியர்ஸ் அணியின் ஆட்டமே மைதானத்தில் நிலை பெற்றது. 26 ஆவது நிமிடத்தில் வோரியர்ஸ் அணியன் என்.மைக்கல் முதலாவது கோலை அடித்தார். தொடர்ந்து, 33 ஆவது நிமிடத்தில் வோரியர்ஸ் அணியின் பி.மனோஜ் கோல் ஒன்றை அடித்தார். முதற்பாதியாட்டம் அந்த இரண்டு கோல்களுடன் நிறைவுக்கு வந்தது.

இரண்டாவது பாதியாட்டத்தில், 59 ஆவது நிமிடத்தில் வோரியர்ஸ் அணியின், என்.மைக்கல் கோல் ஒன்றை அடித்தார். போட்டியின் 83 ஆவது நிமிடத்தில் மைக்கல் மேலும் ஒரு கோலை அடித்தார். போட்டி முடிவில் வவுனியா வோரியர்ஸ் அணி, 04:00 என்ற கோல்கள் கணக்கில் வென்றது. ஆட்டநாயகனாக என். மைக்கல் தெரிவு செய்யப்பட்டார். (க-26)

## சர்வதேச குற்றவியல்...

யில் நேற்றைய அமர்வில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளரும் மாநகர சபை உறுப்பினருமான விஸ்வலிங்கம் மணிவண்ணனண் முன்மொழிந்த பிரேரணையை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஐக்கிய தேசியக் கட்சி, சிறிலங்கா சுதந்திரக் கட்சி ஆகியவற்றின் ஆதரவுடன் கூட்டமைப்பினர் வழிமொழிய தீர்மானமாக நிறைவேற்றப்பட்டது குறிப்பிடத்தக்கது.

மாநகர சபையின் ஆறாவது அமர்வு சபை முதல்வர் இமானுவேல் ஆர்னோல்ட் தலைமையில் மாநகர மாநாட்டு மண்டபத்தில் நேற்று மாலை நடைபெற்றது. இதன் போது தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் உறுப்பினர் மணிவண்ணன் இலங்கைத்தீவில் இடம்பெற்ற சர்வதேச மனிதாபிமான மற்றும் மனித உரிமை, சட்டமீறல்கள் தொடர்பில் - ஐ.நா மனித உரிமை பேரவை 2015ஆம் ஆண்டு நிறைவேற்றிய 30/01 தீர்மானத்தில்-தம்மால் ஏற்றுக் கொள்ளப்பட்ட கடப்பாடுகளில் இருந்து இலங்கை அரசு விலகியுள்ளதாலும், இலங்கை அரசு அத்தீர்மானத்தை உதாசீனம் செய்துள்ளமையாலும் 2017 மார்ச் இல் வழங்கப்பட்ட 2 வருடகால அவகாசத்தின் முதல் அரைப்பகுதியில் தீர்மானம் 30/01 ஐ நிறைவேற்ற சிறிலங்கா அரசு எவ்வித நடவடிக்கையும் எடுக்கத் தவறியுள்ளமையாலும்,போருக்குப் பின்னராக தொடர்ச்சியாக பதவிக்குவந்த அரசாங்கங்கள் அனைத்தும் உள்ளக ரீதியாக விசாரணைகளைச் செய்வதற்கான அரசியல் விருப்பை குறைந்தபட்சமேனும் கொண்டிருக்காமை நிதர்சனமாக நிரூபிக்கப்பட்டுள்ளமையாலும்

குறிப்பாக ஐ.நா மனித உரிமை பேரவை சர்வதேச குற்றவியல் வழக்கு நடவடிக்கைகளை எடுப்பதற்கு அதிகாரமற்ற சபையாதனாலும் இலங்கை விவகாரம் தொடர்பில் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கு நியாயாதிக்கத்தை அளிக்கும் தீர்மானத்தை அல்லது விசேட சர்வதேச குற்றவியல் தீர்ப்பாயத்தை உருவாக்கும் தீர்மானத்தை ஐ.நா பாதுகாப்புச் சபை நிறைவேற்ற வேண்டும் என கோருகின்றோம் என்றமேற்படி பிரேரணையை சபையில் கொண்டு வந்திருந்தார்.

ஆயினும் இந்தப் பிரேரணையை விவாதிப்பதைத் தாம் விரும்பவில்லை என்றும் அவ்வாறு விவாதித்து இதனை மலினப்படுத்த முடியாது என்றும் மாநகர முதல்வர் இமானுவேல் ஆர்னோல்ட் தெரிவித்திருந்தார். மேலும் மாநகர அதிகாரத்திற்குட்பட்டே செயற்பட முடியுமென்றும் குறிப்பிட்ட ஆர்னோல்ட் தான் இதனை எதிர்க்கவில்லை என்றும் இதில் விவாதம் தேவையற்று என வும் தன்னுடைய கருத்தை தெரிவித்தார்.

இதன் போது எழுந்த மாநகர சபையின் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் உறுப்பினரான மு.ரெமீடியஸ் தமிழ் மக்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட குற்றங்கள் அநீதிகளுக்கு சர்வதேசத்திடம் நீதியைக் கோருவதற்காக தங்களுக்கு வாக்களிக்க வேண்டுமென கடந்த 2009 ஆம் ஆண்டிற்குப் பின்னர் நடைபெற்ற ஒவ்வொரு தேர்தல்களிலும் கோருகின்ற கட்சியினர் இந்தச் சபையில் அதிகாரமில்லை என்று தெரிவிக்கின்றனர்.

இவ்வாறு ஏன் ஒவ்வொரு தேர்தல் காலங்களிலும் மக்களை ஏமாற்றுகின்றீர்கள். மாகாண சபையிலும் இவ்வாறான தீர்மானமொன்று நிறைவேற்றப்பட்டிருக்கின்ற போது முதல்வர் மாகாண சபை உறுப்பினராக இருந்திருக்கின்றார். அங்கு தெரிந்தும் தெரியாமலும் செய்தீர்களா அல்லது நடித்தீர்களா என்றும் கேள்வியெழுப்பியிருந்தார்.

இதற்குப் பதிலளித்த ஆர்னோல்ட் நாங்கள் மக்களுக்கான நீதி கிடைக்க வேண்டுமென்பதில் உறுதியாகவே இருக்கிறோம். ஆனால் இந்தச் சபையில் இதனைக் கொண்டு வந்து மலினப்படுத்த வேண்டாமென்றே கேட்டிருக்கின்றேன். அதனைவிடுத்து தேவையற்ற வேறு விடயங்களை இங்கு கதைக்க வேண்டிய அவசியமில்லை என்றார்.

இதன்போது எழுந்த ஈபிடிபியின் மற்றொரு உறுப்பினரான குகேந்திரன் கடந்த 1997, 1998ஆம் ஆண்டு காலப் பகுதியில் இந்தச் சபையில் நாங்களும் உறுப்பினர்களாக இருந்த காலப் பகுதியில் பல்வேறு தீர்மானங்களை நிறைவேற்றியிருக்கின்றோம். குறிப்பாக தனிநாடு என்றெல்லாம் பெரிய பெரிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றது. ஆனால் இன்றைக்கு ஊடக செய்திகளுக்காகவே சிலர் இவ்வாறு செயற்படுவதாகவும் குறிப்பிட்டார். இங்கு இத் தீர்மானம் நிறைவேற்றப்படுவதால் ஊடகங்களில் செய்திகள் வரும் அவ்வளவு தான் என்றார்.

இதன்போது எழுந்த மணிவண்ணன் நாங்கள் தேர்தலுக்காகவோ அல்லது பதவிகளுக்காகவோ செயற்படுபவர்கள் அல்ல. நாங்கள் எங்களது கொள்கைக்கமையவே செயற்பட்டு வருகின்றோம் என்பதை தெரிவித்துக் கொள்கின்றோம். மேலும், மக்களுக்கு அநீதிகளைச் செய்த்வர்கள் தண்டிக்கப்பட வேண்டும்,எமது மக்களுக்கு நீதி கிடைக்க வேண்டும். ஆகவே அதற்காக இத் தீர்மானம் நிறைவேற்ற அனைவரும் ஒத்துழைக்க வேண்டுமென்றார்.

இந்நிலையில் சர்வதேச மயப்படுத்தப்பட்ட விசாரணைக்கு வரவேண்டுமென்பதில் மாற்றுக் கருத்து இல்லை என்று ஈபிடிபி உறுப்பினர் ரெமீடியஸ் தெரிவித்தார். அதே போன்று இந்தப் பிரேரணையை தாங்கள் எதிர்க்கவில்லை என்றும் ஆதரிப்பதாகவும் ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர் குயிந்தன் தெரிவித்தார். மேலும் கூட்டமைப்பின் உறுப்பினர்களும் இதனை ஆதரித்து தாம் இந்தக் குற்றங்களின் சாட்சியாக இருப்பதாகவும் கூறியிருந்தனர். இதனையடுத்து மணிவண்ணன் முன்மொழிந்த பிரேரணையை கூட்டமைப்பு உறுப்பினர் வழிமொழிய தீர்மானமாக நிறைவேறியது. (ம-4)

# யாழ்.மாநகர சபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் சட்டவிரோதமாக அமைக்கப்படும் கட்டடங்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க சபையில் தீர்மானம்

(யாழ்ப்பாணம்)

யாழ் மாநகர சபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் சட்டவிரோதமாக அமைக்கப்படும் கட்டடங்களுக்கு எதிராக மாநகர சபை கடுமையான நடவடிக்கைகளை எடுக்கவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்.மாநகர சபையின் அமர்வு மாநகர மாநாட்டு மண்டபத்தில் மாநகர முதல்வர் தலைமையில் நேற்று நடைபெற்றது. இதன் போது சட்டவிரோதமாக அமைக்கப்படும் கட்டடங்கள் தொடர்பாக சபையில் சுட்டிக்காட்டப்பட்டதையடுத்தே மேற்படி தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

அதாவது மாநகர சபையின் எல்லைக்குட்பட்ட பகுதியில் கட்டடங்கள் அமைப்பதாயின் மாநகர சபையின் அனுமதி பெறப்பட வேண்டும். ஆனால் அவ்வாறான அனுமதிகள் பெறப்படாது பல கட்டடங்கள் அமைக்கப்படுவதாக சபைக்கு பல தரப்பினர்களும் முறைப்பாடுகளைத் தெரிவித்திருக்கின்றனர்.

இந் நிலையில் அவ்வாறு அமைக்கப்படுகின்ற கட்டடங்களுக்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுப்பதென்றும் தீர்மானிக்கப்பட்டது. அதாவது அவ்வாறான சட்டவிரோத கட்டடங்களை பொது மக்களும் வணிக நிறுவனங்களும் அமைத்து வருகின்றனர்.

ஆகவே இவை தொடர்பில் விழிப்புணர்வை ஏற்படுத்துவதுடன் இதற்கான நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டுமென வலியுறுத்தப்பட்டது. இதற்கமையவே மாநகர சபை நடவடிக்கை எடுப்பதற்கு தீர்மானித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதே வேளை இவ்வாறு சட்டவிரோத மாக கட்டடங்கள் கட்டுபவர்களில் வியாபார நோக்கில் கட்டுபவர்களுக்கு உடனடி நடவடிக்கையும் வழிபாட்டுத் தலங்கள் மற்றும் குடியிருப்புக்களில் கட்டுபவர்களுக்கு நெகிழ்வுத் தன்மையை கடைப்பிடிக்க வேண்டுமென்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

ஆகவே சட்டவிரோதமாக கட்டடங்களைக் கட்டியவர்கள் அதற்கான உரிய அனுமதிகளைப் பெற்றுக் கொள்ள வேண்டும். இல்லையேல் அத்தகைய கட்டடங்களை இடித்தழிக்கும் செயற்பாட்டை மாநகர சபை முன்னெடுக்குமென முதல்வர் ஆர்னோல்ட் தெரிவித்துள்ளார். (ம-4)

# யாழ்.மாநகர சபையின் உறுப்பினர்களை மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்த வேண்டும்

## யாழ்.மாநகர சபை முதல்வர் ஆர்னோல்ட்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாநகர சபையின் உறுப்பினர்கள் நாகரிகமற்ற செயல்களில் ஈடுபடுவதால் அவர்களை மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்த வேண்டுமென மாநர முதல்வர் இமானுவேல் ஆர்னோல்ட் குறிப்பிட்டுள்ளார்.

மாநகர சபையின் ஆறாவது அமர்வு மாநகர மாநாட்டு மண்டபத்தில் முதல்வர் இமானுவேல் ஆர்னோல்ட் தலைமையில் நேற்று மாலை நடைபெற்ற போதே ஆர்னோல்ட் மேற்கண்டவாறு தெரிவித்தார்.


இதன்போது சபையின் உறுப்பினர் வி.மணிவண்ணன் கொண்டு வந்த பிரேரணையொன்று தொடர்பான விவாதத்தின் போது உறுப்பினர்கள் தமது மேசைகளில் தட்டி ஆரவாரம் செய்திருந்தனர். உறுப்பினர்களின் இத்தகைய செயலை எச்சரித்த முதல்வர் அவர்களுக்கு அறிவுரைகளையும் வழங்கியிருந்தார்.

அதாவது சபை அமர்வு நடைபெறுகின்ற போது உறுப்பினர்கள் தமது கருத்துக்களைத் தெரிவிப்பார்கள். அவர்கள் உரத்த குரலிலும் மெதுவான குரலிலும் உரையாற்றுவார்கள். அதனை வைத்து சக உறுப்பினர்களாக இருக்கின்றவர்கள் இவ்வாறு மேசைகளில் தட்டுவது நாகரிகமற்ற செயல் என்றார்.

அவ்வாறு தட்டுவதனால் எதனை நீங்கள் சாதித்துள்ளீர்கள் என்று பார்க்க வேண்டும். நீங்கள் அனைவரும் மக்கள் பிரதிநிதிகள் என்பதை மறந்து விடாதீர்கள். ஏனெனில் உங்களைத் தெரிவு செய்த மக்கள் நீங்கள் செய்கின்ற அத்தனை விடயங்களையும் பார்த்துக் கொண்டு தான் இருக்கின்றனர். ஆகவே உங்களது இத்தகைய செயற்பாடுகள் தொடர்பில் மருத்துவப் பரிசோதனைக்குத் தான் உட்படுத்த வேண்டும் என மேலும் தெரிவித்தார். (ம-4)

# மரண அறிவித்தல்

## கணபதிப்பிள்ளை சந்தானகோபால்



நல்லூரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை சந்தானகோபால் நேற்று 2018.06.25ஆம் திகதி திங்கட்கிழமை சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லப்பா கணபதிப்பிள்ளை-அம்மாப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும், சிறிவாலாம்பிகாதேவியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற சிறீநிவாசகம் (பரியாரியார்)-பூரணம் தம்பதியினரின் அருமை மருமகனும், பிறேமச்சந்திரன் (லண்டன்), பிரமிளா, றஞ்சினி ஆகியோரின் அன்புத்தந்தையும், தர்சினி, சதாசிவம், செல்வகுமார் (Halo Trust) ஆகியோரின் அன்பு மாமனாரும், மீரா, மிதுரா, அபிடன், திபிகன் ஆகியோரின் ஆசைப்பேரனும், காலஞ்சென்ற சட்டநாதன், தெய்வேந்திரம், முத்துலட்சுமி மற்றும் குலநாயகியம்மா (அவுஸ்திரேலியா), தனபாக்கியலட்சுமி, நல்லநாதன், காலஞ்சென்ற கௌரி ஆகியோரின் அன்பு சகோதரரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று 2018.06.26ஆந் திகதி செவ்வாய்க்கிழமை இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக பிற்பகல் 4 மணியளவில் செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**77, அரச வீதி, நல்லூர்.** **தகவல்:**
T.P:0774926401 / 0773436321 (4687) **குடும்பத்தினர்**

## டிப்பர் விபத்து;...

ட்டான் சந்தியில் வீதியில் பயணித்த டிப்பர் வாகனத்துடன் மோதுண்டு படுகாயமடைந்த இளைஞன், 6 நாட்களின் பின் சிகிச்சை பலனின்றி நேற்று உயிரிழந்தார்.

ஒட்டுசுட்டானைச் சேர்ந்த செங்கோள் அலேக்ஸ் (வயது 21) என்ற இளைஞனே இவ்வாறு உயிரிழந்தார்.

முல்லைத்தீவு, ஒட்டுசுட்டான் சந்தியில் கடந்த 19ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை இந்த விபத்து இடம்பெற்றது.

இளைஞன் மோட்டார் சைக்கிளை வேகமாகச் செலுத்தி வந்து முன்னால் சென்ற டிப்பர் வாகனத்துடன் மோதுண்டார் என்று பொலிஸாரால் தெரிவிக்கப்பட்டது.

மோட்டார் சைக்கிள் பெரும் சேதங்களுக்குள்ளாகியுள்ளது. படுகாயமடைந்த இளைஞன் ஆபத்தான நிலையில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்தார். எனினும் 6 நாட்கள் சிகிச்சையின் பின் இளைஞன் நேற்று உயிரிழந்தார் என்று மருத்துவர்களால் அறிக்கையிடப்பட்டது.

சம்பவம் தொடர்பான இறப்பு விசாரணைகளை யாழ்.போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டிருந்தார். (ம-9)

## தீர்வு கிடைக்கும்...

எனினும் தபால் ஊழியர்களின் கோரிக்கைகளுக்கான தீர்வு இன்று வழங்கப்படும் என தபால்துறை அமைச்சர் ஏ.எச்.எம். ஹலீம் தெரிவித்தார்.

பதவி உயர்வு, நிரந்தர நியமனம் மற்றும் அரச நிர்வாக சுற்றறிக்கையை முழுமையாக நடைமுறைப்படுத்தல் உள்ளிட்ட கோரிக்கைகளை முன்வைத்து கடந்த 12ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தொடக்கம் மத்திய விநியோகப் பகுதி உட்பட தபால் திணைக்கள ஊழியர்கள் 24 ஆயிரம் பேர் நாடு முழுவதும் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

அவர்களின் தொடர் போராட்டத்தின் 15 ஆவது நாளான நேற்று தபால் அமைச்சுக்கு முன்பாக போராட்டம் நடத்தப்பட்டது.

அவர்களின் இந்தப் போராட்டத்துக்கு ஆசிரியர் சங்கம், அதிபர் சங்கம் மற்றும் துறைமுக அதிகார சபை தொழிற்சங்கம் என்பன ஆதரவளித்து போராட்டத்தில் இணைந்து கொண்டன. (ம)

## கிளைமோர் மீட்...

மற்றுமொரு சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுவந்த குறித்த சந்தேகநபர் வைத்தியசாலையிலிருந்து வெளியேறிய போது, வைத்தியசாலை வளாகத்தில் வைத்து நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார்.

கிளிநொச்சி திருவையாறு பகுதியை சேர்ந்த இவர், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு புத்துயிர் ஊட்ட முயற்சித்த குற்றச்சாட்டில் ஏற்கெனவே கைது செய்யப்பட்டு விடுதலை செய்யப்பட்டவர் என்பதும் சுட்டிக்காட்டத்தக்கது.

நேற்று முன்தினம் இடம்பெற்ற கைது சம்பவத்தையடுத்து, குறித்த சம்பவத்துடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் கைதானவர்களின் எண்ணிக்கை ஆறாக அதிகரித்துள்ளது.

அத்துடன், சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகள் தொடர்ந்து வருகின்ற நிலையில், மேலும் பல கைதுகள் இடம்பெற வாய்ப்புள்ளதாக பொலிஸ் தரப்பு தகவல்கள் வெளியாகியுள்ளன.

முல்லைத்தீவு- ஒட்டுசுட்டான், பேராறு பகுதியில் கடந்த வெள்ளிக்கிழமை முச்சக்கர வண்டியொன்றை சோதனையிட்டபோது 20 கிலோ கிளைமோர் குண்டு, ரிமோட்கள், புலிக்கொடிகள் மற்றும் புலிகளின் சீருடைகள் ஆகியவற்றை பொலிஸார் கைப்பற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம)

## மேலும் நால்வர்...

மேலும் 4 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கிளிநொச்சி, அம்பாள்குளம் பகுதியில் மக்கள் குடியிருப்புக்குள் புகுந்த சிறுத்தை, பத்துக்கும் மேற்பட்டவர்களைத் தாக்கியது. அதில் வன ஜீவராசிகள் திணைக்கள உத்தியோகத்தர் ஒருவரும் அடங்குவார். இந்தச் சம்பவம் கடந்த வியாழக்கிழமை இடம் பெற்றது.

சிறுத்தையை உயிருடன் மீட்கும் பணிக்கு இடையூறு விளைவித்தனர், அரிய வகை வன விலங்கை துன்புறுத்தி கொலை செய்தனர் என்ற குற்றச்சாட்டில் காணொளி ஆதாரத்தை வைத்து வனஜீவராசிகள் திணைக்களத்தால் கிளிநொச்சி நீதிவான் நீதிமன்றில் கடந்த வெள்ளிக்கிழமை வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

அந்தக் காணொளியில் உள்ளவாறு சிறுத்தையை அடித்துக் கொன்றவர்களைக் கைது செய்யுமாறு நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது. நீதிமன்றின் உத்தரவில் சந்தேகநபர்கள் இருவர் கிளிநொச்சி பொலிஸாரால் கைது செய்யப்பட்டிருந்தனர்.

சந்தேகநபர்கள் இருவரையும் எதிர்வரும் 29ஆம் திகதி வெள்ளிக்கிழமைவரை விளக்கமறியலில் வைக்க நீதிவான் உத்தரவிட்டார்.

இந்தநிலையில் மேலும் 4 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (ம)

## அரசுக்கு அழுத்த...

மேற்கண்டவாறு கூறினார்.

அது இது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டிலுள்ள ஒன்பது மாகாணங்களில் தற்போது வடமத்திய, கிழக்கு மற்றும் சப்ரகமுவ மாகாண சபைகளின் பதவிக்காலம் நிறைவடைந்துள்ளது. இதன்படி கடந்த பத்து மாத காலமாக அம் மாகாண சபைகள் செயற்பாட்டில் இல்லை.

மேலும் இவ் வருடம் செப்டெம்பர் மாதமளவில் வடக்கு, வடமேல் மற்றும் மத்திய ஆகிய மூன்று மாகாண சபைகளின் பதவிக் காலம் நிறைவடைந்துவிடும்.

எனவே அடுத்த வருடம் ஜனாதிபதித் தேர்தல் நடைபெறும் காலப்பகுதியில் மாகாண சபைகளின் பதவிக்காலம் நிறைவடைந்து இரு வருடங்களைத் தாண்டும். அவ்வாறெனின் குறித்த மாகாண சபைகள் இரு வருட காலம் செயற்பாட்டில் இல்லை. இரு வருட காலம் மாகாண சபைகள் செயற்பாட்டில் இல்லாமல் அம் மாகாணங்களை நிர்வகிக்க முடியுமாயின் எதற்காக மாகாண சபை முறையை அவசியம் என்கின்ற பிரச்சினை எழும்.

மேலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் எதிர்க்கட்சித் தலைவரும் தமிழ் மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளுக்கு எதிராகவே செயற்படுகின்றனர். அம்மக்களின் உரிமைகளைப் பாதுகாப்பது தொடர்பில் கவனம் செலுத்துவதாக இல்லை. மாகாண சபைத் தேர்தலை நடத்துமாறு அவர்கள் அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுப்பதில்லை. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் அதன் தலைவர் இரா.சம்பந்தனும் நல்லாட்சி அரசாங்கத்தை எவ்வாறாவது முன்னெடுத்துச் செல்வது என்பதையே எதிர்பார்க்கின்றனர்.

எனவே மாகாண சபைத் தேர்தல் நடத்துமாறுகோரி அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுக்கும் வகையில் எதிர்வரும் ஜூலை மாத நடுப்பகுதியிலிருந்து நாடு தழுவிய ரீதியில் கூட்டு எதிரணியினர் பாரிய ஆர்ப்பாட்டமொன்றை நடத்துவதற்கு தீர்மானித்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (ம)

## உழவு இயந்திரத்...

மாணவன் பறவை காவடி வந்த உழவு இயந்திரத்தின் பின்னால் உள்ள பெட்டியில் இருந்து பயணம்செய்துள்ளார்.

பின்னர் அதில் இருந்து இறங்கி மோட்டார் சைக்கிளில் செல்வதற்காக உழவு இயந்திர பெட்டியின் கயிற்றில் பிடித்து கீழே இறங்கியுள்ளார். அப்போது கால் தவறி உழவு இயந்திர சில்லினுள் அகப்பட்டுள்ளார்.

சம்பவ இடத்திலேயே குறித்த மாணவன் தலை நசியுண்டு பரிதாபமாக உயிரிழந்துள்ளான். இது தொடர்பான மரண விசாரணையை யாழ் போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டிருந்தார். (ம-9)

## தேர்தலில் போட்டி...

தேர்தலில் போட்டியிடுவதற்கான அனுமதியை முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தனக்கு இன்னும் வழங்கவில்லையென, முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் கோத்தபாய ராஜபக்ஷ போட்டியிடுவாரா இல்லையா என்ற விடயம் அரசியல் களத்தில் பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது. இந்நிலையில், நேற்று திங்கட்கிழமை காலை நிதிக் குற்ற தடுப்புப் பிரிவில் வாக்குமூலம் வழங்கிய பின்னர் வெளியேறிய கோத்தபாய ராஜபக்ஷவிடம் ஊடகவியலாளர்கள் இதுபற்றி கேள்வியெழுப்பினர். அதற்கு பதிலளித்த போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

மேலும், தமது அமெரிக்க குடியுரிமையை நீக்குவது தொடர்பில் எந்த தீர்மானமும் எடுக்கப்படவில்லையெனக் குறிப்பிட்ட கோத்தபாய ராஜபக்ஷ, ஜனாதிபதி வேட்பாளராக போட்டியிடுமாறு மகிந்த ராஜபக்ஷ அறிவுறுத்தும் பட்சத்தில் அதனை நீக்கிக் கொள்ள தயாரென்றும் குறிப்பிட்டார். (ம)

## 6வயது பாடசாலை...

கையில்,

குறித்த மாணவியின் பெற்றோர் கூலி வேலை செய்து வருகின்றனர். நேற்றைய தினம் வேலைநிமித்தம் அவர்கள் வெளியே சென்றுள்ளனர். இந்த சிறுமியும் சிறுமியின் சகோதரர்களும் பாடசாலைக்கு சென்றுள்ளனர்.

குறித்த சிறுமி நேற்று பாடசாலை முடிந்து 1.30 மணிக்கு வீட்டுக்கு வந்துள்ளார். சிறுமியின் புத்தகப்பை வீட்டில் காணப்பட்டுள்ளது.

சிறிது நேரத்தின் பின்னர் வீட்டுக்கு வந்த பெற்றோர் சிறுமியை காணவில்லை என தேடியுள்ளனர். நேரம் செல்ல செல்ல சிறுமியை பற்றி தகவல் கிடைக்காத காரணத்தினால் அயலவர்களின் உதவியுடன் தேடுதல் மேற்கொண்டுள்ளனர்.

அப்போது சிறுமியின் வீட்டில் இருந்து 200 மீற்றர் தொலைவில் உள்ள கிணற்றில் சிறுமி உள்ளாடையுடன் சடலமாக மிதப்பதை கண்டுள்ளனர். அயலவர்களால் உடனடியாக சிறுமி கிணற்றிலிருந்து மீட்கப்பட்டதுடன் வட்டுக்கோட்டை பொலிஸாருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது.

சம்பவ இடத்துக்கு உடனடியாக வந்த பொலிஸார் சடலத்தை பார்வையிட்டதுடன் விசாரணைகளை மேற்கொண்டனர். அத்துடன் தடயப்பொருட்களையும் சேகரித்தனர்.

குறித்த சிறுமியின் சீருடை காணாமல் போயுள்ளதுடன் சிறுமி சித்திரவதை செய்யப்பட்டு கழுத்து நெரித்துக் கொலை செய்யப்பட்டமைக்கான அடையாளங்கள் உடலில் காணப்பட்டது. கழுத்து மற்றும் நெற்றி பகுதியில் காயங்கள் காணப்படுவதுடன் சிறுமியின் காதில் இருந்த தோடு களவாடப்பட்டுள்ளது.

சம்பவ இடத்துக்கு நேரடியாக சென்று விசாரணைகள் மேற்கொண்ட மல்லாகம் நீதவான் நீதிமன்ற நீதவான் ஏ.ஏ.ஆனந்தராஜா, சிறுமியின் சடலத்தை உடற்கூற்று பரிசோதனைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்குமாறு உத்தரவிட்டார்.

சடலம் உடற்கூற்றுபரிசோதனைக்காக யாழ் போதனாவைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

சிறுமி கொலை செய்யப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ம-9)

## புலிகளின் ஆயுத...

இராமேஸ்வரத்தை அடுத்துள்ள தங்கச்சி மடம் அந்தோனியார்புரம் பகுதியில் மீனவர் ஒருவர் தனது வீட்டில் நேற்று மாலை கழிவு நீர் குழி வெட்டியுள்ளார். அப்போது சிதைந்த நிலையில் சுமார் 22 பெட்டிகளை மீட்டுள்ளார்.

சந்தேகத்துக்கிடமான முறையில் குறித்த பெட்டிகள் காணப்பட்டதால் குறித்த மீனவர் தங்கச்சிமடம் பொலிஸ் நிலையத்துக்கு தகவல் கொடுத்துள்ளார். இதனையடுத்து சம்பவ இடத்திற்கு வந்த பொலிஸார் 22 பெட்டிகளையும் திறந்து பார்த்துள்ளனர்.

அதில் துப்பாக்கி குண்டுகள் துருப்பிடித்த நிலையில் இருந்துள்ளது. 400 ராக்கெட் லோஞ்சர் குண்டுகள், 4ஆயிரம் லைட் மிஷின் கன் (எல்.எம்.ஜி) தோட்டாக்கள், 5 கை குண்டுகள், 15 கண்ணி வெடி குண்டுகள் என்பன இதுவரை மீட்கப்பட்டுள்ளன.

அந்த குண்டுகள் அனைத்தும் சுமார் 8 அல்லது 10 வருடங்களுக்கு முன் புதைத்து வைக்கப்பட்டிருக்க வாய்ப்புள்ளதாகவும், இவற்றை விடுதலைபுலிகள் அமைப்பைச் சேர்ந்தவர்கள் பயன்படுத்திருக்கலாம் என பொலிஸ் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்

மேலும் இந்த பகுதியில் மேலும் ஆயுதங்கள் புதைக்கப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகத்தின் பேரில் ஜேசிபி இயந்திரத்தின் உதவியுடன் சுற்றுப்பகுதியில் தேடுதல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. அத்துடன் இது குறித்து தமிழக பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ம-9-281)

## 4பேர் விசாரணை...

செல்லப்பட்டுள்ளனர். சுழிபுரம் - காட்டுப் புலம் பகுதியில் ஆறு வயது சிறுமி ஒருவர் கழுத்து மற்றும் நெற்றி பகுதியில் காயங்களுடன் கிணறு ஒன்றில் இருந்து நேற்று மாலை சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

குறித்த சிறுமி கொலை செய்யப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகத்தின் பேரில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

இந்த நிலையில் குறித்த பகுதியில் சந்தேகத்துக்கு இடமான முறையில் நடமாடினார்கள் என ஊர்மக்களால் தெரிவிக்கப்பட்ட கருத்துக்கமைவாக 4 பேர் பொலிஸாரால் விசாரணைக்காக அழைத்து செல்லப்பட்டுள்ளனர்.

நான்கு பேரையும் வட்டுக்கோட்டை பொலிஸார் தடுத்து வைத்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். (ம-9)

## பாவனையின்றி...

மையில் நேற்று நடைபெற்றது. இதன் போது மக்கள் பாவனையில்லாது கவனிப்பாரற்று காணப்படுகின்ற காணிகளில் இருக்கின்ற பற்றைகளால் ஏற்படுகின்ற நோய்த் தாக்கம் உட்பட பொது மக்களுக்கு பல்வேறு பாதிப்புக்கள் ஏற்படுவதாக சுட்டிக்காட்டப்பட்டது.

இதனையடுத்து அவ்வாறு காணப்படுகின்ற காணிகளை மாநகர சபை தற்காலிகமாக பொறுப்பெடுப்பதென சபையின் உறுப்பினர்கள் அனைவரதும் ஆதரவுடன் தீர்மானிக்கப்பட்டு அதற்குரிய நடவடிக்கைகளை தொடர்வதென்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் மாநகரத்தை தூய்மையாக்கி அழகுபடுத்தும் நடவடிக்கைகளை முன்னெடுப்பதென்றும் அவ்வாறு தூய்மைப்படுத்தும் செயற்பாடுகள் முன்னெடுக்கின்ற போது நகரத்தின் பசுமை அழகையும் கவனத்தில் கொள்ள வேண்டுமென்றும் வலியுறுத்தப்பட்டுள்ளது. (ம-4)

மணமகள் தேவை
1985.08.30 இல் பிறந்த பிரான்ஸ் நாட்டை வதிவிடமாக கொண்ட மணமகனிற்கு (PR உண்டு) மணமகள் தேவை.
T.P:-075 265 1172

விரைவு பொதிகள் சேவை
விசேட விலை குறைப்பு

UK- 550 /=Kg
கனடா-900 /=Kg
ஜேர்மனி- 700 /=Kg
நெதர்லாந்து-700 /=Kg
DELIVERY IN 3-5 DAYS
0768226240
● மானிப்பாய் ● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● சாவகச்சேரி ● நெல்லியடி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை
V2 TRAVELS

வேலையாள் தேவை
கைதடிச் சந்தியில் அமைந்துள்ள புத்தகசாலைக்கு வேலையாள் தேவை.
தொடர்புகளுக்கு:
077 904 0426

பணிப்பெண் தேவை
யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த, மலேசியாவில் வசிக்கும் வயோதிபப் பெண்ணைப் பராமரிப்பதற்கு பணிப்பெண் தேவை. கடவுச்சீட்டு இருப்பவர் விரும்பத்தக்கது. (பயணச் செலவுகள் இலவசம்)
தொடர்பு:
077 739 9911

கறையான் தொல்லையா?

கட்டடங்களில் கறையான்களால் ஏற்படும் அல்லது ஏற்பட்டிருக்கும் பாதிப்புக்களை உத்தரவாதத்துடன் இல்லாதொழித்து தரப்படும்
(5 Years- 10 Years Warranty)
ஆலோசனையும் மதிப்பீடும் இலவசமாக வழங்கப்படும்.
தொடர்பு: ந.ரூபகாந்த்
0771515897, 0703312299, 0214993200

இறுதிக் கருத்தரங்கு
அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கான
EB Exam
நாளை புதன்
9am - 4pm
கோலாசிற்றி
234, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
0778435224

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 26.06.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.